Not for sale

நவம்பர் - டிசம்பர் 2017

தமிழாக்கம்

# The Herald

## of Christ's Kingdom



## நம்முடைய ஆசீர்வாதங்களை எண்ணிப்பார்த்தல்


நன்றி ஏறெடுத்தல் • நன்றி செலுத்துகிறோமோ அல்லது முறுமுறுக்கிறோமோ?

தாங்கொண்ணா துயரத்துடன் மகிழ்தல் • என் கிருபை உனக்கு போதும்

பிணைக்கப்படும் பந்தம் ஆசீர்வதிக்கப்படும் • உங்கள் ஆசீர்வாதங்களை எண்ணுங்கள்

நன்றி ஏறெடுத்தலுக்கு ஓர் சங்கீதம்

நம்முடைய ஆசீர்வாதங்களை எண்ணிப்பார்த்தல்

# ஆதியிலே



ஜான்சன் ஆட்மேன் எழுதின ஒரு கீர்த்தனையே (Count Your Blessings ) இந்த பிரதி எழுதப்படுவதற்கு ஊக்கமளித்தது. சோதனையின் மத்தியில் உள்ள நம்முடைய வாழ்க்கையில், நம்முடைய உபத்திரவங்களை, ஜெபத்தின் வழியாக ஆண்டவரிடம் கொண்டு செல்வதற்கும், எல்லாவற்றிற்கும் தேவனே மேலானவர் என்ற நாம் நினைவுகூறுவதற்கும் இது நம்மை ஊக்குவிக்கிறது. "நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் பிதாவாகிய தேவனுக்கு ஸ்தோத்திரம்; அவர் கிறிஸ்துவுக்குள் உன்னதங்களில் ஆவிக்குரிய சகல ஆசீர்வாதத்தினாலும் நம்மை ஆசீர்வதித்திருக்கிறார்." (எபேசியர் 1:3) அவர் "தேவனால் எங்களுக்கு அருளப்படுகிற ஆறுதலினாலே, எந்த உபத்திரவத்திலாகிலும் அகப்படுகிறவர்களுக்கு நாங்கள் ஆறுதல்செய்யத் திராணியுள்ளவர்களாகும்படி, எங்களுக்கு வரும் சகல உபத்திரவங்களிலேயும் அவரே எங்களுக்கு ஆறுதல்செய்கிறவர்." (11கொரிந்தியர் 1:4)பல தனிப்பட்ட சாட்சிகளின், விசேஷித்த சோதனைகளையும், அவைகளை கையாளுவதற்கு தேவன் சகோதரர்களுக்கு கொடுத்த பலத்தையும் இந்த பிரதி மறுபடியும் விவரிக்கிறது.

அமெரிக்காவின் வரலாற்றில் 1863ம் வருடத்திலிருந்து நன்றி ஏறெடுக்கும் நாளின் (Thanks Giving Day) கொண்டாட்டத்தை பற்றிய வசனத்தையும்நமக்கு அதனுடைய ஆவிக்குரிய பயன்பாட்டையும்"நன்றி ஏறெடுத்தல்" என்ற தலைப்புவிவரிக்கிறது. ஒரு விசேஷித்த ஜனங்களாக, தேவனுடைய சார்பாக வைக்கப்பட்டிருந்த இஸ்ரயேல் ஜாதிக்கு கொடுக்கப்பட்ட சில ஆசீர்வாதங்களின் சிறப்பும்சத்தை "நன்றி ஏறெடுத்தல் அல்லது முறுமுறுப்பா ?" என்ற தலைப்பு விவரிக்கிறது. அந்த ஜாதி எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்திற்குள் பிரவேசிக்கும் வரையில் அவர்களின் பயணத்தை ஆராயும் போது, தேவனுடைய கண்களில் அவர்கள் பெற்றிருந்த விசேஷித்த நிலையை அவர்கள் உணராதிருந்தார்கள் என்பது தெளிவாகிறது. அந்த ஜாதி பெற்ற நன்மைகளுக்காக நன்றியறிதலான ஜெபங்களை ஏறெடுப்பதற்கு பதிலாக அவர்கள் ஓயாமல் முறுமுறுத்தார்கள். "தாங்கொண்ணா வேதனையில் மகிழ்ச்சி" என்ற தலைப்பே, இந்த பிரதியில் கொடுக்கப்பட்டிருக்கும் பல சாட்சிகளின் முதலாவது ஓர் பண்ணை விபத்தில் தங்களது ஆறு வயது மகனான சேசை பறிகொடுத்த ஓர் இளைய சகோதரி மற்றும் அவர் குடும்பத்தாரின் சோதனையைப் பற்றி பார்த்த பின்பு இது தொடர்ந்து வரும். அந்நாளில் அக்குடும்பத்தை ஆட்கொண்ட இருளில் ஓர் ஒளி தேவனிடத்திலிருந்து ஒளிர்ந்தது. இதேப்போல் ஒத்த அனுபவத்திற்குள்ளாக செல்லும் பலருக்கு இது உதவும் என்கிற நம்பிக்கையோடு இச்சாட்சியானது இங்கு பகிரப்பட்டுள்ளது. பல சகோதரர்கள் உடல் ரீதியான சோதனைகளில் அகப்படுகிறார்கள். "என் கிருபை உனக்கு போதும்" என்ற தலைப்பு, பெரும்பாலான தன்னுடைய இளவயதில், நீண்ட நாட்களாக உடல் ரீதியான பிரச்சனைகளை சகித்து தேவனுடைய பலத்தின் மேல், எவ்வாறு சார்ந்திருக்க வேண்டும் என்பதை கற்று கொண்ட ஒரு சகோதரியின் சாட்சியாகும். இதே போன்ற அனுபவங்களை கடக்கக்கூடியவர்களாக வாழ்நாள் முழுவதும் துயரப்பட்ட அப்போஸ்தலனாகிய பவுலுக்கு கொடுக்கப்பட்ட வாக்குத்தத்தத்தை நினைவுக்கூறும்படிக்கு இந்த கட்டுரை அவர்களை ஊக்குவிக்கிறது.

" பிணைக்கப்படும் பந்தம் ஆசீர்வதிக்கப்படும் "என்ற தலைப்பு ஜான் பாவ்செட்டினால் எழுதப்பட்ட அதே பேருள்ள கீர்த்தனையிலிருந்து உள்ளுயிரூட்டுகிறது. ஒரு எளிய பாஸ்டர், பாவ்செட்டிற்கு, ஒரு பணக்கார சபையில் ஒரு பதவி கொடுக்கப்பட்டது. ஆயினும், அவருடைய ஐக்கியத்தின் மேன்மையான பக்தி மற்றும் அவர்களை கட்டின கட்டு, அவருடைய இலட்சியத்தையும், மீதியுள்ளவைகளையும் தியாகம் செய்ய கட்டாயப்படுத்தியது. அதேபோல், நாமும் தேவ ஜனங்களுக்கு ஊழியம் செய்யும்படிக்கு நம்முடைய பூமிக்குரிய நம்பிக்கைகள் மற்றும் இலட்சியங்களை பலிசெலுத்துவதற்கு அழைக்கப்பட்டிருக்கிறோம்.

"உங்கள் ஆசீர்வாதங்களை எண்ணுங்கள்" என்ற இறுதி சாட்சி, ஒரு குடும்பம் சந்தித்த சோதனைகளை (மனைவிக்கும், தாய்க்கும் முயன்று பெற்ற மூளை சிதைவுக்குபின்) பற்றி கூறுகிறது. இந்த அனுபவத்திலிருந்து பாடம், சோதனை நேரங்களை சந்திக்கக்கூடியவர்கள், தங்களுடைய ஆசீர்வாதங்களை "ஒன்றுக்குபின் ஒன்றாக" எண்ணுவதற்கு ஊக்குவிக்கிறது.

அனைவருக்கும் ஆசீர்வதிக்கப்பட்ட நன்றியறிதலுக்காக வேண்டிகொள்கிறோம் !

## நவம்பர் - டிசம்பர் 2017

**நன்றி ஏறெடுத்தல்** 40
நன்றியறிதல்

**நன்றி செலுத்துகிறோமா அல்லது முறுமுறுக்கிறோமா?** 44
சிறந்த வழி

**தாங்கொண்ணா துயரத்துடன் மகிழ்தல்** 48
ஆழ்ந்த இழப்பு

**என்கிருபை உனக்கு போதும்** 56
வலி

**பிணைக்கப்படும் பந்தம் ஆசீர்வதிக்கப்படும்** 60
ஐக்கியம்

**உங்கள் ஆசீர்வாதங்களை எண்ணுங்கள்** 66
சோதனையின் மத்தியில் ஆசீர்வாதங்கள்

**நன்றி ஏறெடுத்தலுக்கு ஓர் சங்கீதம்** 71
தாவீதின் சங்கீதம்

**இந்நாளின் தீர்க்கதரிசனம்** 73
அணு ஆயுதபோர் அச்சுறுத்தல்

நன்றியறிதல்

# நன்றி ஏறெடுத்தல்



"அல்லேலூயா, கர்த்தருக்குப் புதுப்பாட்டைப் பாடுங்கள்; பரிசுத்தவான்களின் சபையிலே அவருடைய துதி விளங்குவதாக." (சங்கீதம் 149:1)

Kent and Sean Hruphreys

"நன்றி ஏறெடுத்தல்" என்ற வார்த்தைக்கு பரந்த விளக்கம் உள்ளது. மாதிரியாக, ஒருவர் இந்த வார்த்தையை கேட்கும் போது, அவர் ஒரு மேஜை நிறைய பெருவிருந்து, சுவையுள்ள போஜன பதார்த்தங்களினால் நிரம்பி வழிவதையும், அதை சுற்றி பசியுள்ளவர்கள் ஆவலோடு இருப்பதையும் எதிர்ப்பார்ப்பார். அமெரிக்காவில், வருடந்தோறும் கொண்டாடப்படும், "நன்றி ஏறெடுத்தல்", நவம்பர் மாதம் நடைபெறும். இந்த நேரத்தில் குடும்பங்கள் தூரத்திலிருந்தும் விசாலமான இடங்களிலிருந்தும் வந்து ஒருவரோடு ஒருவர் நட்புறவு கொள்ளவும், அவர்களுக்கு முன் வைக்கப்பட்டிருக்கும் ஏராளமான உணவு பதார்த்தங்களுக்காக நன்றிகளை ஏறெடுக்கவும் ஒருமித்து கூடுவார்கள். இந்த பாரம்பரியம் அமெரிக்காவில் 1632ம் வருடம் துவங்கியது. இது முதன் முதலாக அக்டோபர் மாதத்தில் பிளைமவுத் காலனி யாத்திரீகர்களால் (Plymouth Colony Piligrims)மாஸா சோயிட் இந்திய பழங்குடியின உறுப்பினர்களின் உதவியைப் பாராட்டும் விதமாக, அவர்களின் முதலாம் அறுவடையின் கொண்டாட்டத்தை கொண்டாடினார்கள். அன்றிலிருந்து இந்த கொண்டாட்டம் இப்போதும் அமெரிக்காவில் நடைபெற்று வருகிறது.

ஆயினும், இந்த வல்லமையுள்ள வார்த்தைக்கு இது ஒரு குறுகிய கண்ணோட்டமாகும். ஆண்டு தவறாது நடைபெறுகிற கொண்டாட்டத்தை காட்டிலும், ஆவிக்குரிய பயன்பாட்டிற்கு அதிகமாக தொடர்புடையதாக உள்ளது. இந்த வார்த்தைக்கு அநேக பயன்பாடுகள் உண்டு. இங்கு பல்வேறுபட்டவைகளை ஆராயலாம்.

"ஆமென்" என்ற பொதுவான வார்த்தை, நன்றி ஏறெடுத்தலோடு மிக நெருக்கமாக சம்மந்தப் பட்டுள்ளது. ஒரு வேளை உணவுக்கு முன் நன்றிகளை ஏறெடுத்தபின், அந்த போதகர் பொதுவாக அந்த ஜெபத்தை "ஆமென்" என்ற வார்த்தையோடு, சம்மந்தப்பட்டுள்ளது - அதாவது நன்றியறிதல் அல்லது கொடுக்கப்பட்டதற்கு நன்றி உணர்வோடு ஏற்றுகொள்ளுதல்.

நன்றிகளை ஏறெடுக்கும்போது, ஒரு பொருளை பெற்றுகொண்டதற்காக அந்த நபர் நன்றி உணர்வுகளை வெளிப்படுத்துவார். மத்தேயு 5ம் அதிகாரத்தில் இயேசு தம்முடைய சீஷர்களுக்கு ஒன்பது பாக்கியத்தை கொடுத்தார். தம்முடைய சீஷர்கள் யெகோவா தேவனுக்கு ஏற்புடையவர்களாக இருப்பதற்கு, தாங்கள் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்பதற்கான கட்டளைகளாக இவைகள் இருந்தன. இந்த பரலோகத்திற்குரிய கட்டளைகளை பின்பற்றுவதன் பலனாக கீழ்ப்படிதல் அல்லது நன்றி ஏறெடுத்தல் ஏற்படுகிறது.

நன்றி ஏறெடுத்தலின் மற்றொரு வழி நன்றியறிதலாகும். ஒருவர் உங்களுக்கு ஒரு கை கொடுத்தால் அல்லது ஒருவேளை நிதி உதவி அளித்தால், அந்த உதவிக்காக நீங்கள் நன்றியறிதல் உள்ளவர்களாக இருப்பீர்கள். நன்றியறிதல், நன்றி ஏறெடுத்தலின் மற்றொரு வடிவமாகும்.

நன்றி ஏறெடுத்தல், பல வடிவங்களில் வரலாம். இந்த சம்பவத்தில், ஆலயத்திற்குள் கொண்டு வரப்பட்ட உடன்படிக்கை பெட்டியோடு சம்பந்தப்பட்டுள்ளது. "ஆசாப், ஏமான், எதுத்தூனுடைய கூட்டத்தாரும், அவர்களுடைய குமாரர் சகோதரருடைய கூட்டத்தாருமாகிய பாடகரான லேவியரனைவரும் மெல்லிய புடவைகளைத் தரித்து, கைத்தாளங்களையும் தம்புருக்களையும் சுரமண்டலங்களையும் பிடித்துப் பலிபீடத்திற்குக் கிழக்கே நின்றார்கள்; அவர்களோடும் கூடப் பூரிகைகளை ஊதுகிற ஆசாரியர்கள் நூற்றிருபதுபேர் நின்றார்கள்.அவர்கள் ஒருமிக்கப் பூரிகைகளை ஊதி, ஏகசத்தமாயக்

கர்த்தரைத் துதித்து ஸ்தோத்திரித்துப் பாடினார்கள்; ஆசாரியர் பரிசுத்த ஸ்தலத்திலிருந்து புறப்படுகையிலும், பாடகர் பூரிகைகள் தாளங்கள் கீதவாத்தியங்களுடைய சத்தத்தைத் தொனிக்கப்பண்ணி, கர்த்தர் நல்லவர், அவர் கிருபை என்றுமுள்ளது என்று அவரை ஸ்தோத்திரிக்கையிலும், கர்த்தருடைய வீடாகிய தேவாலயம் மேகத்தினால் நிறையப்பட்டது."(11நாளா 5:12,13) இசை மற்றும் பயபக்தியோடு இவர்களின் நன்றியறிதலும், நன்றி ஏறெடுத்தலும் வெளிப்படுத்தப்பட்டது.

அன்புள்ள இருதயத்தை தெரிவித்தலே நன்றி ஏறெடுத்தலாகும். இதுவரையில் தெரிவித்திராத மிக சிறந்த நன்றி ஏறெடுத்தலின் அன்பின் உணர்வுகளை இந்த சங்கீதங்கள் தெரிவிக்கிறது. தாவீதினால் எழுதப்பட்ட சில சங்கீதங்களை கீழே காணலாம். இவைகள் தாவீதின் கனிவான இருதயத்தையும், நம்முடைய பரலோக பிதாவுக்கு ஏறெடுக்கக்கூடிய அவருடைய நன்றியறிதலையும் வெளிப்படுத்துகிறது.

*"உமது விரல்களின் கிரியையாகிய உம்முடைய வானங்களையும், நீர் ஸ்தாபித்த சந்திரனையும் நட்சத்திரங்களையும் நான் பார்க்கும்போது, மனுஷனை நீர் நினைக்கிறதற்கும், மனுஷகுமாரனை நீர் விசாரிக்கிறதற்கும் அவன் எம்மாத்திரம் என்கிறேன். நீர் அவனைத் தேவதூதரிலும் சற்று சிறியவனாக்கினீர்; மகிமையினாலும் கனத்தினாலும் அவனை முடிசூட்டினீர். " (சங்கீதம் 8:3-5)

*"கர்த்தாவே, என் முழு இருதயத்தோடும் உம்மைத் துதிப்பேன்; உம்முடைய அதிசயங்களையெல்லாம் விவரிப்பேன். உம்மில் மகிழ்ந்து களிகூருவேன்; உன்னதமானவரே, உமது நாமத்தைக் கீர்த்தனம்பண்ணுவேன்." (சங்கீதம் 9:1,2)

*"கர்த்தரைக் கெம்பீரமாய்ப் பாடி, நம்முடைய இரட்சணியக் கன்மலையைச் சங்கீர்த்தனம் பண்ணக்கடவோம் வாருங்கள். துதித்தலுடனே அவர் சந்நிதிக்கு முன்பாக வந்து, சங்கீதங்களால் அவரை ஆர்ப்பரித்துப் பாடக்கடவோம். கர்த்தரே மகா தேவனும், எல்லா தேவர்களுக்கும் மகாராஜனுமாயிருக்கிறார். பூமியின் ஆழங்கள் அவர் கையில் இருக்கிறது; பர்வதங்களின் உயரங்களும் அவருடையவைகள். சமுத்திரம் அவருடையது, அவரே அதை உண்டாக்கினார்; வெட்டாந்தரையையும் அவருடைய கரம் உருவாக்கிற்று. நம்மை உண்டாக்கின கர்த்தருக்கு முன்பாக நாம் பணிந்து குனிந்து முழங்காற்படியிடக்கடவோம் வாருங்கள்."(சங்கீதம் 95:1-6)

இந்த சங்கீதங்களில் தாவீது மிக அழகாக தன்னுடைய இருதயத்தின் நிலையை வெளிப்படுத்தினது போல நாம் வெளிப்படுத்த வேண்டும். நம்முடைய அன்றாட வாழ்க்கையில், நம்முடைய உடன் வேலைக்காரர்கள் மற்றும் நம்முடைய குடும்ப நபர்களுக்கு நன்றிகளை ஏறெடுப்பதற்கு பல வாய்ப்புகள் உள்ளது. ஒருவருக்கு நன்றி சொல்லுதல், ஒரு அற்புதமான உறவுக்கான ஒரு நீண்ட வழியை வகுக்கக்கூடியதாக உள்ளது. இது கொடுக்கக்கூடியவர்களின் முயற்சிகளுக்கும் கனிவுக்கும் தெரிவிக்கக்கூடிய ஒரு நல்லுணர்வாகும்!.

நம்முடைய பரலோக தந்தையிடம் நம்மை நாம் அர்ப்பணிக்கும் போது, நம்முடைய மொத்த வாழ்க்கையையும் அவருடைய பணிக்காக தத்தம் செய்ய விரும்புகிறேன் என்று நம்முடைய இருதயத்திலிருந்து கூறுகிறோம். மற்றும் இந்த நோக்கத்திற்காக, அவர் நம்மை அழைத்ததற்காக நாம் நன்றியுள்ளவர்களாக இருக்கிறோம்.

**இயேசுவின் மாதிரிகள்**

நம்முடைய ஆண்டவராம் இயேசுவும் அவருடைய சீஷர்களும் மேல் வீட்டு அறையில் கூடி கர்த்தருடைய இராவிருந்தை துவங்குவதற்குமுன், "அவர்கள் போஜனம்பண்ணுகையில், இயேசு அப்பத்தை எடுத்து, ஆசீர்வதித்து, அதைப் பிட்டு, சீஷர்களுக்குக் கொடுத்து: நீங்கள் வாங்கிப் புசியுங்கள், இது என்னுடைய சரீரமாயிருக்கிறது என்றார்." (மத்தேயு 26: 26)இயேசு மற்றும் அவருடைய சீஷர்கள் பெற்ற இந்த அனுபவத்தில், மிக ஆழமான அடையாள மொழி

பயன்படுத்தப்பட்டதை நாம் உணருகிறோம். ஆயினும், இனி அவர்கள் பெறக்கூடிய காரியங்களுக்காக நம்முடைய ஆண்டவரும் கூட நன்றிகளை ஏறெடுத்தார் என்ற நம்முடைய பாடத்தை சுட்டிக் காட்டுவதே குறிப்பாக உள்ளது.

"அவர் மறுபடியும் அவர்களை விட்டுப்போய், மூன்றாந்தரமும் அந்த வார்த்தைகளையே சொல்லி, ஜெபம்பண்ணினார்." (மத்தேயு 26:44) இந்த மாதிரியில் காண்பிக்கப்பட்டிருக்கிறபடி, ஜெபித்தல், நன்றி ஏறெடுத்தல் மற்றும் ஏற்றுகொள்ளுதல் ஒரே பொருளை உடையதாக உள்ளது. ஒரு முறை, சிறு பிள்ளைகள், இந்த ஆசிரியரோடு இணைந்து எப்போதும் "தயவு செய்து" மற்றும் "நன்றி" என்று கூறுவதற்கு வளர்க்கப்பட்டிருந்தார்கள். இது மூத்தவர்களுக்கு கொடுக்கப்படும் மரியாதையின் வடிவமாக இருந்தது. இந்நாளில், பொதுவாக, இப்படிப்பட்ட வார்த்தைகளை கேட்பதற்கு அரிதாக உள்ளது. இரக்கம் மற்றும் நல்ல பண்பாடுகள், கடந்த காலத்து காரியங்கள் போல் தோன்றுகிறது.

ஆதிகால சபையில், சபையின் ஒற்றுமையை குறித்த, பவுலின் எழுத்துக்களில் நன்றி ஏறெடுத்தலுக்கான ஒரு மாதிரியை நாம் காணலாம். "தேவனுடைய சித்தத்தினாலே இயேசு கிறிஸ்துவின் அப்போஸ்தலனாகும்படி அழைக்கப்பட்டவனாகிய பவுலும், சகோதரனாகிய சொஸ்தெனேயும், கொரிந்துவிலே கிறிஸ்து இயேசுவுக்குள் பரிசுத்தமாக்கப்பட்டவர்களாயும், பரிசுத்தவான்களாகும்படி அழைக்கப்பட்டவர்களாயுமிருக்கிற தேவனுடைய சபைக்கும், எங்களுக்கும் தங்களுக்கும் ஆண்டவராயிருக்கிற நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தை எங்கும் தொழுதுகொள்ளுகிற அனைவருக்கும் எழுதுகிறதாவது: நம்முடைய பிதாவாகிய தேவனாலும் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினாலும் உங்களுக்குக் கிருபையும் சமாதானமும் உண்டாவதாக. கிறிஸ்துவைப் பற்றிய சாட்சி உங்களுக்குள்ளே ஸ்திரப்பட்டபடியே, நீங்கள் இயேசுகிறிஸ்துவுக்குள்ளாய் எல்லா உபதேசத்திலும் எல்லா அறிவிலும், மற்றெல்லாவற்றிலும் சம்பூரணமுள்ளவர்களாக்கப்பட்டிருக்கிறபடியால்," (1கொரிந்தியர் 1:1-5)

இங்கு அப்போஸ்தலனாகிய பவுல், நன்றிகளை ஏறெடுப்பதன் மூலமாக அல்லது வழியாக பிதாவாகிய தேவனிடமிருந்து கிருபையை பெற்று கொண்டதை தெரிவிக்கிறார். ".." என்று கூறி இந்த உண்மையை வலியுருத்துகிறார்.

நாம் எப்போதும் நன்றிகளை ஏறெடுக்கும் நிலையில் இருக்கவேண்டும். 1கொரிந்தியர் 4:7 ம் வசனம் கூறுகிறபடி, நாம் பெற்றுள்ள அனைத்தும், நம்முடைய பிதாவாகிய தேவனால் நமக்கு கொடுக்கப்பட்டது. """ தற்செயலாக எதுவும் நடப்பதில்லை. நம்முடைய கிறிஸ்தவ நடத்தை கீழ்க்காணும் வசனங்களை பிரதிபலிக்க வேண்டும் "எப்பொழுதும் சந்தோஷமாயிருங்கள்.இடைவிடாமல் ஜெபம்பண்ணுங்கள். எல்லாவற்றிலேயும் ஸ்தோத்திரஞ் செய்யுங்கள்; அப்படிச் செய்வதே கிறிஸ்து இயேசுவுக்குள் உங்களைக் குறித்துத் தேவனுடைய சித்தமாயிருக்கிறது." (1தெசலோனிக்கேயர் 5: 16-18)

**தாவீதின் மாதிரி:**

இதே சிந்தைகளை தாவீதும் தெரிவிக்கிறார். "ஸ்தோத்திரபலிகளைச் செலுத்தி, அவருடைய கிரியைகளை ஆனந்த சத்தத்தோடே விவரிப்பார்களாக." (சங்கீதம் 107:22)

மீண்டுமாக, புது சிருஷ்டிகளாகிய நாம், நம்முடைய சிந்தையில் எப்போதும் முன்னிடத்தில் வைக்கக்கூடிய சிந்தைகளையும், நிலைகளையும் தாவீது தெரிவிக்கிறார். "கர்த்தர் எனக்குச் செய்த எல்லா உபகாரங்களுக்காகவும், அவருக்கு என்னத்தைச் செலுத்துவேன். இரட்சிப்பின் பாத்திரத்தை எடுத்துக்கொண்டு, கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொள்ளுவேன். நான் கர்த்தருக்குச் செய்த பொருத்தனைகளை அவருடைய ஜனங்களெல்லாருக்கு முன்பாகவும் செலுத்துவேன். கர்த்தருடைய பரிசுத்தவான்களின் மரணம் அவர் பார்வைக்கு அருமையானது. கர்த்தாவே, நான் உமது அடியேன்; நான் உமது அடியாளின் புத்திரனும், உமது

ஊழியக்காரனுமாயிருக்கிறேன்; என் கட்டுகளை அவிழ்த்துவிட்டீர்." (சங்கீதம் 116: 12-16)

தேவனிடம் மற்றும் ஒருவரோடு ஒருவரிடமும், தீர்வீதைப் போல மனமார்ந்த நல்லுணர்வுகளை பெற்றிருக்கவேண்டும். நம்முடைய பரலோக பிதாவை எந்த விதத்திலாவது பிரியப்படுத்த வேண்டும் என்று தாவீது எப்போதும் வகை தேடி கொண்டிருந்தார்.

இறுதியாக, சங்கீதம் 118ல் தேவனிடம் தாவீது கொண்டிருந்த முழுமையான விசுவாசத்தை இங்கு நாம் காண்கிறோம். நம்முடைய வாழ்க்கையிலும் இப்படிப்பட்ட விசுவாசம் பிரதிபலிக்க வேண்டும். "கர்த்தரின் வலதுகரம் உயர்ந்திருக்கிறது, கர்த்தரின் வலதுகரம் பராக்கிரமஞ்செய்யும். நான் சாவாமல், பிழைத்திருந்து, கர்த்தருடைய செய்கைகளை விவரிப்பேன். கர்த்தர் என்னை வெகுவாய்த்தண்டித்தும், என்னைச் சாவுக்கு ஒப்புக்கொடுக்கவில்லை. நீதியின் வாசல்களைத் திறவுங்கள்; நான் அவைகளுக்குள் பிரவேசித்துக் கர்த்தரைத் துதிப்பேன். கர்த்தரின் வாசல் இதுவே; நீதிமான்கள் இதற்குள் பிரவேசிப்பார்கள்.நீர் எனக்குச் செவிகொடுத்து, எனக்கு இரட்சிப்பாயிருந்தபடியால், நான் உம்மைத் துதிப்பேன்." (சங்கீதம் 118:16-21)

கிறிஸ்து இயேசுவுக்குள் பரம அழைப்பின் பந்தைய பொருளுக்காக ஓடக்கூடிய வருங்கால பரிசுத்தவான்களும் நன்றி ஏறெடுத்தலுக்கான நல்லுணர்வுகளை வெளிப்படுத்த வேண்டும். இது அவர்களின் சிந்தைகளிலும், இருதயங்களிலும் என்றென்றும் இருக்கவேண்டும். நம்முடைய பவுல் இம்மாதிரியான காரியத்தை கற்பிக்கிறார். "கர்த்தராகிய இயேசுவை எழுப்பினவர் எங்களையும் இயேசுவைக்கொண்டு எழுப்பி, உங்களுடனேகூடத் தமக்குமுன்பாக நிறுத்துவாரென்று அறிந்திருக்கிறோம்.தேவனுடைய மகிமை விளங்குவதற்கேதுவாகக் கிருபையானது அநேகருடைய ஸ்தோத்திரத்தினாலே பெருகும்படிக்கு, இவையெல்லாம் உங்கள்நிமித்தம் உண்டாயிருக்கிறது." (11கொரிந்தியர் 4:14,15)

இவ்வளவு முக்கியமாக இருப்பதற்கு என்ன காரணம் ? இதற்கான காரணம் என்னவெனில், நம்முடைய வாழ்க்கையில், நாம் பாதுகாப்பற்ற மற்றும் மகிழ்ச்சியற்ற மற்றும் குறைவான நன்றியுள்ள உணர்வுகளை கொண்ட நொடிகளை பெற்றுள்ளோம். இப்படிப்பட்ட இந்த வாழ்க்கை பிதாவினிடம் வெளிப்படையாக ஒப்புகொடுப்பது எவ்வளவு முக்கியம் என்று அப்போஸ்தலனாகிய பவுல் விவரிக்க துவங்கினார். "நீங்கள் ஒன்றுக்குங் கவலைப்படாமல், எல்லாவற்றையுங்குறித்து உங்கள் விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோடே கூடிய ஜெபத்தினாலும் வேண்டுதலினாலும் தெரியப்படுத்துங்கள்.அப்பொழுது, எல்லாப் புத்திக்கும் மேலான தேவசமாதானம் உங்கள் இருதயங்களையும் உங்கள் சிந்தைகளையும் கிறிஸ்து இயேசுவுக்குள்ளாகக் காத்துக்கொள்ளும்." (பிலிப்பியர் 4:6,7)

நன்றி ஏறெடுத்தலுக்கு, ஆசீர்வாதம் என்றும் அர்த்தம் கொள்ளலாம் ! நாம் வாழ்க்கையின் பயணிக்கும் போது, எந்த விதமான சூழ்நிலையானாலும் சரி, நம்முடைய பரலோக பிதா, நம்முடைய மொத்த வாழ்க்கையையும் கட்டுபாட்டில் வைத்திருப்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். "எல்லாவற்றிலேயும் ஸ்தோத்திரஞ் செய்யுங்கள்; அப்படிச் செய்வதே கிறிஸ்து இயேசுவுக்குள் உங்களைக் குறித்து தேவனுடைய சித்தமாயிருக்கிறது." (1தெசலோனிக்கேயர் 5:18)

**இன்னும் சிறந்த வழி**



# நன்றி செலுத்துகிறோமா அல்லது முறுமுறுக்கிறோமா?

"எல்லாவற்றிலேயும் ஸ்தோத்திரஞ் செய்யுங்கள்; அப்படிச் செய்வதே கிறிஸ்து இயேசுவுக்குள் உங்களைக் குறித்துத் தேவனுடைய சித்தமாயிருக்கிறது." (1தெசலோனிக்கேயர் 5 :18)

**Ray Charlton**

நெருக்கமான வழியில் நடக்கக் கூடியவர்களுக்கு பரலோகபிதா கொடுக்கக்கூடிய அனுபவங்களுக்கு ஏற்றபடி நன்றி ஏறெடுத்தல் மற்றும் முறுமுறுப்பு என்ற வார்த்தைகள் கிறிஸ்தவர்களின் மனப்பாங்கை வேறுப்படுத்துகிறது. இந்த முரண்பாடு, விசுவாசிகளின் மேல் ஆழ்ந்த தாக்கத்தை ஏற்படுத்தலாம். வளர்ச்சி அடையலாம் அல்லது இந்த அனுபவங்களின் வழியாக தேவனுடைய நோக்கத்தை புரிந்துகொள்ளலாம். நன்றியுள்ள இருதயத்தை பெற்றிருப்போர், பரலோகத்தின் பிதா சிறந்தவைகளை அறிந்திருக்கிறார் என்பதை அறிந்திருப்பதினால் ஆறுதல் அடையவார்கள். மற்றொரு கரத்தில் முறையிடுகிறார்கள், அவர்களுக்கு கொடுக்கப்பட்டவைகளில் எதிலும் ஆறுதல் கண்டடைவதில்லை.

நாம் எதிரிடையான சூழ்நிலைகளை அனுபவிக்கும் போது அந்நேரத்தில் நன்றிகளை ஏறெடுப்பதற்கு கடினமாக இருக்கலாம். "அன்றியும், அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களாய்த் தேவனிடத்தில் அன்புகூருகிறவர்களுக்குச் சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறதென்று அறிந்திருக்கிறோம்." (ரோமர் 8:28) என்ற இன்னும் நமக்கு உறுதியளிக்கப்படுகிறது. சில நேரங்களில், பரலோக பிதா அனுமதிக்கும் அனுபவங்களுக்கு பின் உள்ள நோக்கத்தை புரிந்து கொள்ள பல மாதங்கள் அல்லது சில வருடங்களும் கடந்து செல்லலாம்.

"வேதவாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது; தேவனுடைய மனுஷன் தேறினவனாகவும், எந்த நற்கிரியையுஞ் செய்யத் தகுதியுள்ளவனாகவும் இருக்கும்படியாக, அவைகள் உபதேசத்துக்கும், கடிந்து கொள்ளுதலுக்கும், சீர்திருத்தலுக்கும், நீதியைப் படிப்பிக்குதலுக்கும் பிரயோஜனமுள்ளவைகளாயிருக்கிறது."(11தீமோத்தேயு 3:16-17) என்று அப்போஸ்தலனாகிய பவுல் தன்னுடைய எழுத்துக்களில் இளைஞனான தீமோத்தேயுவுக்கு கற்பிக்கிறார் நன்றி ஏறெடுத்தல் அல்லது முறுமுறுப்புண்டாகும் போது இது உண்மையாகிறது. தேவன் இஸ்ரயேலர்களை எகிப்திய அடிமைதனத்திலிருந்து விடுதலை செய்ததில், இந்த பாடத்தை பொறுத்த வரையில் வேத மாணவர்களுக்கு பல பாடங்கள் அடங்கியுள்ளது.

**இஸ்ரயேலுக்காக தேவனுடைய தலையீடு**

இது ஒரு அற்புதமான தேவ செயல் பூமியில் உள்ள மற்ற தேசங்களுக்கு மேலாக இந்த தேசத்திற்காக தலையிட வேண்டும் என்று தேவன் ஏன் தீர்மானித்தார் என்று இந்நாள் வரையில் பலர் கேள்வி எழுப்புகிறார்கள் இது நடுநிலை குறைவையும் மற்ற தேசங்களை தாழ்வாக எண்ணுதலையும், காட்டுகிறதாக சில கிறிஸ்தவர்கள் கருதுகிறார்கள்.

ஆயினும், தேவன் இதன் காரணத்தை வசனங்களில் தெரிவிக்கிறார். "சகல ஜனங்களிலும் நீங்கள் திரட்சியான ஜனமென்று கர்த்தர் உங்கள்பேரில் அன்புவைத்து உங்களைத் தெரிந்துகொள்ளவில்லை; நீங்கள் சகல ஜனங்களிலும் கொஞ்சமாயிருந்தீர்கள்.கர்த்தர் உங்களில் அன்புகூர்ந்ததினாலும், உங்கள் பிதாக்களுக்கு இட்ட ஆணையைக் காக்கவேண்டும் என்பதினாலும்; கர்த்தர் பலத்த கையினால் உங்களைப் புறப்படப்பண்ணி, அடிமைத்தன வீடாகிய எகிப்திலிருந்தும் அதின் ராஜாவான பார்வோனின் கையினின்றும் உங்களை மீட்டுக்கொண்டார்." (உபாகமம் 7:7-8)

இஸ்ரயேல் ஜாதியாருக்கு எவ்வளவு அற்புதமான ஆசீர்வாதம் கொடுக்கப்பட்டுள்ளது. "நீங்கள் உங்கள் தேவனாகிய கர்த்தருக்குப்

பரிசுத்தமான ஜனங்கள்; பூமியின்மீதெங்குமுள்ள எல்லா ஜனங்களிலும் உங்களையே கர்த்தர் தமக்குச் சொந்த ஜனங்களாயிருக்கத் தெரிந்துகொண்டார்." (உபாகமம் 14:2) ஆபிரகாம் ஈசாக்கு மற்றும் யாக்கோபு என்று அவர்களின் முற்பிதாக்களுக்கு வாக்களிக்கப்பட்ட ஆசீர்வாதங்களை, ஒரு ஜாதியாக இஸ்ரயேல் பெறவேண்டியதாக இருந்தது. நிச்சயமாக, இவர்கள் தொடர்ந்து தேவனுக்கு நன்றிகளை ஏறெடுத்து கொண்டு நித்தமும் அவர்களின் ஆசீர்வாதங்களை எண்ணிபார்த்திருக்க வேண்டும்.

எகிப்தியரின் கண்களில் தயவு கிடைத்து, அவர்களிடமிருந்து பொன்னும், வெள்ளியும், வஸ்திரங்களையும் இஸ்ரயேல் பெற்றுகொண்ட காரியத்திற்குள் அடங்கும். அதற்குபின் பகலில் மேக ஸ்தம்பத்தினாலும், இரவில் அக்கினி ஸ்தம்பத்தினாலும் தேவன் அவருடைய பாதுகாப்பை காட்டினார். "பகலிலே மேகஸ்தம்பமும், இரவிலே அக்கினிஸ்தம்பமும் ஜனங்களிடத்திலிருந்து விலகிப்போகவில்லை." (யாத்திராகமம் 13:22)

இஸ்ரயேலர்கள் விடுதலை பெறுவதற்கு காரணமாக நடந்திட்ட அற்புதமான வாதைகளை கண்டு நிச்சயமாக அவர்கள் தங்களுடைய ஆசீர்வாதங்களை எண்ணி கொண்டு தேவனுடைய வல்லமையில் மகிழ்ந்திருக்க வேண்டும். ஆயினும், அவர்கள் பார்வோனை கண்ட மாத்திரத்தில், அவர்கள் மோசேவிடம் முறுமுறுத்து, "அன்றியும் அவர்கள் மோசேயை நோக்கி: எகிப்திலே பிரேதக்குழிகள் இல்லையென்றா வனாந்தரத்திலே சாகும்படிக்கு எங்களைக் கொண்டுவந்தீர்? நீர் எங்களை எகிப்திலிருந்து புறப்படப்பண்ணினதினால், எங்களுக்கு இப்படிச் செய்தது என்ன? நாங்கள் எகிப்திலே இருக்கும்போது, நாங்கள் எகிப்தியருக்கு வேலை செய்ய எங்களைச் சும்மா விட்டுவிடும் என்று சொன்னோம் அல்லவா? நாங்கள் வனாந்தரத்திலே சாகிறதைப்பார்க்கிலும் எகிப்தியருக்கு வேலைசெய்கிறது எங்களுக்கு நலமாயிருக்குமே என்றார்கள்." (யாத்திராகமம் 14:11-12)முறையிட்டார்கள்

கடலை பிளந்து, வெட்டாந்தரையில் இஸ்ரயேலர்களை அதற்குள் நடத்தி, கடக்கசெய்து, மீண்டும் ஒரு முறை அவர்களை ஆசீர்வதித்தார். மதிலாக நின்ற தண்ணீர் திரும்பி, அவர்களை பின் தொடர்ந்த எகிப்தியரை மூடி போட்டது. இதை கண்ட இஸ்ரயேலர்கள் "கர்த்தர் எகிப்தியரில் செய்த அந்த மகத்தான கிரியையை இஸ்ரவேலர் கண்டார்கள்; அப்பொழுது ஜனங்கள் கர்த்தருக்குப் பயந்து, கர்த்தரிடத்திலும் அவருடைய ஊழியக்காரனாகிய மோசேயினிடத்திலும் விசுவாசம் வைத்தார்கள்." (யாத்திராகமம் 14 :31) என்று பதில் அளித்தார் இதை தொடர்ந்து வந்த மோசேவின் பாடல், 15ம் அதிகாரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

**முறுமுறுப்பு தொடர்ந்தது:**

மூன்று நாட்களுக்குபின் "நாங்கள் என்னத்தை குடிப்போம்?" ஏன்ற கூறி, மீண்டும் இஸ்ரயேலர்கள் தேவனுடைய பிரதிநிதியாகிய மோசேவுக்கு விரோதமாக முறுமுறுத்தார்கள். குடிக்கமுடியாத கசப்பான தண்ணீரை, தித்திப்பான தண்ணீராக மாற்றி, தொடர்ந்து அவருடைய வாக்குத்தத்தத்தை கொடுத்து மீண்டும் அவர்களை ஆசீர்வதித்தார். "நீ உன் தேவனாகிய கர்த்தரின் சத்தத்தைக் கவனமாய்க் கேட்டு, அவர் பார்வைக்குச் செம்மையானவைகளைச் செய்து, அவர் கட்டளைகளுக்குச் செவிகொடுத்து, அவருடைய நியமங்கள் யாவையும் கைக்கொண்டால், நான் எகிப்தியருக்கு வரப்பண்ணின வியாதிகளில் ஒன்றையும் உனக்கு வரப்பண்ணேன்; நானே உன் பரிகாரியாகிய கர்த்தர் என்றார்." (யாத்திராகமம் 15:26)அவர்கள் தேவன் பேரில் விசவாசம் கொண்டு கீழ்படிந்திருந்தார்களானால் எவ்வளவு அற்புதமான ஆசீர்வாதங்களை அவர்கள் பெற்றிருப்பார்கள் !

இஸ்ரயேலர்கள் பெற்றிருந்த அனைத்து ஆசீர்வாதங்களுக்காக அவர்கள் நன்றியுள்ளவர்களாக இருந்திருக்கவேண்டும். அல்லது தேவனுக்காக காத்திருப்பதற்காவது ஆயத்தமாக இருந்திருக்க வேண்டும் இருப்பினும், வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்திற்குள் பிரவேசிப்பதற்கு வெறும் 30 நாளுக்கு முன் இஸ்ரயேலின் புத்திரர் மீண்டும் மோசேக்கும், ஆரோனுக்கும் எதிராக முறுமுறுத்தார்கள். என்று யாத்திராகமம் 16:3 ம் வசனத்தில் பதிவு செய்யப்பட்டிருக்கிறது. இதை குறித்து பாஸ்டர் ரசல்

விவரிக்கையில், "மோசேவுக்கு விரோதமான இஸ்ரயேலின் கூக்குரலில், மனுஷ சுபாவம் தெளிவாக எடுத்து காட்டப்பட்டுள்ளது. "நாங்கள் இறைச்சிப் பாத்திரங்களண்டையிலே உட்கார்ந்து அப்பத்தைத் திருப்தியாகச் சாப்பிட்ட எகிப்து தேசத்திலே, கர்த்தரின் கையால் செத்துப்போனோமானால் தாவிலை; இந்தக் கூட்டம் முழுவதையும் பட்டினியினால் கொல்லும்படி நீங்கள் எங்களைப் புறப்படப்பண்ணி, இந்த வனாந்தரத்திலே அழைத்துவந்தீர்களே என்று அவர்களிடத்தில் சொன்னார்கள்." என்று அவர்கள் முறையிட்டு புலம்பினார்கள். இவர்கள் எகிப்தின் கசப்பான அடிமைத்தனம், வைக்கோல் இல்லாமல் செங்கல் அறுத்ததை, விசாரணைக்காரர்கள், விடுதலைக்காக அவர்கள் தேவனிடம் மன்றாடியது - அனைத்தையும் மறந்து விட்டார்கள் சில இன்பமான காரியங்களை மட்டுமே நினைவில் வைத்திருந்தார்கள். " (R3036)

தேவன் மீண்டுமாக அவருடைய ஆசீரை மோசேவின் மூலமாக வழங்கினார். "அப்பொழுது மோசேயும் ஆரோனும் இஸ்ரவேல் புத்திரர் எல்லாரையும் நோக்கி: கர்த்தர் உங்களை எகிப்து தேசத்திலிருந்து புறப்படப்பண்ணினவர் என்பதைச் சாயங்காலத்தில் அறிவீர்கள்; விடியற்காலத்தில் கர்த்தருடைய மகிமையையும் காண்பீர்கள்; கர்த்தருக்கு விரோதமான உங்கள் முறுமுறுப்புகளை அவர் கேட்டார்; நீங்கள் எங்களுக்கு விரோதமாய் முறுமுறுக்கிறதற்கு நாங்கள் எம்மாத்திரம் என்றார்கள்." (யாத்திராகமம் 16-6-7) மாலையில் காடைகள் வந்து தரையை மூடியது. காலையில் பனி தரையிலிருந்து மறைந்தவுடன் இஸ்ரயேலுக்கான மன்னா அங்கே படிந்திருந்தது. கானானின் எல்லையை இஸ்ரயேல் ஜனங்கள் வந்தடையும் வரையில் தேவன் தாம் தேர்வு செய்த ஜனங்களை அற்புதவிதமாக 40 வருடங்கள் போஷித்தார். நிச்சயமாக இப்போது அவர்களை ஆசீர்வதிக்கக்கூடிய தேவனுடைய விசுவாசத்தில் உறுதிபெற்றிருப்பார்கள் !

ஆயினும் ரெவிதீமில், தண்ணீர் பற்றாகுறையினால், மோசேவிடம் அவர்கள் சண்டைபோட்டார்கள். அவர்கள் முன்னதாக பெற்ற நன்மைகளுக்கு எந்த விதமான நன்றிகளையும் அவர்கள் ஏற்றெடுத்து போல தெரியவும் இல்லை, அவர்களுக்கு தேவைப்படும் தண்ணீருக்காக தேவனிடம் எந்த விண்ணப்பமும் ஏறெடுக்கவும் இல்லை. ஆனால் மோசேவுக்கு எதிராக குற்றம் சாட்டி கொண்டிருந்தார்கள். "ஜனங்கள் அவ்விடத்திலே தண்ணீர்த் தவனமாயிருந்தபடியால், அவர்கள் மோசேக்கு விரோதமாய் முறுமுறுத்து: நீர் எங்களையும் எங்கள் பிள்ளைகளையும் எங்கள் ஆடுமாடுகளையும் தண்ணீர்த் தவனத்தினால் கொன்றுபோட எங்களை எகிப்திலிருந்து ஏன் கொண்டுவந்தீர் என்றார்கள்" ? (யாத்திராகமம் 17:3)

அவர்களின் பயணத்தில் மூன்றாம் மாதத்தில், இஸ்ரயேலர்கள் சீனாய் மலைக்கு வந்து சேர்ந்தார்கள். அப்போது மோசே தேவனை சந்திப்பதற்கு மலைக்கு சென்ற போது தேவன் மீண்டுமாக அவர்களுக்காக அவர் கொண்டிருந்த அக்கறையை அவர்களுக்கு நினைப்பூட்டினார். "மோசே தேவனிடத்திற்கு ஏறிப்போனான்; கர்த்தர் மலையிலிருந்து அவனைக் கூப்பிட்டு: நீ யாக்கோபு வம்சத்தாருக்குச் சொல்லவும், இஸ்ரவேல் புத்திரருக்கு அறிவிக்கவும் வேண்டியது என்னவென்றால், நான் எகிப்தியருக்குச் செய்ததையும், நான் உங்களைக் கழுகுகளுடைய செட்டைகளின்மேல் சுமந்து, உங்களை என்னண்டையிலே சேர்த்துக்கொண்டதையும், நீங்கள் கண்டிருக்கிறீர்கள். இப்பொழுது நீங்கள் என் வாக்கை உள்ளபடி கேட்டு, என் உடன்படிக்கையைக் கைக்கொள்வீர்களானால், சகல ஜனங்களிலும் நீங்களே எனக்குச் சொந்த சம்பத்தாயிருப்பீர்கள்; பூமியெல்லாம் என்னுடையது. நீங்கள் எனக்கு ஆசாரிய ராஜ்யமும் பரிசுத்த ஜாதியுமாய் இருப்பீர்கள் என்று நீ இஸ்ரவேல் புத்திரரோடே சொல்லவேண்டிய வார்த்தைகள் என்றார்." (யாத்திராகமம் 19:3-6) என்று மோசேவை மலையிலிருந்து வெளியே அழைத்து ஆண்டவர் கூறினார். "அதற்கு ஜனங்கள் எல்லாரும் ஏகமாய், கர்த்தர் சொன்னவைகளையெல்லாம் செய்வோம் என்று பிரதியுத்தரம் சொன்னார்கள். ஜனங்கள் சொன்ன வார்த்தைகளை மோசே கர்த்தரிடத்தில் தெரிவித்தான்." (யாத்திராகமம் 19:8) என்று எவ்வளவு எளிமையாக அவர்கள் பதில் அளித்தார்கள். துரதிஷ்டவசமாக, இஸ்ரயேலர்களின் விருப்பம், அவர்களின் ஆற்றலை காட்டிலும் அதிகமாக

இருந்தது. அந்த ஜாதி ஒப்புகொண்ட பொறுப்பை நிறைவேற்ற தவறியது.

## இடுக்கமான வழிக்குண்டான பாடங்கள்

நம்முடைய தேவைகளை பூர்த்தி செய்வதற்கு, நமக்கு ஆற்றல் உள்ளபோதிலும் நம்முடைய ஒவ்வொரு தேவைகளையும் தேவன் அற்புதவிதமாக கொடுக்க வேண்டும் என்று நாம் எதிர்ப்பார்க்கிறோமா ? இஸ்ரயேலர்கள் எகிப்தை விட்டு புறப்படும்போது, "அவர்களோடே கூடப் பல ஜாதியான ஜனங்கள் அநேகர் போனதும் அன்றி, மிகுதியான ஆடுமாடுகள் முதலான மிருகஜீவன்களும் போயிற்று." (யாத்திராகமம் 12:38) புறப்பட்டார்கள் என்பது ஆர்வமூட்டக்கூடியதாக உள்ளது. ஆயினும், பயணத்தின் போது 30ம் நாளில், உணவு பற்றாகுறைவினால் அவர்கள் தேவனுக்கு விரோதமாக முறுமுறுத்தார்கள். "எங்களுடைய ஆகாரத்தை எங்களுக்கு இன்று தாரும்." (மத்தேயு 6:11) என்று நாம் ஜெபிக்க வேண்டும். நாம் மிக ருசியுள்ள உணவை கேட்க வேண்டாம். (R5311) இஸ்ரயேலர்களைபோல, அதாவது நல்ல ருசியுள்ள இறைச்சி வேண்டும் என்று அவர்கள் முறுமுறுத்தது போல நாம் முறுமுறுக்காமல் இருப்போமாக. (R4012) சிறிதும், பெரிதுமான எல்லா ஆசீர்வாதங்களுக்காக நம்முடைய நன்றியறிதலை நாம் எப்போதும் காண்பிக்கவேண்டும்

நாம் இந்த ஆசீர்வாதங்களை மறந்து, சோதனைகளின் போதும் கஷ்டங்களில் போராடும் போதும் நாம் முறுமுறுத்தால், நாம் அந்த இஸ்ரயேலர்களை போல "தேவன் நம்மத்தியில் இருக்கிறாரா, இல்லையோ? "(யாத்திராகமம் 17: 7) என்று தாராளமாக கூறி மிக எளிமையாக தேவனுடைய ஆசீர்வாதங்களை மறந்துவிடுவோம். நாம் புது சிருஷ்டிகளாக வளர்ச்சி அடைவதற்கு தேவையான சோதனைகளை பிதா வடிவமைத்திருந்து போதும், அதை காட்டிலும் குறைவான சோதனைகளை கொடுக்கும் படிக்கு, அவரிடம் விண்ணப்பித்து, நம்முடைய பரலோகபிதாவை நாம் சோதிக்கிறோமா?

உலகத்தில் நிகழக்கூடிய உபத்திரவங்களை நாம் காணும்போது, தேவனால் நாம் அழைக்கப்பட்டதினால் பெற்ற ஆசீர்வாதங்கள் எப்படிப்பட்டவை என்பதை நாம் உணர்ந்து பார்க்கவேண்டும் மேலும், இந்த அனைத்து சோதனைகளுக்கும் கஷ்டங்களுக்கும் ஒரு நோக்கம் உண்டென்பதை நாம் அவர் தந்த வரங்களாகிய பரிசுத்த ஆவியினால், அறிந்திருக்கிறோம். இந்த மனுக்குலத்தை, பரிசுத்தமான பெரும்பாதையில் நடத்தி செல்ல உதவுவதற்கு பாத்திரவான்களாக சோதித்து, நிரூபிக்கப்பட்டு, "இராஜ்யத்தின் ஆசாரியர்களாக" மாறுவதற்கு, பலியினால் உடன்படிக்கை செய்வதவர்களை தேவன் இப்போது ஆயத்தப்படுத்துகிறார்.

இஸ்ரயேலர்கள் முறுமுறுத்தபோது, ஒரு புறஜாதியும், மீதியானின் ஆசாரியராகிய எத்திரோ, கூடாரத்தை அவர் கண்டபோது,"கர்த்தர் இஸ்ரவேலரை எகிப்தியரின் கைக்குத் தப்புவித்து, அவர்களுக்குச் செய்த சகல நன்மைகளையுங்குறித்து எத்திரோ சந்தோஷப்பட்டு: உங்களை எகிப்தியரின் கைக்கும் பார்வோனின் கைக்கும் தப்புவித்து, எகிப்தியருடைய கையின் கீழிருந்த ஜனத்தை விடுவித்த கர்த்தருக்கு ஸ்தோத்திரம்.கர்த்தர் எல்லாத் தேவர்களைப்பார்க்கிலும் பெரியவர் என்பதை இப்பொழுது அறிந்திருக்கிறேன்; அவர்கள் இடும்பு செய்த காரியத்தில் அவர்களை மேற்கொண்டார் என்று சொல்லி;" (யாத்திராகமம் 18:9-11)

நாம் இடுக்கமான பாதையில் செல்லும் போது, "நன்மையான எந்த ஈவும் பூரணமான எந்த வரமும் பரத்திலிருந்துண்டாகி, சோதிகளின் பிதாவினிடத்திலிருந்து இறங்கிவருகிறது; அவரிடத்தில் யாதொரு மாறுதலும் யாதொரு வேற்றுமையின் நிழலுமில்லை.அவர் சித்தங்கொண்டு தம்முடைய சிருஷ்டிகளில் நாம் முதற்பலன்களாவதற்கு நம்மைச் சத்திய வசனத்தினாலே ஜநிப்பித்தார்." (யாக்கோபு 1:17-18) என்பதை நாம் நிறுத்தி உணரக்கூடியவர்களாக இருக்கவேண்டும். நாம் எத்தனை அற்புதமான ஆசீர்வாதங்களை பெற்றுள்ளோம்!

# தாங்கொண்ணா துயரத்துடன் மகிழ்தல்



"துயரப்படுகிறவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் ஆறுதலடைவார்கள்." (மத்தேயு 5: 4)

Rachel Kraynick

நம்முடைய ஜீவியத்தில் சில நேரங்களில் நாம் அனைவரும் துன்பங்கள், சவால்கள் மற்றும் கஷ்டங்களை சந்திப்பதுண்டு. சிலர் மற்றவரை காட்டிலும் அதிகமான கஷ்டங்களை அடைகிறார்கள். நான் எந்த விதத்திலும் மற்றவர்களை காட்டிலும் வேறுப்பட்டவன் அல்ல உண்மையாக சொல்லப்போனால் வேதனை, கஷ்டங்கள் அல்லது உபத்திரவம் இல்லாத வாழ்க்கையை தேவன் நமக்கு என்றுமே வாக்களிக்கவில்லை. "உத்தமனும், நீதிமானும், தேவனுக்கு பயந்து தீமைக்கு விலகினவர்" என்று சாட்சி பெற்ற மனுஷனாகிய யோபும் கூட கற்பனைக்கு எட்டாத இழப்பிற்கும், வேதனைக்கும் உள்ளாக்கப்பட்டார்.

விவரிப்பதற்கு வார்த்தைகளை கண்டுபிடிப்பதற்கு நான் போராடும் அளவுக்கு நானும், கூட இப்படிப்பட்ட மிகுந்த ஆழமான ஒரு காயத்தை அனுபவித்தேன். அனுதாபத்தையோ, மற்றவர்களின் இரக்கத்தை பெறுவதற்கோ, நான் என் கதையை பகிர்ந்து கொள்ளாமல், போராடிகொண்டிருப்பவர்களுக்கு ஆறுதல் அளிக்கும் என்ற நம்பிக்கையிலும், அவர்கள் கீழ் உள்ள பாறையில் மோதும் போது, அவர்கள் தேவன் மேலும், அவருடைய திட்டத்தின்மேலும் நம்பிக்கை வைப்பதற்காக ஊக்குவிக்கிறேன். நாம் கேட்ட கேள்வியையும், நாம் கற்று கொண்ட பாடத்தையும் மற்றும் நான் என்றுமே மறக்க முடியாத காரியங்களையும் நான் பகிர்ந்து கொள்ளுவேன்.

தேவனிடமும் இந்த முழு உலகத்தின் மனுக்குலத்திற்காக அவருடைய அற்புதமான திட்டத்தின் மீதும் மிக உறுதியாக அன்பு செலுத்தும் குடும்பத்தில் நாம் வளர்க்கப்படுவதற்கு நான் போதிய அதிர்ஷ்டசாலியாக இருந்தேன். நான் ஒரு குழந்தையாக இருக்கும்போதே, என்னுடைய குடும்பம், ஒவ்வொரு ஞாயிறு காலையிலும், வெள்ளிகிழமை மாலையிலும் தவறாமல் வேத பாட வகுப்புகளில் கலந்து கொள்வார்கள். என்னுடைய அத்தைகளினால் கற்பிக்கப்பட்ட ஞாயிறு வகுப்பு பாடங்களில் கலந்து கொள்வதற்கு நாம் பார்த்து கொண்டிருந்ததையும் வெள்ளி கிழமை மாலை கூட்டங்களுக்கு செல்லுவது மற்றும் பொதுவாக அந்த கூட்டத்தை என் தாத்தா நடத்துவதும் என் நினைவில் உள்ளது. எங்கள் வகுப்பில் முக்கியமாக குடும்ப நபர்கள் கூடிவருவார்கள். ஆனால் வாய்ப்புகள் வரும் போது நண்பர்களையும், அயலகத்தாரையும் வரவழைப்போம். எங்களுடைய வகுப்புகளில், கேள்விகளை கேட்பதில் எப்போதும் நான் ஆறுதல் அடைவேன். ஏனெனில் எந்த கேள்வியும் அற்பத்தனமாக இருக்காது. நாங்கள் படிக்கக்கூடிய எந்த தலைப்பானாலும் சரி, அதை பற்றிய புரிந்துகொள்ளுதலை மேம்படுத்துவதற்கு நாங்கள் வேத வசனங்களை வாசிக்கவும், ஆழமான உரையாடல்களை செய்வதற்கு கேட்டு கொள்ளப்படுவோம். எங்களுடைய வகுப்பில் பிள்ளைகள் கலந்து கொள்வதற்கு எப்போதும் உற்சாகப்படுத்தப்பட்டார்கள். மேலும், இந்நாள் வரையிலும், தேவனுடைய திட்டத்திற்கான அன்பு மற்றும் அதன் மேலுள்ள ஆர்வம் எனக்கு முதன்மையானதாய் இருந்து வருகிறது.

பல்கலைகலகத்தில் என் படிப்பை நான் முடித்த பின், வேலை செய்வதற்கு நான் வீடு திரும்பினேன். அங்கு தான் நான் என் கணவரை சந்தித்தேன். அவர் வேறுப்பட்ட விசுவாசத்தில் வளர்ந்திருந்தாலும் அவர் எங்கள் வேத படிப்புகளில் கலந்து கொண்டு என்னுடைய சத்தியத்தின் புரிந்துகொள்ளுதலை உறுதிப்படுத்தி, எனக்கு ஆதரவளித்தார். 2005ல் எங்களுடைய முதல் குழந்தை சேஸை (chase) இரண்டாவது குழந்தை கூப்பரையும் பெற்றெடுத்தோம். என்னுடைய கணவர் மிக பெரிய கால்நடை பண்ணையை நடத்திகொண்டிருந்தார். நானும் முழு நேரம் விவசாய வேலை பார்த்துகொண்டிருந்தேன். என்னுடைய

பிள்ளைகள் எப்போதும் பாடத்திட்டம் சாராத நடவடிக்கைகள் ஆகிய பேஸ்பால், நீச்சல் மற்றும் ஹாக்கி விளையாடுவதில் எப்போதும் ஈடுபட்டவர்களாக இருந்தார்கள் ஆனால் பண்ணை ஆராய்ச்சியிலும் பண்ணை வாழ்க்கை வழங்கிய அனைத்து அற்புதமான காரியங்களை அனுபவிப்பதில் பேரார்வம் கொண்டிருந்தார்கள். எங்களுடைய வாழ்க்கை முழு நிறைவாகவும், அளவுகடந்த ஆசீர்வாதங்களோடிருந்தது.

**ஒரு மாற்றம்:**

2011 ம் ஆண்டில் எங்கள் வாழ்க்கை எதிர் பார்த்திடாத ஒரு கடுமையான அடியை பெற்றது ! எங்களுடைய மூத்த மகன் சேஸ் ஒரு பண்ணை விபத்தில் கொல்லப்பட்டான். அவன் ஆறு வயதுள்ளவனாக இருந்தான். இந்த அனுபவம் எங்களுக்கு எவ்வளவு உச்சக்கட்டமான வேதனையை தந்ததென்று தெளிவான வார்த்தைகளில் சொல்ல முடியுமா என்று எனக்கு தெரியவில்லை. பல மாதங்களாக நாங்கள் மரத்துபோயிருந்தோம். கோபம், வருந்துதல் மற்றும் சோகம் போன்ற உணர்வுகள் எங்களை ஊனமாக்கியது. அதனுடைய பாதிப்புகளை இந்நாள் வரைக்கும் உணர்ந்து கொண்டிருக்கிறோம். இப்படிப்பட்ட நாசம் விளைவிக்கக்கூடிய செயல்களுக்கு பின் இந்த உலகம் எப்படி தொடரும் என்று எனக்கு புரியவில்லை. பிள்ளைகள் பெற்றோருக்கு முன் மரிக்கக்கூடாது !எங்களுடைய உலகம் சரிந்தது. காலம் இன்னும் மாறவில்லை எங்களுடைய குழந்தை இல்லாமல், இந்த உலகத்தில் நாங்கள் எப்படி தொடருவோம் ?

வருத்தமும் வேதனையும் எங்கள் வாழ்க்கையை மேற்கொண்டது. நீண்ட காலமாக நான் சரியாக செயல்படவில்லை. தன்னுடைய குழந்தையை இழந்த தாயின் வேதனைக்கு ஆறுதல் அளிக்க எதுவும் இல்லை. தேவனுடைய திட்டத்தை நான் நன்கு அறிந்திருந்தும் அது எனக்கு உடனடியாக நிவாரணம் அளிக்க வில்லை. ஏனெனில், சேஸ் என்னோடிருக்க விரும்பினேன். அவனுக்கு பதிலாக நான் சென்றிருக்கலாம் என்று விரும்பினேன். அதிர்ஷ்டவசமாக, எங்களை நேசித்த குடும்பம் எங்களுக்கு ஆதரவாக இருந்த ஒரு சமுதாயம் எங்களை சுற்றியிருந்தது. வேதாகமம் வகுப்பு எங்களை பலப்படுத்தியது. சேஸின் மரணத்திலிருந்து நாங்கள் என்றுமே மீண்டு வர மாட்டோம் என்பதை அறிந்திருந்தாலும், அதிலிருந்து வெளியே வருவதற்கான வழிகளை நாங்கள் தேட வேண்டியதாக இருந்தது. "இது ஏன் நடந்தது ?" என்ற முதலில் நான் போராடிகொண்டிருந்தேன். ஏன் சேஸ் மரிக்கவேண்டும் ? சேஸ் ஏன் மரித்தான் என்ற காரணத்தை இது வரையில் நான் அறியாதபோதிலும், எங்களுடைய எல்லா சோதனைகளையும் அனுபவங்களும் தந்தையாகிய தேவனால் வடிக்கப்பட்டதும், நம் ஒவ்வொருவருக்காக விசேஷமான வடிவமைக்கபட்டுள்ளதை நான் அறிந்திருக்கிறேன். "என் நினைவுகள் உங்கள் நினைவுகள் அல்ல; உங்கள் வழிகள் என் வழிகளும் அல்லவென்று கர்த்தர் சொல்லுகிறார். பூமியைப்பார்க்கிலும் வானங்கள் எப்படி உயர்ந்திருக்கிறதோ, அப்படியே உங்கள் வழிகளைப்பார்க்கிலும் என் வழிகளும், உங்கள் நினைவுகளைப் பார்க்கிலும் என் நினைவுகளும் உயர்ந்திருக்கிறது." (ஏசாயா 55:8-9) என்ற வாசிக்கிறோம்.

எபிரெயர் 11ம் அதிகாரத்தில் "விசுவாச வீரர்களின்" பட்டியல் பதிவுசெய்யப்பட்டுள்ளது. வரிசைப்படுத்த ஒவ்வொருவரும் தேவனுடைய திட்டத்தில், ஒரு முக்கியமான பங்கை நிறைவுசெய்வதற்கே, பல சோதனைகளை பயன்படுத்தி தேவன் ஒவ்வொருவரையும் வடிவமைத்திருக்க வேண்டும். ஒவ்வொருவரும் கற்பனைக்கு எட்டாத சோதனைகளை அனுபவித்தார்கள். யோசேப்பை குழியில் போட்டார்கள், தானியேலை சிங்க கெபியில் போட்டார்கள். பவுலை சிறையில் போட்டார்கள், யோபு சாம்பலில் உட்கார்ந்தார். மோசே வனாந்திரத்தில் இருந்தார். ஆனால் உச்சபட்சமான உபத்திரவத்தினால் பாதிக்கப்பட்டவர், தேவனுடைய ஒரே பேறான குமாரன் "அவர் அசட்டைபண்ணப்பட்டவரும், மனுஷரால் புறக்கணிக்கப்பட்டவரும், துக்கம் நிறைந்தவரும், பாடு அநுபவித்தவருமாயிருந்தார்; அவரைவிட்டு, நம்முடைய முகங்களை மறைத்துக்கொண்டோம்; அவர் அசட்டைபண்ணப்பட்டிருந்தார்; அவரை எண்ணாமற்போனோம்." (எசாயா 53:3) "என் தேவனே

ஏன் என்னை கைவிட்டீர்"? என்று இயேசு தாமே சிலுவையில் தொங்கியபடி கதறினார். ஆகவே தேவன் சாதாரன ஜனங்களை பயன்படுத்தி அசாதாரண வேலைகளை நடப்பிப்பார் என்பதை நான் அறிந்திருந்தேன் ஆனால் அந்த பணியை நிறைவேற்ற அவர்கள் அனைவரும் "ஆயத்தமுள்ளவராக" இருக்கவேண்டும்.

ஒவ்வொரு கேள்விக்கும், எங்களுக்கு ஏன் இப்படியாக நடக்கிறது என்று எண்ணி கொண்டிருந்தேன். வேதாகமம் சில ஆழமான கண்ணோட்டத்தையும் பதில்களை கொடுப்பதை போல் தோன்றியது. ஒவ்வொரு முறையும் எங்களுடைய தேவபாட வகுப்பில், ஒரு குறிப்பிட்ட தலைப்பின் கீழ் பாடங்களை படிப்போம். அதில் நாங்கள் படிக்கக்கூடிய சில வசனங்கள் என்னோடும் என் சூழ்நிலையோடும் இசைவாக பிரதிபலித்து, எனக்கு ஒரு சிறப்பான முன்னேற்றமாக பார்வையை அளித்தது. ஒரு "புதிய" வழக்கமான வாழ்க்கை பாதையில் செல்ல வேதாகமம் எங்களது ஜீவனுக்குரிய வழிக்காட்டியாக இருந்தது.

"எனக்கு ஏன்? ஏன் இவ்வளவு தீமையான காரியங்கள், நல்ல ஜனங்களுக்கு நேரிடுகிறது?என்று நான் கேட்டபோது, கீழ்காணும் சில வசனங்களை நான் எண்ணிப்பார்த்தேன்.

*எபிரெயர் 5:8 "அவர் அசட்டைபண்ணப்பட்டவரும், மனுஷரால் புறக்கணிக்கப்பட்டவரும், துக்கம் நிறைந்தவரும், பாடு அநுபவித்தவருமாயிருந்தார்; அவரைவிட்டு, நம்முடைய முகங்களை மறைத்துக்கொண்டோம்; அவர் அசட்டைபண்ணப்பட்டிருந்தார்; அவரை எண்ணாமற்போனோம்."

*எபிரெயர் 2:10 "ஏனென்றால் தமக்காகவும் தம்மாலேயும் சகலத்தையும் உண்டாக்கினவர், அநேகம் பிள்ளைகளை மகிமையில் கொண்டுவந்து சேர்க்கையில் அவர்களுடைய இரட்சிப்பின் அதிபதியை உபத்திரவங்களினாலே பூரணப் படுத்துகிறது அவருக்கேற்றதாயிருந்தது." (நம்பிக்கை)

*1பேதுரு 1:6-7"இதிலே நீங்கள் மிகவும் சந்தோஷப்படுகிறீர்கள்; என்றாலும், துன்பப்படவேண்டியது அவசியமானதால், இப்பொழுது கொஞ்சக்காலம் பலவிதமான சோதனைகளினாலே துக்கப்படுகிறீர்கள்.அழிந்துபோகிற பொன் அக்கினியினாலே சோதிக்கப்படும்; அதைப்பார்க்கிலும் அதிக வேலையேறப்பெற்றதாயிருக்கிற உங்கள் விசுவாசம் சோதிக்கப்பட்டு, இயேசுகிறிஸ்து வெளிப்படும்போது உங்களுக்குப் புகழ்ச்சியும் கனமும் மகிமையுமுண்டாகக் காணப்படும்."

*1பேதுரு 4:1-2"இப்படியிருக்க, கிறிஸ்து நமக்காக மாம்சத்திலே பாடுபட்டபடியால், நீங்களும் அப்படிப்பட்ட சிந்தையை ஆயுதமாகத் தரித்துக்கொள்ளுங்கள். ஏனென்றால் மாம்சத்தில் பாடுபடுகிறவன் இனி மாம்சத்திலிருக்கும் காலம்வரைக்கும் மனுஷருடைய இச்சைகளின்படி பிழைக்காமல் தேவனுடைய சித்தத்தின்படியே பிழைக்கத்தக்கதாகப் பாவங்களை விட்டோய்ந்திருப்பான்."

*யாக்கோபு 1:2 "என் சகோதரரே, நீங்கள் பலவிதமான சோதனைகளில் அகப்படும்போது,"

*11கொரிந்தியர் 1:3-4"நமது கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் பிதாவாகிய தேவனும், இரக்கங்களின் பிதாவும், சகலவிதமான ஆறுதலின் தேவனுமாயிருக்கிறவருக்கு ஸ்தோத்திரம். தேவனால் எங்களுக்கு அருளப்படுகிற ஆறுதலினாலே, எந்த உபத்திரவத்திலாகிலும் அகப்படுகிறவர்களுக்கு நாங்கள் ஆறுதல்செய்யத் திராணியுள்ளவர்களாகும்படி, எங்களுக்கு வரும் சகல உபத்திரவங்களிலேயும் அவரே எங்களுக்கு ஆறுதல்செய்கிறவர்."

*11கொரிந்தியர் 4:8-10"நாங்கள் எப்பக்கத்திலும் நெருக்கப்பட்டும் ஒடுங்கிப்போகிறதில்லை; கலக்கமடைந்தும் மனமுறிவடைகிறதில்லை; துன்பப்படுத்தப்பட்டும் கைவிடப்படுகிறதில்லை; கீழே தள்ளப்பட்டும் மடிந்து போகிறதில்லை. கர்த்தராகிய இயேசுவினுடைய ஜீவனும் எங்கள் சரீரத்திலே விளங்கும்படிக்கு, இயேசுவின் மரணத்தை எப்பொழுதும் எங்கள் சரீரத்தில் சுமந்து திரிகிறோம்."

*11கொரிந்தியர் 12: 7-10"அன்றியும், எனக்கு வெளிப்படுத்தப்பட்டவைகளுக்குரிய

மேன்மையினிமித்தம் நான் என்னை உயர்த்தாதபடிக்கு, என் மாம்சத்திலே ஒரு முள் கொடுக்கப்பட்டிருக்கிறது; என்னை நான் உயர்த்தாதபடிக்கு, அது என்னைக் குட்டும் சாத்தானுடைய தூதனாயிருக்கிறது. அது என்னைவிட்டு நீங்கும்படிக்கு, நான் மூன்றுதரம் கர்த்தரிடத்தில் வேண்டிக்கொண்டேன்.அதற்கு அவர்: என் கிருபை உனக்குப்போதும்; பலவீனத்திலே என் பலம் பூரணமாய் விளங்கும் என்றார். ஆகையால், கிறிஸ்துவின் வல்லமை என்மேல் தங்கும்படி, என் பலவீனங்களைக்குறித்து நான் மிகவும் சந்தோஷமாய் மேன்மைபாராட்டுவேன். அந்தப்படி நான் பலவீனமாயிருக்கும்போதே பலமுள்ளவனாயிருக்கிறேன்; ஆகையால் கிறிஸ்துவினிமித்தம் எனக்கு வரும் பலவீனங்களிலும், நிந்தைகளிலும், நெருக்கங்களிலும், துன்பங்களிலும், இடுக்கண்களிலும் நான் பிரியப்படுகிறேன்."

*யோவான் 9:1-3"அவர் அப்புறம் போகையில் பிறவிக் குருடனாகிய ஒரு மனுஷனைக் கண்டார். அப்பொழுது அவருடைய சீஷர்கள் அவரை நோக்கி: ரபீ, இவன் குருடனாய்ப் பிறந்தது யார் செய்த பாவம், இவன் செய்த பாவமோ, இவனைப் பெற்றவர்கள் செய்த பாவமோ என்று கேட்டார்கள். இயேசு பிரதியுத்தரமாக: அது இவன் செய்த பாவமுமல்ல, இவனைப் பெற்றவர்கள் செய்த பாவமுமல்ல, தேவனுடைய கிரியைகள் இவனிடத்தில் வெளிப்படும் பொருட்டு இப்படிப் பிறந்தான்."

எங்களுடைய அனுபவத்தை நாங்கள் திரும்பி பார்த்தபோது, மிகுந்த கடினமான சூழ்நிலைகளில் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்பதற்கு தேவையான சகல கொள்கைகளையும் வேத வசனங்கள் கொடுத்தது. எங்களை செயல்படுத்த தேவன் அவருடைய வார்த்தைகளையும் (11தீமோத்தேயு3:16-17) எங்களை வழிநடத்துவதற்கும் அவருடைய சத்தியத்தை வெளிப்படுத்துவதற்கும் அவருடைய பரிசுத்த ஆவியையும் கொடுத்தார். (யோவான் 14:25-27) எங்களுடைய இழப்பினால், மேற்கூறப்பட்ட காரியங்கள் வலுப்பட்டது.

**பிரமிக்கத்தக்க ஒரு முன்னோட்டமான பார்வை:**

நம் மரபியல், வாழ்க்கை அனுபவங்கள் மற்றும் மதிப்புகள் ஆகியவற்றின் அடிப்படையிலான பார்வை, அறிவாற்றல் கற்பிப்பது ஆகும். ஆயினும், முன்னோட்டமான காரியத்திற்கு மற்றொரு மூலகமும் உண்டு, அது நம்முடைய விருப்ப தேர்வாகும் சிறப்பான பகுதியை பார்ப்பதற்கு பதிலாக நாம் பார்க்கக்கூடிய காரியங்களை எவ்வாறு தேர்வு செய்யவேண்டும் என்பது முன்னோக்கமாகும். நமக்கு நேரிடக்கூடியவைகளை நம்மால் எப்போதும் கட்டுப்படுத்த முடியாது என்று எனக்கு தெரியும் ஆனால் அவைகளுக்கு நாங்கள் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்பதை நாம் கட்டுபடுத்தலாம். துர் அதிஷ்டத்தை சந்திக்கும் போது நாம் எப்படி செயல்பட வேண்டும் என்பதை தேர்வு செய்வோம் - ஒரு வேளை நாம் சிறப்பாக மாறலாம் அல்லது கசப்பாக மாறலாம்.

இந்த விபத்திற்குபின் ஒரு வழக்கறிஞர் பேசி கொண்டிருந்ததை நான் மனதில் வைத்திருந்தேன். அவர் குழந்தையின் மரணத்திற்கு பின் திருமண முறிவுகளின் புள்ளி விவர தொகுப்பை பற்றி எங்களிடம் பகிர்ந்து கொண்டிருந்தார். இந்த புள்ளி விவர தொகுப்பு எங்களுக்கு அனுகூலமாக இருக்கவில்லை, ஆனால் இந்த நொடியில் எங்களுடைய திருமணம் அந்த அளவுக்கு வீழ்ச்சி அடையக்கூடாது என்று நான் தீர்மானித்தேன். இந்த அனுபவம் ஒரு வேளை எங்களை பிரித்தும் விடலாம் அல்லது எங்களுடைய பந்தத்தை பலப்படுத்தவும் செய்யலாம் என்று நான் அறிந்திருந்தேன். எங்கள் பந்தத்தை உறுதிப்படுத்துவதற்கு நாங்கள் தீர்மானித்தோம். "மனுஷருக்கு நேரிடுகிற சோதனையேயல்லாமல் வேறே சோதனை உங்களுக்கு நேரிடவில்லை. தேவன் உண்மையுள்ளவராயிருக்கிறார்; உங்கள் திராணிக்கு மேலாக நீங்கள் சோதிக்கப்படுகிறதற்கு அவர் இடங்கொடாமல், சோதனையைத் தாங்கத்தக்கதாக, சோதனையோடுகூட அதற்குத் தப்பிக்கொள்ளும்படியான போக்கையும் உண்டாக்குவார்." (1கொரிந்தியர் 10:13)

**ஆண்டவரை நம்பு:**

என்னுடைய வாழ்க்கையின் கட்டுபாடு என்னிடம் இல்லை, தேவனே அதிகாரி என்று நான் உணர்ந்தேன். எனக்கு புரிந்துகொள்ளாத

விஷயங்களிலும் நான் அவரை அவசியமாக நம்பவேண்டும். தேவனே நம்மை கட்டுபடுத்துகிறார் என்றும் அவைகள் அனைத்தும் நம்முடைய நன்மைக்கு ஏதுவாக நடக்கிறது என்றும் நாம் முழுமையாக நம்புவதற்கு இக்காலத்து சோதனைகள் வாய்ப்பளிக்கிறது. நான் திரும்பி பார்க்கையில் தேவன் தம்மிடமாக என்னை இழுத்துகொள்ள இந்த குறிப்பிட்ட கடினமான காலப்பகுதியை பயன்படுத்தியிருக்கிறார் என்று நான் அறிவேன். என்னுடைய வாழ்க்கையின் மற்ற எந்த பகுதிகளை காட்டிலும் இந்த அனுவத்தில் நான் தேவனைப்பற்றியும், என்னை பற்றியும் அதிகமாக கற்றுகொண்டேன்.

நம்மை சரியாக வடிவமைப்பதற்கும், சுத்திகரிப்பதற்கும், வேறு எந்த வழியிலும் வளர்ச்சி அடைவதற்கு வாய்ப்பில்லாத நம்முடைய குணலட்சனங்களை வளர்த்து கொள்ளவுமே இந்த சோதனைகள் வடிவமைக்கப்பட்டு, நாம் சோதிக்கப்படலாம் நம்முடைய புரிந்துகொள்ளும் திறனுக்கு அப்பாற்பட்ட, வருங்கால வேலைகளுக்கு நம்மை ஆயத்தப்படுத்தும்படிக்கு இந்த சோதனைகள் வடிவமைக்கப்பட்டிருக்கவேண்டும். இந்த அனுபவங்களை அவர் எந்த காரணத்திற்காக அனுமதித்திருந்தாலும் சரி, நான் தொடர்ந்து அவரை நம்புவேன். என்னுடைய சூழ்நிலைகள் மாறுவதை காட்டிலும் அவருடைய சித்தம் செய்யப்படுவதற்காக ஜெபிப்பேன்.

*நீதிமொழிகள் 3:5-6"உன் சுயபுத்தியின்மேல் சாயாமல், உன் முழு இருதயத்தோடும் கர்த்தரில் நம்பிக்கையாயிருந்து, உன் வழிகளிலெல்லாம் அவரை நினைத்துக்கொள்; அப்பொழுது அவர் உன் பாதைகளைச் செவ்வைப்படுத்துவார்."

*சங்கீதம் 18:2 "கர்த்தர் என் கன்மலையும், என் கோட்டையும், என் இரட்சகரும், என் தேவனும், நான் நம்பியிருக்கிற என் துருகமும், என் கேடகமும், என் இரட்சணியக் கொம்பும், என் உயர்ந்த அடைக்கலமுமாயிருக்கிறார்."

**நம்முடைய சித்தம் அல்ல, அவருடைய சித்தம் நிறைவேற ஜெபியுங்கள்:**

சில நேரங்களில் நமக்கு சிறந்தவைகள் எது என்ற நமக்கு தெரியாது. நமக்கு தேவை என்று நாம் சிந்திப்பவைகளை நாம் பெற்றிருக்கவேண்டும் என்று எதிர்பார்க்கக்கூடாது. இனி வரக்கூடிய காலங்களுக்கு நாம் எப்படியாக சூழ்நிலையில் நாம் ஆயத்தப்படவேண்டிய அவசியத்தை தேவன் மட்டுமே அறிவார். அதற்காக தான் நம்முடைய சித்தத்தை அல்ல, தேவ சித்தம் நிறைவேறுவதற்காகவே ஜெபிக்க வேண்டும். என்னால் தாங்க இயலாத நொடிகளை அல்லது நாட்களை எண்ணி பார்க்கையில், என்னை பலப்படுத்தி வழிநடத்தி அவருடைய பார்வையில் நான் எந்த விதத்தில் பயன்படுவேனோ, அந்த விதத்தில் என்னை பயன்படுத்தும் படிக்கு நான் ஜெபிக்கிறேன். "நீங்கள் ஒன்றுக்குங் கவலைப்படாமல், எல்லாவற்றையுங்குறித்து உங்கள் விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோடே கூடிய ஜெபத்தினாலும் வேண்டுதலினாலும் தெரியப்படுத்துங்கள்." (பிலிப்பியர் 4:6)

**தாழ்மையாக இருங்கள்:**

"அவ்வகையான" விஷயங்கள் " நம்மைப்போன்றோருக்கு" நிகழாது என நான் எண்ணினதுண்டு, மேலும் நாம் பல விஷயங்களைச் சர்வசாதாரணமாக நினைத்துவிடுகிறோம். சூழ்நிலைகள் என் கட்டுப்பாட்டுக்குள் இருப்பதாக நான் உறுதியாக நம்பினேன். என் கணிப்பு தவறாகி விட்டது ! எப்படி ஒரு கணத்தில் வாழ்க்கை தலைகீழாக மாறி நம்மை மண்டியிட வைத்துவிடுகிறது! இது எவ்வளவு விசித்திரமாய் உள்ளது !

கோபம், மறுப்பு, வருந்துதல், மற்றும் துக்கத்தின் மத்தியில் இந்த துயர சுற்று நடந்து கொண்டிருக்கிறது. சில நேரங்களில் நீங்கள் ஒரு நாளுக்கு பல சுற்றுகளுக்குள் பிரவேசிப்பீர்கள் உண்மையில் நான் என்னுடைய சூழ்நிலையின் கட்டுபாட்டில் அல்ல, தேவனுடைய கட்டுபாட்டில் இருக்கிறேன் என்பதை நாம் இதன் வழியாகவே புரிந்துகொண்டேன். எந்த விதத்திலும் எனக்கு கிடைக்காத தாழ்மையை இந்த அனுபவம் எனக்கு கற்றுத்தந்தது. "உங்களை குறைவாக எண்ணுவது தாழ்மை அல்ல, மாறாக நீங்கள் உங்களையே

குறைவாக எண்ணுவதே தாழ்மை" என்று லெவிஸ் கூறினார். கண்ணீரோடு இப்படி தாழ்மைப்படுவது மற்றும் உறுதி இல்லாத சூழ்நிலைகளில், ஆண்டவர் மேல் உள்ள நம்முடைய வல்லமையை உணர்வதற்கு நமக்கு உதவி செய்யும்.

*சங்கீதம் 59:16"நானோ உம்முடைய வல்லமையைப் பாடி, காலையிலே உம்முடைய கிருபையை மகிழ்ச்சியோடு புகழுவேன்; எனக்கு நெருக்கமுண்டான நாளிலே நீர் எனக்குத் தஞ்சமும் உயர்ந்த அடைக்கலமுமானீர். "

*லூக்கா 14:11"தன்னைத்தான் உயர்த்துகிறவனெவனும் தாழ்த்தப்படுவான், தன்னைத்தான் தாழ்த்துகிறவன் உயர்த்தப்படுவான் என்றார்."

*1பேதுரு 5:6-7"ஆகையால், ஏற்றகாலத்திலே தேவன் உங்களை உயர்த்தும்படிக்கு, அவருடைய பலத்த கைக்குள் அடங்கியிருங்கள். அவர் உங்களை விசாரிக்கிறவரானபடியால், உங்கள் கவலைகளையெல்லாம் அவர்மேல் வைத்துவிடுங்கள்."

**நம்முடைய வேதாகம வகுப்பின் வல்லமை – நம்முடைய பாரங்களை பங்கிடும்**

ஆண்டவரை நம்புவதற்கு நாம் கற்றுகொள்ளும்போது, வரும் சோதனைகள் மற்றவர்கள் அல்லது நம்முடைய வகுப்பில் அல்லது நம்முடைய சமுதாயத்தின் மேல் சாய்வதற்கு நம்மை உந்தும் நாம் சிறந்த வேதாகம வகுப்பைபெற்றிருக்கிறோம். நான் அதை நன்றியோடு கூறுகிறேன். எங்களுடைய வகுப்பும் சிறியது அது வீடுகளில் கூடும். மேலும் அதில் அனைவரும் கலந்தாலோசிப்போம்.

அந்த விபத்துக்கு பின் முழு வகுப்பும் துயரத்தில் ஆழ்ந்தது. நாங்கள் ஒரு பிள்ளையை மட்டும் இழக்கவில்லை. நாங்கள் ஒரு பேரனை இழந்தோம், ஒரு கொள்ளுபேரனை இழந்தோம், ஒரு தங்கையின் மகனை இழந்தோம். மாமன் மகனை இழந்தோம். நாங்கள் ஒருமித்து துக்கம் கொண்டாடினோம், ஒருவரோடு ஒருவர் பேசி கொண்டோம். நினைவுகளை பகிர்ந்து கொண்டோம் மற்றும் ஒருவருடைய பாரத்தை மற்றொருவர் சுமப்பதற்கு உதவி செய்தோம். தாழ்மையோடு நம்முடைய காரியங்களை பகிர்ந்துகொண்டால், தொடர்புகள், நம்பிக்கை மற்றும் ஆழமான உறவுகளை ஏற்படுத்தும் ஒரு மனத்தெளிவை வளர்த்துகொள்ளலாம்.

*1கொரிந்தியர் 12:26"ஆதலால் ஒரு அவயவம் பாடுபட்டால் எல்லா அவயவங்களும் கூடப் பாடுபடும்; ஒரு அவயவம் மகிமைப்பட்டால் எல்லா அவயவங்களும் கூடச் சந்தோஷப்படும். "

*கலாத்தியர் 6:2"ஒருவர் பாரத்தை ஒருவர் சுமந்து, இப்படியே கிறிஸ்துவினுடைய பிரமாணத்தை நிறைவேற்றுங்கள். "

**பச்சாதாபம்/ இரக்கம்:**

நம்முடைய சொந்த சோதனைகளும், இன்னல்களும் மற்றவர்களுக்கான பச்சாத்தாபத்தை நமக்குள் வளர்க்க உதவி செய்யும். இந்த ஒரு பேரழிவான காயத்தை அனுபவித்ததற்குபின், அநேக ஜனங்கள் தங்களுடைய துக்கத்தை மறைத்து வைத்திருக்கிறார்கள் என்று நான் தெரிந்துகொண்டேன். முக மலர்ச்சியை கட்டாயப்படுத்துகிறோம். விவரங்களை விட்டு விடுகிறோம் மற்றும் நாம் மிக நன்றாக இருக்கிறோம் என்று மற்றவர்களை நம்ப வைக்கிறோம். உள்ளுக்குள் எவ்வளவு வலியிருந்தாலும் தைரியமாய் தங்களை வெளிக்காட்டிக்கொள்பவர்களையும் மற்றவர்களை நீண்டகாலத்திற்கு நெருங்கிய உறவில் வைக்காமல் பார்த்துக்கொள்ளும் அனைவருக்கும் நான் ஓர் மென்மையான இடத்தை ஏற்படுத்திக்கொண்டேன். சோகத்தின் அடர்ந்த மேகத்திலுள்ள வெள்ளிக்கீற்று என்னவெனில், தேவன் நமது அனுபவத்தின் வாயிலாக நாம் மற்றவர்களிடத்தில் மனதுருக்கம் மற்றும் ஆறுதலோடு தொடர்புக்கொள்ள செய்கிறார்.

*எபேசியர் 4:32" ஒருவருக்கொருவர் தயவாயும் மனஉருக்கமாயும் இருந்து, கிறிஸ்துவுக்குள் தேவன் உங்களுக்கு மன்னித்ததுபோல, நீங்களும் ஒருவருக்கொருவர் மன்னியுங்கள். "

*கொலோசெயர் 3:12"ஆகையால், நீங்கள் தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட பரிசுத்தரும் பிரியருமாய்,

உருக்கமான இரக்கத்தையும், தயவையும், மனத்தாழ்மையையும், சாந்தத்தையும், நீடிய பொறுமையையும் தரித்துக்கொண்டு;"

**உங்கள் ஆசீர்வாதங்களை எண்ணுங்கள்:**

நன்றியறிதலின் மனப்பாங்கை பெற்றுகொள்ளுங்கள்! எவ்வளவு அதிகமான ஜனங்களை நான் சந்திதேனோ, எவ்வளவு உறவுகளை கட்டிகொண்டேனோ மற்றும் நான் எவ்வளவு அனுபவங்களை பெற்றேனோ, அந்த அளவுக்கு தேவனுடைய ஐசுவரியமுள்ள ஏராளமான ஆசீர்வாதங்களை பற்றி அறிந்துகொள்ளுதலை பெற்றேன். நான் மிகவும் நன்றியுள்ளவனாக இருக்கவேண்டும் என்று அறிந்திருக்கிறேன். ஒரு அற்புதமான குடும்பம், ஒரு வேதாகம வகுப்பு மற்றும் தேவதிட்டத்தை பற்றிய அறிவு - இவ்வனைத்தும் இதற்குள் அடங்கும். நம்முடைய பரலோக பிதாவுக்கான என்னுடைய அன்பும், வழிபாடுகளும் என்னுடைய பூமிக்குரிய சோதனைகளோடு சார்ந்ததல்ல. என் சேஸை நான் மறுபடியும் காண்பேன் என்று எனக்கு தெரியும். இந்த சூழ்நிலைகள் தற்காலிகம் என்று நான் அறிவேன். நன்றியறிதலான ஆவியை பெற்றுகொள்ளவும், எல்லா குடும்பங்களுக்கும் ஒரு நல்ல மாதிரியாக இருக்கவும், மற்றும் நம்முடைய விசுவாசத்தை தேவன் பலப்படுத்துவதற்காகவும் தொடர்ந்து நான் ஜெபிப்பேன்.

*11கொரிந்தியர் 2:14"கிறிஸ்துவுக்குள் எப்பொழுதும் எங்களை வெற்றிசிறக்கப்பண்ணி, எல்லா இடங்களிலேயும் எங்களைக்கொண்டு அவரை அறிகிற அறிவின் வாசனையை வெளிப்படுத்துகிற தேவனுக்கு ஸ்தோத்திரம்."

*1தெசலோனிக்கேயர் 5:18 "எல்லாவற்றிலேயும் ஸ்தோத்திரஞ் செய்யுங்கள்; அப்படிச் செய்வதே கிறிஸ்து இயேசுவுக்குள் உங்களைக் குறித்துத் தேவனுடைய சித்தமாயிருக்கிறது."

**கவனமாக இருங்கள்**

நாம் அனுமதிக்கும் இடங்களில் நம்முடைய சிந்தை செல்லும், ஆகவே செல்லவேண்டிய இடத்தை சரியாக தேர்வு செய்யுங்கள். நன்மையான மற்றும் சரியான காரியங்களை கவனித்திருப்பதற்கு நம்முடைய சிந்தைக்கு பயிற்சி கொடுங்கள். ஏனெனில், இந்த உலகம் முழுவதும் எதிர்கால நம்பிக்கையில் உங்கள் கவனத்தை செலுத்திகொண்டிருக்கிறது.

*1தெசலோனிக்கேயர் 4:13". அன்றியும், சகோதரரே, நித்திரையடைந்தவர்களினிமித்தம் நீங்கள் நம்பிக்கையற்றவர்களான மற்றவர்களைப்போலத் துக்கித்து, அறிவில்லாதிருக்க எனக்கு மனதில்லை."

*பிலிப்பியர் 4:8" கடைசியாக, சகோதரரே, உண்மையுள்ளவைகளெவைகளோ, ஒழுக்கமுள்ளவைகளெவைகளோ, நீதியுள்ளவைகளெவைகளோ, கற்புள்ளவை களெவைகளோ, அன்புள்ளவைகளெவைகளோ, நற்கீர்த்தியுள்ளவைகளெவைகளோ, புண்ணியம் எதுவோ, புகழ் எதுவோ அவைகளையே சிந்தித்துக்கொண்டிருங்கள்."

**பொறுமையாக இருங்கள்:**

பிதாவாகிய தேவன் இதுவரையில் ஏற்படுத்திய ஒவ்வொரு வாக்குத்தத்தங்களையும் அவர் வைத்திருக்கிறார். இப்போது அவர் எப்படி நிறுத்துவார்? அவர் வாக்குத்தம் செய்த ஒவ்வொன்றும் உண்மையாக நிறைவேறி கொண்டிருக்கிறது. இப்போது அவருக்காக நான் காத்திருப்பதே என்னுடைய வேலையாகும். ஆகவே, அவர் குறித்த காலத்தில் இந்த காரியங்கள் நிறைவேறும்.

*ரோமர் 12:12"நம்பிக்கையிலே சந்தோஷமாயிருங்கள்; உபத்திரவத்திலே பொறுமையாயிருங்கள்; ஜெபத்திலே உறுதியாய்த்தரித்திருங்கள்."

*சங்கீதம் 27:14"கர்த்தருக்குக் காத்திரு; அவர் உன் இருதயத்தை ஸ்திரப்படுத்துவார்; திடமனதாயிருந்து, கர்த்தருக்கே காத்திரு."

உங்கள் வெளிச்சம் அவர்கள் முன்பாகப் பிரகாசிக்கக்கடவது. நமக்கு வரும் பிரதிபலனை மூன்றாம் நபருக்கு அளித்தல் (pay it forward)

2011இல், சேஸின் ஆரம்ப பள்ளியில் ஓர் பணியை மேற்கொண்டனர், அதில் மாற்றத்தைக் கொண்டு வர ஒருவர் போதும் என்கிற நோக்கத்தை சமூகத்தின்

டித்தியில் பரப்ப நினைத்தனர். அவர்கள் மாணவர்களுக்கு (pay it forward) அட்டை கொடுத்து, அதை எவ்வாறு பயன்படுத்தலாம் என்பதை நினைத்துப்பார்க்க சொல்லியிருந்தனர். அது குறிப்பான நோக்கம் அல்லது இரக்கமான ஓர் செயலாகவோ, பிரதிபலன் பாராது தங்களுடைய நேரம் சக்தி அல்லது திறமையை செலவழிக்க விரும்பும் செயலாகவும் இருக்கலாம். விட்டிற்கு இந்த அட்டையோடு வந்த போது சேஸிற்கு வயது 6 மாத்திரமே. மேலும் எவ்வாறு மாற்றத்தை, தான் கொண்டு வரபோகிறோம் என தொடர்ந்து சிந்தித்துக்கொண்டேயிருந்தான். பனிக்காலத்தில் அயல் வீட்டாரின் நடைபாதையில் உள்ள பனிக்கட்டிகளை நீக்குவதோ அல்லது மற்றவருக்காக கதவைதிறந்துவிடுவதோ எதுவாயினும் சேஸின் இருதயம் அன்பினால் நிறைந்தும் நன்மையை பகிரவும் மாத்திரமே நாடியது. சேஸிற்கு கொடுக்கப்பட்ட வேலையிலிருந்து எங்கள் குடும்பத்தினர் கற்றுக்கொண்டது என்னவெனில், நாம் இளையவரோ, முதியவரோ, பணக்காரரோ, ஏழையோ நம் அனைவரிடத்திலும் கொடுக்க ஏதோ ஒன்று இருக்கும். அவர் கால மானபோது, நாங்கள் இந்த அடடையை அவர் இறுதிசடங்கிற்கு வந்திருந்த அனைவருக்கும் கொடுத்தோம். இந்நாள் வரையிலும் சேஸ் என்பவன் அதிகம் கொடுப்பதற்கு ஆர்வம் கொண்ட ஓர் அன்பான சிறிய பாலகன் என்பதின் நினைவாக அவ்வட்டைகளைக் கொடுத்துக்கொண்டிருக்கின்றோம். ஒவ்வொரு முறை நான் (pay it forward) செய்யும் போது, எனது நினைவில் எங்கள் சிறிய குமாரன் வருவது மாத்திரமல்லாமல், அது யாரோ ஒருவரின் நாளை பிரகாசிக்கச் செய்யும் ஒரு வாய்ப்பாகவும் நமது வெளிச்சத்தை பிரகாசிக்கச் செய்யும் வாய்ப்பாகவும் கருதுகிறேன். "தேவரீர் என் விளக்கை ஏற்றுவீர், என் தேவனாகிய கர்த்தர் என் இருளை வெளிச்சமாக்குவார்". (சங்கீதம் 18:28)

**நாங்கள் என்றுமே மறப்பதில்லை:**

எனக்கு விலையேறபெற்ற ஒரு காரியம் - நம்பிக்கைவைப்பதே. நம்முடைய சூழ்நிலைகள் தற்காலிகமானது என்று நான் அறிவேன். வாக்குத்தத்தம் செய்யப்பட்ட இராஜ்யம் நம் அனைவருக்காக காத்திருக்கிறது. ஒரு நாள் நம்முடைய பரலோக தந்தை (வெளி 21:4) **அவர்களுடைய கண்ணீர் யாவையும் தேவன் துடைப்பார்; இனி மரணமுமில்லை, துக்கமுமில்லை, அலறுதலுமில்லை,வருத்தமுமில்லை; முந்தினவைகள் ஒழிந்து போயின என்று விளம்பினது**, செய்வார் என்று நான் அறிவேன். (சங்கீதம் 73:26) **என் மாம்சமும் என் இருதயமும் மாண்டு போகிறது; தேவன் என்றென்றைக்கும் என் இருதயத்தின் கன்மலையும் என் பங்குமாயிருக்கிறார்** என்றும் நான் அறிவேன்.

நாங்கள் சேஸையும் அவரோடு நாங்கள் வாழ்ந்த அந்த அற்புதமான வாழ்க்கையையும் என்றுமே மறக்கமாட்டோம். அவன் பூமியிலிருக்கும் போதும் அவன் எங்களை விட்டு சென்ற பின்னும் எங்களுக்கு அவன் கற்று கொடுத்தவைகளுக்கு என்றுமே நன்றியுள்ளவர்களாக இருப்போம் அவன் இல்லாமல், இப்போது நாங்கள் இருக்கும் வண்ணமாக இருந்திருக்க மாட்டோம். இந்த அனுபவம் எங்கள் திருமணத்தை பலப்படுத்தியது, ஒரு சிறந்த தாயாக சகோதரியாக, மகனாக மற்றும் நண்பியாகவும் என்னை மாற்றியது - இதினிமித்தம் நான் மிகவும் நன்றியுள்ளவராக இருக்கிறேன்.

2014ம் வருடம் எங்கள் குடும்பம் மற்றொரு ஆண் பிள்ளை கோய்யை வரவேற்றது. கோய் எங்கள் வலிமையை புதுபித்து, எங்கள் வாழ்க்கையில் இன்னும் அதிகமான மகிழ்ச்சியையும் சந்தோஷத்தையும் கொண்டுவந்தான். உண்மையில்"" (சங்கீதம் 46:1-2) தேவனுக்கே மகிமை , தேவன் தாமே என்னையும், என் வாழ்க்கையையும் மற்றவர்களுக்கு சாட்சியாக தொடர்ந்து பயன்படுத்துவாராக.

"நீ அழாதபடிக்கு உன் சத்தத்தை அடக்கி, நீ கண்ணீர் விடாதபடிக்கு உன் கண்களைக் காத்துக்கொள் என்று கர்த்தர் சொல்லுகிறார்; உன் கிரியைக்குப் பலனுண்டென்று கர்த்தர் சொல்லுகிறார்; அவர்கள் சத்துருவின் தேசத்திலிருந்து திரும்பிவருவார்கள்." (எரேமியா 31:16)



# என் கிருபை உனக்கு போதும்

"அன்றியும், எனக்கு வெளிப்படுத்தப்பட்டவைகளுக்குரிய மேன்மையினிமித்தம் நான் என்னை உயர்த்தாதபடிக்கு, என் மாம்சத்திலே ஒரு முள் கொடுக்கப்பட்டிருக்கிறது; என்னை நான் உயர்த்தாதபடிக்கு, அது என்னைக் குட்டும் சாத்தானுடைய தூதனாயிருக்கிறது. அது என்னைவிட்டு நீங்கும்படிக்கு, நான் மூன்றுதரம் கர்த்தரிடத்தில் வேண்டிக்கொண்டேன். அதற்கு அவர்: என் கிருபை உனக்குப்போதும்; பலவீனத்திலே என் பலம் பூரணமாய் விளங்கும் என்றார். ஆகையால், கிறிஸ்துவின் வல்லமை என்மேல் தங்கும்படி, என் பலவீனங்களைக்குறித்து நான் மிகவும் சந்தோஷமாய் மேன்மைபாராட்டுவேன்." (2 கொரிந்தியர் 12:7-9)

**Rachel Griehs**

பின்வரும் கட்டுரையானது வாழ்நாள் முழுவதும் குறிப்பிடத்தக்க உடல்ரீதியான பிரச்சனைகளை சந்தித்த ஓர் இளைய சகோதரியின் கைப்பட எழுதப்பட்ட ஓர் தனிப்பட்ட சாட்சியாகும். பிரசுரத்திற்காக தொகுக்கப்பட்ட ஓர் தனிப்பட்ட காட்சியாக இக்கட்டுரை அமைந்திருக்கும்.

நான் பத்து வயதாக இருந்த போது என் காலில் ஏற்பட்ட ஒரு கடுமையான காயத்தினால் பல அறுவை சிகிச்சைகள் செய்யநேர்ந்தது. அந்த வயதில், நான் ஆண்டவரை என்னுடைய புகலிடமாக பாராட்டவில்லை. முப்பது வருடங்களுக்கு பின் மிகுந்த வேதனையினால் நடக்கக்கூடிய என்னுடைய திறன் குறைவுப்பட்டதினால் என் காலில் மற்றொரு அறுவைசிகிக்கை தேவைப்பட்டது. தொடர்ந்து சிகிச்சை பெறும்படிக்கு சிக்கல்கள் தொடர்ந்தது. கூடுதலாக, பிறப்பிலிருந்து ஏற்பட்ட பிரச்சனையினால் 18-ம் வயதில் மூன்று அறுவை சிகிச்சை செய்யட்டது. இதன் விளைவாக வாலிப வயதிலும், தொடர்ச்சியான பிரச்சனைகள் ஏற்பட்டது. இதை நான் தொடர்ந்து சமாளிக்க வேண்டியதாக இருந்தது. நியுயார்க் பட்டணத்தில் நான் வேலை செய்து கொண்டிருந்தபோது ஒரு மூளை வைரஸினால் ஏற்பட்ட கடுமையான தழும்பினால் என்னுடைய தொழிலை திசைதிருப்பப்பட்டது. கொஞ்ச காலம் என்னால் பார்க்க முடியாமல் இருந்தாலும், இந்த அனுபவங்களின் வழியாக, "என் கிருபை உனக்கு போதும்" என்று ஆண்டவர் சொன் வசனத்திற்கான விளக்கத்தை நான் புரிந்து கொண்டேன்.

அப்போஸ்தலனாகிய பவுலின் உடல்ரீதியான குறைப்பாட்டிற்கான காரணத்தை பற்றி நிச்சயமாக நாம் அறிந்திருக்கவில்லை என்றாலும் அவருக்கு அது மிக பாரமாக இருந்தது. இவ்வளவு கடினமான சூழ்சிலையிலும் பவுலின் விண்ணப்பத்தை ஆண்டவர் மறுத்தபோது, தேவன் பலத்தை தருவார் என்ற நம்பிக்கையில் பவுல் தொடர்ந்து செல்வார் என்பதை அவரே அறிந்திருந்தார். தேவன் எப்போதும் பிரச்சனைகளை அகற்றுவதில்லை அதற்கு பதிலாக அந்த பிரச்சனையை சமாளிப்பதற்கு வழியை கண்டுபிடிக்க அவர் உதவி செய்வார். சில காரணத்தினால், பெரும்பாலும் நமக்கு தெரியாத காரியங்களில், இடுக்கமான பாதையில் செல்லவும், மேலும் நம்முடைய குணலட்சனங்கள் வளர்ச்சி அடைவதற்கு நமக்கு உதவி செய்ய அனுபவங்கள் தேவை. மனுக்குலத்தை புரிந்துகொண்டு அவர்களோடு வேலை செய்வதற்கு, உடல் ரீதியாகவும் மனரீதியாகவும் அவர்கள் செய்யும் சகல காரியத்தையும் நாம் அனுபவிக்கவேண்டும்.

இப்படிப்பட்ட சவாலான அனுபவங்களை சமாளித்த அநேக எடுத்துகாட்டுகள் வேத நூலில் காணலாம். அவர்களின் கஷ்டங்கள் எப்போதும் அகற்றப்படவில்லை. ஆனால் அந்த சோதனையை சமாளிப்பதற்கு தேவன் அவர்களுக்கு ஆற்றலையும் பலத்தையும் கொடுத்தார். இந்த உலகத்திலும் கூட சில உயர்வான எடுத்துகாட்டுகள் உண்டு, நாம் கற்பனைக்கூட செய்து பார்க்க முடியாத அளவுக்கு அவர்கள் பாடுகளையும் பிரச்சனைகளையும் அனுபவித்திருக்கிறார்கள். இப்படிப்பட்ட சூழ்நிலையிலும் அவர்கள் கருணை காட்டி நமக்கு அநேக பாடங்கள் கற்றுகொடுத்தார்கள்.

**யோசேப்பு:**

யோசேப்பின் சூழ்நிலைகளை ஆதியாகமம் 39ம் அதிகாரம் விவரிக்கிறது. அவர் முதலில் மரணத்திலிருந்து தப்பினாலும், சகோதர்களால் அடிமையாக விற்கப்பட்டார். போர்திபாரின் வீட்டில் ஒரு முக்கியமானவராக உயர்த்தப்பட் போது, போர்திபாரின் மனைவியினால் அநியாயமாக குற்றம் சாட்டப்பட்டார். இதன் விளைவாக யோசேப்பு சிறைக்கு சென்றார். தேவன் தன்னை கைவிட்டாரோ என்று யோசேப்பு

எண்ணுவதற்கு பதிலாக தேவனுடைய நன்மைகளின் மேல் விசுவாசமுள்ளவராக இருந்தார். இறுதியில் அவர் சிறை கைதிகளுக்கு பொறுப்பாளியாக நியமிக்கப்பட்டார். யோசேப்பு மிக பயங்கரமான சூழ்நிலைகளை சகித்தாலும் தேவன் மேலுள்ள விசுவாசத்தை அவர் இழக்கவே இல்லை.

விசுவாசத்தை அசைக்கக்கூடிய சோதனைகளிலும் கஷ்டங்களிலும் நீடித்திருப் போர்களுள் யோசேப்பு ஒரு அருமையான மாதிரிப்படிவமாயிருக்கிறார். அவரைபோல, தேவன் மேல் சார்ந்திருக்கவும் கடினமான சூழ்நிலைகளின் இன்னும் அதிகமாக அவர் மேல் நம்பிக்கை வைக்கவும் கற்றுகொள்ளவேண்டும். விசுவாசம் வளர்ச்சி அடைவதற்கு, அது சோதிக்கப்பட்டு, நிரூபிக்கப்படவேண்டும். புது சிருஷ்டிகளாகிய நாம், யோசேப்பை போல ஆண்டவர் மேல் நம்பிக்கை வைத்து, நீடிய பொறுமையோடு சகித்தால் நமக்கு அழியாமையை வாக்களித்திருக்கிறார். "" (வெளி 2-10)

**சிம்சோன்:**

நியாயாதிபதிகள் 14 -16ம் அதிகாரங்கள் சிம்சோனின் கதையை கூறுகிறது. இவர் இஸ்ரயேலை 20 வருடங்கள் நியாயம் விசாரித்தார். தேவன் மேல் அவர் கொண்டிருந்த விசுவாசத்தின் அடையாளமாக சிம்சோன் நசரேய விருதத்தை மேற்கொண்டார். தேவன் மனித ஆற்றலுக்கு மேற்பட்டதான பலத்தை சிம்சோனுக்கு அருங்கொடையாக வழங்கினார். அவருடைய ஒழுக்கக்கேட்டின் பலவீனத்தினால், கடுஞ் சோதனைக்கு ஆளாக்கின தேலிலாள் வழியாக சிம்சோன் பெலிஸ்தியர்களுக்கு இரையானார். சின்சோனை பெலிஸ்தியர்களின் கையில் பிடித்து கொடுக்க தேலிலாள் மிக பெரிய ஒப்பந்தம் பேசி, அவருடைய பலத்தை அவரிடமிருந்து முற்றிலுமாக அகற்றுவதற்கு அவருடைய தலை முடியை வெட்டினாள் பெலிஸ்தியர்கள் அவருடைய கண்களை பிடிங்கினார்கள்.

சிறையில் அடைக்கப்பட்டிருந்த சிம்சோன், முற்றிலுமாக தேவனையே சார்ந்திருக்க வேண்டியதாக இருந்தது. அவர் பொறுமையோடு காத்திருக்கவேண்டியதாக இருந்தது. அவர் பொறுமையோடு காத்திருந்தபோது, அவருடைய பலம் அவருக்கு திரும்ப கொடுக்கப்பட்டது. முடிவில், அவருடைய ஜனங்களை இரட்சிக்க அவருடைய சேதமடைந்த ஜீவனை பலி செலுத்தினார். இரண்டு தூண்களின் மத்தியில் கட்டப்பட்ட சிம்சோன், 3,000 பெலிஸ்தியர்களை கொண்ட அந்த அரங்கத்தை கீழே தள்ளி அழிக்க தேவையான பலத்தை தேவனிடம் வேண்டினார் இறுதியாக அவருடைய பலம் தேவனுடைய கரத்தில் தான் உள்ளது என்று சிம்சோன் உணர்ந்தபின் இஸ்ரயேலரை இரட்சிக்கக்கூடிய மாபெரும் வேலையை முடிப்பதற்கு அவரை நடத்தியது. நம்மிடத்தில் இருந்து எவையாகிலும் எடுக்கப்பட்டிருந்தாலோ அல்லது நாம் எந்த அனுபவங்களில் ஊடே வந்திருந்தாலும், கர்த்தரிடத்தில் அவருடைய ஊழியத்திற்காக நம்மிடத்தில் உள்ள யாதொன்றையும் பயன்படுத்த வேண்டிக்கொள்ள வேண்டாமோ ?

**ஹெலன் கெல்லர்:**

ஹெலன் கெல்லர் ஒன்றறை வயதான போது (19 மாதங்கள்) ஒரு மூளை தொற்று நோய், அவரை காதுகேளாதவராகவும், பார்வையற்றவராகவும் விட்டது. அவள் பேச கற்றுகொள்ளாததால், அவளுக்கு குரல் வளமும் இல்லாததிருந்தது. புரிந்துகொள்ளப்படுவதற்கு அவள் சொந்தமாகவே அடையாளங்களை உருவாக்கினால், உதவியின்றி மேற்கொள்வது கூடாத அளவுக்கு இந்த குறைபாடு மிக கடுமையானதாக இருந்தது.

பார்வையில் பலவீனமான அன் சுலிவான் கெல்லரின் கற்பிக்கும் ஆசிரியரானாள். 49 வருடங்கள் அவள் கெல்லரோடு ஒரு ஆசிரியராக மட்டும் அல்ல பயிற்சியளிப்பவராகவும் வாழ் நாள் முழுவதும் ஒரு துணையாகவும் இருந்தாள். இந்த ஒரு உறவு "" என்ற திரைபடத்தில் சித்தரிக்கப்பட்டது. இவர்கள் முதலில் சந்தித்த போது ஹெலன் மிகவும் தவறாக நடந்து கொண்டதை சுல்லிவான் கண்டாள். அவள் உடனடியாக, ஹெலனின் கைகளில் உள்ளவிரல்களினால், அடையாள மொழியை கொண்டு அவளுக்கு கற்பிக்க துவங்கினாள். கெல்லரின் புரிந்துகொள்ளுதல் மிக குறைவாக இருந்த போதிலும் சுல்லிவானின் அவளுடைய முயற்சிகளை கொஞ்சம் கூட தளரவிடவில்லை. "குளிர்ந்த தண்ணீர் கைகளின் மேல் ஓடுகிறது." என்ற வார்த்தையை ஹெலன் புரிந்துகொண்ட அந்த நாள் எல்லாம் மாற்றம் அடைந்தது. இந்த ஒரு காரியத்தை அவள் புரிந்துகொண்டு, எல்லா காரியங்களுக்கும் உள்ள வார்த்தைகளை கற்றுகொள்ளவிரும்பினாள்.

நம்முடைய வாழ்க்கையும் இதே போன்று தான் உள்ளது. நமக்கு கற்பிக்கக்கூடிய ஆசிரியர்கள் நமக்கு உண்டு, ஆனால் புரிந்துகொள்ளக்கூடிய

தேவை வரும் வரையில், நாம் முன்னேறுவதில்லை. அப்போது நாம் தனிப்பட்ட பொறுப்புகளை ஏற்று கொண்டு, நம்முடைய இயலாமைகளை மேற்கொள்ள தேவனை நோக்கி ஜெபிக்கலாம்.

இயலாமைகள் தன்னுடைய வேகத்தை குறைக்க ஹெலன் கெல்லர் என்றுமே அனுமதிக்கவில்லை. குருடர்கள் படிப்பதற்கான எழுத்து முறையை கற்றுகொண்டு விரல்களில் தொட்டு சில அடையாள மொழிகளை படித்தாள். பார்வையற்றோருக்கும், காது கேளாதவர்களுக்கும் உள்ள பள்ளியில் சேர்ந்தாள். காது கேளாமல், பார்வையற்றவளாக இருந்த இவளே, ராட்கிலிப் பல்கலைகலகத்தில் முதல் முதலில் பட்டம் பெற்றாள் அவள் பேசுவதற்கு மட்டும் கற்றுகொள்ளாமல், ஒரு சிறப்புமிக்க பொது பேச்சாளரானாள். கிருபையினாலும், நல்ல தீர்மானத்தோடும், அன் சுல்லிவானின் விடாமுயற்சியின் உதவியோடும் ஹெலன் கெல்லர் ஒளிவீசும் வெளிச்சமானாள். துர்திஷ்டத்தில், விடாமுயற்சியோடு மேற்கொள்வதற்கு இவர் மாதிரியானாள்.

**நெல்சன் மண்டேலா:**

நெல்சன் மண்டேலா நிற வெறியை எதிர்த்து புரட்சி செய்த கருப்பராக இருந்தார். இவர் 27 வருடங்கள் சிறை வாழ்க்கைக்கு பின் சௌத் ஆப்பிரிக்காவின் ஜனாதிபதி ஆனார். அவர் சமாதானத்தோடு மரித்தாலும் அவர் சிறையிலிருந்த போது தான், இந்த உலகத்தின் மேலுள்ள தன்னுடைய பார்வையை மாற்றினார்.

மண்டேலா ஒரு தீவிரவாதியாக இருந்தார் நிறவெறியை, தீவிரவாதத்தால் மட்டுமே மேற்கொள்ள முடியும் என்று அவர் நம்பினார். அவர் கார்ல் மார்க்ஸின் மாணவனுமாகவும் இருந்தார். இவர் பொதுவுடைமைக்கொள்கை குழுவை சேர்ந்திருக்கலாம் என்று என்னப்படுகிறது. இதன் விளைவாக அவர் சிறைபிடிக்கப்பட்டு, இராஜதுரோகம் செய்ததாக குற்றம் சுமத்தப்பட்டார். ஆனால் குற்றவாளி என்று, தீர்ப்பளிக்கப்படவில்லை. அதற்குபின் சமாதானமான இடங்களில் அவர் ஒரு போரில் ஈடுப்பட்டுள்ள ஒரு குழுவை நிறுவி, இராணுவ அமைவுகள், இயந்திர ஆற்றல் கருவிகள் கைபேசி தொலைபேசி தந்திகள், ஏற்படுத்தி, குண்டுகள் வீசுவதற்கு எத்தனித்தார். மீண்டும் மண்டேலா நிறுத்தப்பட்டு, அரசாங்கத்தை தலைகீழாக எறிவதற்கு முயற்சி செய்து கொண்டிருக்கிறார் என்று குற்றம் சுமத்தப்பட்டார். இவர் 27 வருடங்கள் சிறைச்சாலையில் இருக்கும்படிக்கு தீர்ப்பு வழங்கப்பட்டது.

அந்த 27 வருடங்களாக, மண்டேலா, தன்னுடைய இருதயத்தில் ஒரு முழுமையான மாற்றத்தை அனுபவித்தார். வன்முறை மற்றும் பகையிலிருந்து சமாதானம் மற்றும் எதிரிகளை நேசிக்கக்கூடிய அன்பு என்று மாறினார். வெள்ளை காவலர்கள் இரக்கம் காட்டினார்கள் அவருடைய விடுதலையை தொடர்ந்து அவர் சௌத் ஆப்பிரிக்காவின் ஜனாதிபதியாக தேர்வுசெய்யப்பட்டார். அவருடைய முன்னால் பாதுகாவலர் ஒருவரை தன்னுடைய தொடக்க விழாவுக்கு அழைத்திருந்தார்.

"ஜனங்கள் வெறுப்பதற்கு கற்றுகொள்ள வேண்டும், இவர்கள் வெறுப்பதை கற்று கொள்ள முடிந்தால், மற்றவர்களை நேசிக்கவும் அவர்களுக்கு கற்பிக்கலாமே, ஏனெனில், அன்பு இயற்கையாகவே வரக்கூடியது" என்று நெல்சன் மண்டேலா தன்னுடைய வரலாறு சுருக்கத்தில் கூறுகிறார். பகைப்பதற்கு இயற்கைக்கு மாறான முயற்சிகள் தேவை என்று அவர் கூறினார். அவருடைய மனமாற்றம் நமக்கு கிறிஸ்தவர்களுக்கு எதிராக செயல்பட்ட பவுலின் மனமாற்றத்தை பற்றி நினைவுப்படுத்துகிறது. அதற்குபின் அவர் கிறிஸ்துவுக்காக ஒரு ஆழமான அன்பை வளர்த்து கொண்டார்.

**என் தனிப்பட்ட வாழ்க்கையில் பயன்பட்ட பவுலின் வார்த்தைகள்:**

முன்னதாக நான் கூறியபடி 18 வயதில் கண்டுபிடிக்க முடியாத ஒரு பிறவி முரன்பாட்டினால் நான் கடுமையான முதுகு வலியினால் அவதிப்பட்டேன் இந்த பிரச்சனை அறுவை சிகிச்சையினால் தான் தீர்மானிக்கப்படும். அந்நேரத்தில் நான் பள்ளியில் அந்த வருடத்தை முடிப்பதற்கு நான் உதவிகளை வேண்டுவதற்கு அதிகமான நேரத்தை செலவு செய்தேன். இந்த பிரச்சனைக்கு முன் நான் ஒரு பொறுமையான நபராக இருந்ததில்லை. ஆனால் இந்த அனுபவத்தின் போது அந்த வலியிலிருந்து சுகம் பெறும் வரையில் நான் நீடிய பொறுமையை கற்று கொண்டேன். நெல்சன் மண்டேலாவின் அனுபவம் அவருடைய மேற்பார்வையை மாற்றினது போல, நானும் ஒரு எல்லையிலிருந்து மற்றொரு எல்லைக்கு சென்றேன்.

அடுத்து 17 வருடங்களுக்குள் என்னுடைய முதுகு தண்டில் இன்னும் இரண்டு அறுவை சிகிச்சை தேவைப்பட்டது. ஆண்டவர் மட்டுமே என் வேதனையை அறிந்திருந்தார். என்னுடைய வாழ்க்கையில் நான் ஒரு உற்சாகமான தடல்தட (athlet) விளையாட்டு வீராங்கனையாக இருந்தேன் ஆனால் இப்போதோ, வலியில்லாமல் ஒரு நாள் கூட என் வாழ்க்கை கடந்து செல்லவில்லை. சிம்சோனின் கண்கள் பிடுங்கப்பட்ட போது, அவர் தனிமையில் இருந்தது போல, தொடர்ந்து வந்த பிரச்சனைகளினால் இந்த கஷ்டங்களை நான் கடக்கும் போது ஆண்டவர் மேல் மட்டுமே என் நம்பிக்கையை வைக்க வேண்டியதாக இருந்தது.

என்னுடைய வாழ்க்கையின் இந்த பகுதியில் நான் நியுயார்க்கு பட்டணத்தில் வசித்து வந்தேன். அங்கு என்னுடைய பட்டபடிப்பை படித்துகொண்டு வேலை செய்தேன். 2000 த்தில் ஒரு நரம்பியல் நோய் என்னை தாக்கயிருப்பதற்குரிய விநோத அறிகுறியை நான் அனுபவித்தேன். நான் நான்கு அடுக்கு குறிப்புகளை கண்டதினால் என்னால் பியானோ வாசிக்க முடியவில்லை. ஒரு வேதமாணவர் திருமணத்திற்கு நான் சென்றபோது, சரியாக என்னால் பார்க்க முடியாததினால் நான் தடுமாறினேன். இறுதியாக MRIscan-ல், என் மூளையில் காயம் ஏற்பட்டிருப்பதை கண்டுபிடிக்கப்பட்டது. நான் மிக பயந்து, உதவி நாடி தேவனிடம் ஜெபித்தேன். மத்திய நரம்பியல் முறையில் ஒரு வைரஸ் தாக்கியது என்று நியூயார்க்கில் உள்ள ஒரு நரம்பியல் நிபுணர் இறுதியாக கண்டுபிடித்தார். என்னால் பல வகை தூண்டுதல்களை செயல் முறை படுத்த முடியவில்லை. என்பதை தெரிந்து கொண்டேன். மேலும் இதன் விளைவாக என்னுடைய வேலையை விட வேண்டியதாக இருந்தது. அதற்கு பின் சுமார் ஆறு மாதங்களுக்கு என்னுடைய பெற்றோரால் நான் பராமரிக்கப்பட்டேன். கொஞ்சம் கொஞ்சமாக அந்த வைரஸ் தன்னுடைய ஓட்டத்தை முடித்தபின், நான் என்னுடைய ஆற்றலை திரும்ப பெற்றுகொண்டேன். இந்த முறை ஒவ்வொரு முறையும் என்னை கண்ணோக்கும் படிக்கு நான் கர்த்தரிடத்தில் தொடர்ந்து ஜெபித்தேன். "என் கிருபை உனக்கு போது" என்று அவர் கூறினார். என்னுடைய முதுகு பிரச்சனை தொடர்ந்தது. அந்த பிரச்சனையினால் சில நேரங்களில், என்னுடைய செயல்பாடுகள் குறைக்கப்பட்டது. மாத்திரை மருந்துகளினாலும், மருத்துவ சாதனங்களின் பயன்பாடுகளினாலும் இடைவிடாத வேதனைகளை நான் சமாளித்துகொண்டேன்.

இந்த அனைத்து அனுபவங்களின் வழியாக, என்னால் எதையும் தனியே செய்ய முடியாது என்று உணர்ந்தேன். சிறையிலிருந்த யோசேப்பை போல, நம்முடைய சோதனைகளை நாம் தான் பொறுமையோடு சகிக்கவேண்டும். என்று நான் கற்றுகொண்டு, ஒவ்வொரு நாளும் கர்த்தர் கொடுத்த பலத்திற்காக நன்றியோடு ஸ்தோத்தரித்தேன். முடிவில் சகலத்தையும் தாங்கி கொள்ள சிம்சோன் மற்றும் யோசேப்பு தேவனுடைய கிருபையின் மேல் சார்ந்திருந்தார்கள். நெல்சன் மண்டேலா கசப்பான தன்மை பயனற்றதாக கண்டார். ஹெலன் கெல்லர், தீர்மானங்கள், அர்ப்பணிப்பு மற்றும் மற்றவர்களிடம் பெற்ற உதவியினால், துரதிஷ்டத்தை எதிர்த்து போராடினார். நீடிய பொறுமையை பற்றிய பாடம் விலையேறப்பெற்றது. "தேவனே, நான் போதுமான அளவுக்கு உபத்திரவம் அடைந்துவிட்டேனா ?" என்று நான் கூறுவதில்லை. நாம் தேவையான பாடங்களை கற்றுகொள்வதற்கு தேவன் நமக்கு தனித்துவமான விசேஷித்த அனுபவங்களை கொடுக்கிறார் என்று நான் கற்றுகொண்டேன். "தேவனுடைய கிருபை போதும்" என்று நாம் கூறுவதற்கு இந்த அனுபவங்கள் உதவி செய்கிறது.

தேவனிடம் நாம் கொண்ட விசுவாசத்தை நிரூபிக்க இவைகள் உதவுகிறது. "அவர் என்னைக் கொன்றுபோட்டாலும், அவர்மேல் நம்பிக்கையாயிருப்பேன்; ஆனாலும்: என் வழிகளை அவருக்கு முன்பாக ரூபகாரம்பண்ணுவேன்." (யோபு 13:15) என்று யோபு சொன்னதை போல நான் சொல்லவேண்டும் தேவன் மேல் சார்ந்திருப்பது விடாமுயற்சி செய்வதற்கு உதவி செய்தது. இது ஒரு முறையோ, இரண்டு, மூன்று முறையோ, அல்ல மரணம் வரையில் இது தொடரும் என்று நம்பிக்கை யோடிருக்கிறோம். தேவன் அனுமதிக்கக்கூடிய எந்த முன்னேற்பாடானாலும், சரி கிறிஸ்துவின் மணவாட்டியாக மாறுவதற்கு ஏற்றபடி என்னுடைய குணலட்சணங்கள் மாறுவதற்கு உதவி செய்யும் என்று நான் அறிவேன். "நீங்கள் தேவனுடைய சித்தத்தின்படி செய்து, வாக்குத்தத்தம் பண்ணப்பட்டதைப் பெறும்படிக்குப் பொறுமை உங்களுக்கு வேண்டியதாயிருக்கிறது. "எபிரேயர் 10:36 என்று கூறுகிறது.

"அவர் தமக்குப் பயந்தவர்களுடைய விருப்பத்தின்படி செய்து, அவர்கள் கூப்பிடுதலைக் கேட்டு, அவர்களை இரட்சிக்கிறார்." (சங்கீதம் 145:19)

கூட்டமைப்பு

# பிணைக்கப்படும் பந்தம் ஆசீர்வதிக்கப்படும்



"அவர்களெல்லாரும் மிகவும் அழுது, என் முகத்தை நீங்கள் இனிப் பார்க்கமாட்டீர்களென்று அவன் சொன்ன வார்த்தையைக்குறித்து அதிகமாய்த் துக்கப்பட்டு, பவுலின் கழுத்தைக் கட்டிக்கொண்டு, அவனை முத்தஞ்செய்து, கப்பல்வரைக்கும் அவனுடனே கூடப்போனார்கள்." (அப்போஸ்தலர் 20:37,38)

**Michael Colletti**

கிறிஸ்துவ ஐக்கியத்திற்கு இந்த தலைப்பு ஒரு அற்புதமான வெளிப்பாடு. அன்பு மற்றும் நட்புக்குரிய பந்தத்தை நாம் பெற்றிருப்பதினாலே நாம் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள் என்று இது கூறுகிறது. ஆனால் உண்மையான கிறிஸ்துவ ஐக்கியம் என்றால் என்ன ? இந்த பந்தம் நம்மை ஒருங்கிணைத்து கட்டுகிறதை நாம் அனுபவித்து கொண்டிருக்கிறோம் என்பதை கிறிஸ்துவை பின்பற்றுகிறவர்களாகிய நமக்கு எப்படி தெரியும் ?

நாம் ஞானிகள் அல்லது மதியீனர்கள், நீதிமான்கள் அல்லது தீமையானவர்களாக மாறுவதற்கு நம்முடைய ஐக்கியம் அல்லது கூட்டுறவு மிக முக்கியம். "மோசம் போகாதிருங்கள்; ஆகாத சம்பாஷணைகள் நல்லொழுக்கங்களைக் கெடுக்கும்." (1கொரிந்தயர் 15:33)எந்த அளவுக்கு மற்றும் சகோதரர்களோடு எந்த விதமான ஐக்கியம் தேவை என்று தேவன் நன்கு அறிவார். "மேலும், அன்புக்கும் நற்கிரியைகளுக்கும் நாம் ஏவப்படும்படி ஒருவரையொருவர் கவனித்து; சபை கூடிவருதலைச் சிலர் விட்டுவிடுகிறதுபோல நாமும் விட்டுவிடாமல், ஒருவருக்கொருவர் புத்திசொல்லக்கடவோம்; நாளானது சமீபித்துவருகிறதை எவ்வளவாய்ப் பார்க்கிறீர்களோ அவ்வளவாய்ப் புத்தி சொல்ல வேண்டும்." (எபிரெயர் 10:24,25)என்று அவர் தம்முடைய விசுவாசமுள்ள பிள்ளைகளுக்கு கூறுகிறார். அன்பை வெளிப்படுத்துவதற்கும், நன்மை செய்யவதற்கும், ஒருமித்து கூடிவருவதற்கும் ஊக்குவிக்கும்படிக்கே இந்த வார்த்தைகள் இங்கு கருத்தில் கொள்ளப்படுகிறது.

ஆவிக்குரிய பாதுகாப்பு ஆவிக்குரிய ஒற்றுமையினாலே கிடைக்கிறது. இந்நாளில், நேரடியாக நாம் ஒருவரை ஒருவர் சந்திக்க இயலாத போதிலும், நவீன தொழில் நுட்பத்தினால் நாம் ஒருமித்து கூடுவதற்கு அநேக வழிகள் உண்டு. இந்த நவீன யுகத்தில் பேஸ் புக் (facebook) மற்றும் பல ஊடகங்கள் வழியாக ஒருமித்து கூடுவது இன்னும் வசதியாக உள்ளது. நாம் நேருக்கு நேராக சந்திப்பது தேவை இல்லாதது என்று சிந்தித்து, நம்மை நாம் ஏமாற்றி கொள்ளும் அளவுக்கு, இவைகள் சாத்தியமாகியுள்ளது. நாம் நேருக்கு நேர் சந்திக்கும்போது நம்முடைய சகோதரர்களோடு, ஒரு இனிய உறவைப்பெற்றுக்கொள்ள முடிகிறது. ஒருவரிடமிருந்து ஒருவர் பரஸ்பர நன்மைகளை பெறலாம். மற்றும் உண்மையில் ஒருவரை ஒருவர் காணும் போது ஒரு சாதகமான சார்பு நிலையை உருவாக்குகிறது. ஒற்றுமை ஒரு இலக்கல்ல, அது ஒரு துணை - பொருள்( by product)

நாம் ஒருமித்து கூடும் போது ஆண்டவரிடம் நெருங்குவோம். நம்முடைய சகோதரர்களோடு ஒருமித்து கூடும்போது, நாம் தேவனோடு கூட இருக்கக்கூடிய நெருக்கமே சிறந்தது என்று சிலர் கருதுகிறார்கள். நாம் நேரடியாக ஒருவரை ஒருவர் காணும்போது, அன்பை காட்டவும், நன்மை செய்வதற்கும், உற்சாகப்படுத்துவதற்கு சாத்தியமாகிறது. நாம் இப்படியாக சந்திக்கும்போது வீட்டில் இருக்கக்கூடிய வசதிகளையும் நேரம் மற்றும் பயணத்தின் சிரமங்களை நாம் பலி செலுத்துகிறோம். "அப்படியிருக்க, சகோதரரே, நீங்கள் உங்கள் சரீரங்களைப் பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக்கொடுக்கவேண்டுமென்று, தேவனுடைய இரக்கங்களை முன்னிட்டு உங்களை வேண்டிக்கொள்ளுகிறேன்; இதுவே நீங்கள் செய்யத்தக்க புத்தியுள்ள ஆராதனை." (ரோமர் 12:1) ஆயினும் மோசமான உடல் நலத்தினாலும் தூரம்

மற்றும் தவிர்க்கமுடியாத காரணத்தினாலும் ஒருவரை ஒருவர் சந்திபதற்கு கஷ்டப்படுகிறவர்களுக்கு இக்காலத்து தொழில் நுட்பத்தின் பயன்பாடு ஆவிக்குரிய கூடுகை மற்றும் அதன் முழுமையான எல்லா காரிங்களுக்கும் ஒரு அற்புதமான வழியாக காணப்படுகிறது.

**கூட்டுறவு (ஐக்கியம்) அத்தியாவசியம்**

நம்மை கட்டுகிற பந்ததிற்கு கூட்டுறவு ஒரு முக்கியமான மூலப்பொருளாகும். நம்முடைய ஆவிக்குரிய வளர்ச்சிக்கும் இது மிக அவசியம். நாம் ஒவ்வொரு முறையும் நம்முடைய சகோதரரை சந்தித்து தேவனுடைய திட்டங்கள் மற்றும் நோக்கங்களைபற்றி பேசும்போது, நம்முடைய அன்பான தேவனை பற்றி அதிகதிகமாக புரிந்துகொள்வதற்கு நம்மை தூண்டுகிறது. "ஞானிகளோடே சஞ்சரிக்கிறவன் ஞானமடைவான்; மூடருக்குத் தோழனோ நாசமடைவான்." (நீதிமொழிகள் 13 :20)

"இதோ, சகோதரர் ஒருமித்து வாசம்பண்ணுகிறது எத்தனை நன்மையும் எத்தனை இன்பமுமானது?" (சங்கீதம் 133: 1)கிறிஸ்தவர்கள் மத்தியில் ஒருமனப்பாடு அதிகமாக விரும்பப் படுகிறது. ஆனால் ஏது உண்மையான ஒறுமனப்பாடு ? இசையை பொருத்த வரையில், ஒரேநேரத்தில் ஏற்படும் அதிர்வெண்கள், சுருதிகள் (குரல்) மற்றும் அவைகளின் கட்டுமானங்கள் மற்றும் அதை தொடர்புள்ள கொள்கைகள் அனைத்தும் அதில் அடங்கும்.

இசைவு என்ற வார்த்தை வேதாகமத்தில் காணப்படுவதில்லை. இது harmonia என்ற கிரேக்க வார்த்தையிலிருந்து வந்தது. இதற்கு கூட்டு ஒப்பந்தம், இசைவு என்று பொருள். சத்தியத்தின் அழகான இசையை ஏற்படுத்துவதற்கு ஒருமித்து வருவதற்கான கிறிஸ்தவர்களின் விருப்பத்திற்கு இது எவ்வளவு பொருத்தமாக உள்ளது.

நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள், நீங்கள் என்ன சிந்திக்கிறீர்கள், நீங்கள் என்ன உணருகிறீர்கள் மற்றும் நீங்கள் என்ன செய்கிறீர்கள் என்று நான்கு மனித செயல்பாடுகளின் உடன்பாடே இணக்கம் அல்லது இசைவாகும். உங்களுடைய சிந்தைகளுக்கும், உணர்வுகளுக்கும் செயல்களுக்கும் வார்த்தைகளுக்கும் ஒரு ஒற்றுமை காணப்படுகிறதோ, நீங்கள் அகபுறத்திலும் வெளிபுரத்திலும் ஒரு சமாதானத்தை அனுபவிக்கலாம். அப்போஸ்தலர் பவுல், பேதுருவை எவ்வாறு எதிர்த்தார் என்று நினைத்து பாருங்கள். (கலாத்தியர் 2:11)மேலும், பேதுரு அந்தியோகியாவுக்கு வந்தபோது, அவன்மேல் குற்றஞ்சுமந்ததினால், நான் முகமுகமாய் அவனோடே எதிர்த்தேன். ஆயினும், அவர்களின் உறவில் எந்த விதமான விரிசலும் காணப்படவில்லை. இந்த இரண்டு அப்போஸ்தலர்களின் எழுத்துக்களை நாம் பார்க்கும் போது மொத்தத்தில் இவர்கள் இருவருமே இசைந்திருப்பது தெளிவாகிறது. பரிசுத்தவான்களை ஒரு ஆவிக்குரிய வீடு அல்லது ஆலயம் என்று கூறுகிறார்கள். "ஜீவனுள்ள கற்களைப்போல ஆவிக்கேற்ற மாளிகையாகவும், இயேசுகிறிஸ்து மூலமாய்த் தேவனுக்குப் பிரியமான ஆவிக்கேற்ற பலிகளைச் செலுத்தும் படிக்குப் பரிசுத்த ஆசாரியக் கூட்டமாகவும் கட்டப்பட்டு வருகிறீர்கள்." (1பேதுரு 2:5) என்று கூறுகிற பேதுருவின் வார்த்தைகளை கவனியுங்கள் "அப்போஸ்தலர் தீர்கதரிசிகள் என்பவர்களுடைய அஸ்திபாரத்தின்மேல் கட்டப்பட்டவர்களுமாயிருக்கிறீர்கள்; அதற்கு இயேசுகிறிஸ்து தாமே மூலைக்கல்லாயிருக்கிறார்; அவர்மேல் மாளிகை முழுவதும் இசைவாய் இணைக்கப்பட்டு, கர்த்தருக்குள் பரிசுத்த ஆலயமாக எழும்புகிறது; அவர்மேல் நீங்களும் ஆவியினாலே தேவனுடைய வாசஸ்தலமாகக் கூட்டிக்கட்டப்பட்டு வருகிறீர்கள்." (எபேசியர் 2:20-23) என்று கூறும் பவுலின் இசைவான வாக்கியத்தை கவனியுங்கள்

**கூட்டுறவுக்கு (ஐக்கியம்) அடிப்படை**

ஐக்கியத்திற்கும், அதன் பக்திவிருத்திக்கும் ஏதுவாக, அநேக அடிப்படைத்தத்துவங்கள் தேவைப்படுகிறது. முதலாவது, ஒருமித்து கூடிவருபவர்கள், அவர்கள் மத்தியில் வேறுபாடுகள் இருந்தாலும், அவர்களுக்குள் பொதுவான அடிப்படை நம்பிக்கை இருக்கவேண்டும். "அவர்கள் அப்போஸ்தலருடைய உபதேசத்திலும், அந்நியோந்நியத்திலும், அப்பம் பிட்குதலிலும், ஜெபம்பண்ணுதலிலும் உறுதியாய்த் தரித்திருந்தார்கள்." (அப்போஸ்தலர் 2:42) பொதுவான நம்பிக்கை வைத்திருப்பதே, ஐக்கியத்திற்கு முதல்

நிபந்தனையாகும். ஆனால் சங்கீதம் 133:1ல் பரிசுத்தவான்கள் ஒருமித்து வாசம் செய்வதை பற்றி விவரிக்கப்படுகிறது. "இதோ, சகோதரர் ஒருமித்து வாசம்பண்ணுகிறது எத்தனை நன்மையும் எத்தனை இன்பமுமானது?" அது இன்பமும், நன்மையுமாக இருப்பதை கவனியுங்கள் இந்த உலகத்தில் நன்மையான காரியங்கள் உண்டு ஆனால் அது இன்பமாக இருப்பதில்லை. சில காரியங்கள் இன்பமாக இருக்கும், நன்மையாக இருக்காது.

இஸ்ரயேலுக்கு நியாயப்பிரமாணத்தின் கீழ் கொடுக்கப்பட்ட பிரமாணங்களுக்கு மேலாக, இயேசுவின் அடிச்சுவடுகளை பின்பற்றுபவர்களுக்கு ஒரு புதிய பிரமாணம் கொடுக்கப்பட்டது. இந்த புதிய பிரமாணம் நம்முடைய தலையிடமிருந்து வருகிறது. இது சுவிசேஷ யுக சபைக்கு பொருந்துகிறது. "நான் உங்களில் அன்பாயிருக்கிறதுபோல நீங்களும் ஒருவரிலொருவர் அன்பாயிருக்கவேண்டுமென்பதே என்னுடைய கற்பனையாயிருக்கிறது." (யோவான் 15:12) என்பதே அந்த புதிய பிரமாணம் ஆகும். சுத்த இருதயத்தோடு ஒருவரில் ஒருவர் ஊக்கமாக அன்பு கூறுங்கள் என்று அப்போஸ்தலனாகிய பேதுரு அன்புக்கு உயர்த்தரமான அகாபே என்ற கிரேக்க வார்த்தையை பயன்படுத்துகிறார். இதுபிறர் நன்மை பேணும் கொள்கையை போலுள்ளது அதாவது மற்றவர்களின் நலனுக்காக சுயநலமற்ற ஒரு அக்கறையாகும். - கிறிஸ்துவ அன்பிலும், ஆவியிலும் இது ஆழமாக செல்ல செல்ல இது வித்தியாசமானதாக உள்ளது. பிறர் நன்மையை பேணும் கொள்கை இக்காலத்திற்குரியதாக இருந்தாலும், அகாபே அன்பு, மற்றவர்களுக்கான நித்திய ஆசீர்வாதத்தை கொண்டுள்ளது.

"உண்மையில், நீங்கள் உங்கள் சகோதரர்களை நேசிக்கிறீர்களா" என்ற கேள்வியை ஆராய்ந்தால், ஒரு நேர்மையான சுய மதிப்பீடு மட்டுமே உண்மையான பதிலை கூறமுடியும். சகோதரர்களை நேசிப்பது மிக முக்கியம். அப்போஸ்தலனாகிய யோவான் கூறும்போது, "நாம் சகோதரரிடத்தில் அன்புகூருகிறபடியால், மரணத்தைவிட்டு நீங்கி ஜீவனுக்குட்பட்டிருக்கிறோமென்று அறிந்திருக்கிறோம்; சகோதரனிடத்தில் அன்புகூராதவன் மரணத்திலே நிலைகொண்டிருக்கிறான்." (1யோவான் 3:14) என்று கூறுகிறார். வசனங்களை பொறுத்த வரையில், ரசலின் விளக்க குறிப்பு என்னவெனில், "பரிபூரண அன்பு பயத்தை புறம்பே தள்ளும்" என்ற கொள்கையை, கணவன் மனைவி, பெற்றோர் குழந்தைகளுக்கு இடையில் செயல்படவேண்டும். ஒரு கணவனை பார்த்து பயப்படக்கூடிய ஒரு மனைவி அங்கு பரிபூரண அன்பில்லாததனால் சந்தோஷமாக இருக்க முடியாது. அதே போல பிள்ளைகள் பெற்றோரை பார்த்து அல்லது பெற்றோர் பிள்ளைகளை பார்த்து பயந்தார்களானால், உரிமை சார்ந்த உண்மையான அன்போடு நேசிக்க முடியாது. ஒவ்வொருவரும் மற்றவர்களை காயப்படுத்தவோ, உணர்ச்சியை புண்படுத்துவதற்கு மிகவும் அஞ்ச வேண்டும். தேவன் தம்முடைய எல்லா அறிவுள்ள சிருஷ்டிகளும் அந்த பரிபூரண அன்பை பயிற்சி பெற வேண்டும் என்று விரும்பக்கூடிய அந்த பரிபூரண அன்பை அடைவதற்கு கடும் முயற்சி எடுக்க வேண்டும். (What Pastor Rusell Said pg 450)

நாம் சத்தியத்தில் வளரும்போது, நாம் நம்முடைய தவறுகளை தெளிவாக காண்கிறோம். மேலும் நம்முடைய சகோதரர்களின் குற்றங்களையும் காணமுடிகிறது. விழுந்துபோன சுபாவத்தில் இருக்கும் நாம் மற்ற விசுவாசிகளின் பலத்தை காட்டிலும் அவர்களின் பலவீனங்களை பார்ப்பதற்கான அதிக ஆற்றலை உடையவர்களாக இருக்கிறோம். அவர்களின் பலவீனங்களை பூதக்கண்ணாடியிலும், பலத்தை தொலைநோக்காடி (telescope)யிலும் பார்ப்பது போலிருக்கிறது. ஆகவே, நாம் அகாபே அன்பை வளர்த்துகொள்ளாவிட்டால் சந்தேகத்திற்கு இடமின்றி, நாம் தொடாந்து மற்றவர்கள் மேல் குற்றம் சாட்டிகொண்டே இருப்போம்.

"நம்முடைய இருதயங்களை கிறிஸ்துவ அன்பில் கட்டக்கூடிய அந்த பந்தம் ஆசீர்வதிக்கப்பட்டது... என்று நாம் பாடும் போது, நமக்காக பிதா மற்றும் அவருடைய குமாரனாகிய நம்முடைய ஆண்டவராம் கிறிஸ்து இயேசுவின் அன்பை நமக்காக கோரக்கூடியவர்களாக இருக்கிறோம். நாம் தேவனுடைய இரக்கத்தையும் அவருடைய பரிசுத்த ஆவியையும், தூய்மையான சத்தியத்தையும், நன்கு புரிந்தவர்களாக மற்றும் நாம் அனைவரும் ஒருமித்து, பூமியில் உள்ள குடும்பங்களை ஆசீர்வதிப்பதன் வழியாக மனித குடும்பத்திற்கு அந்த அன்பை விரிவாக வெளிப்படுத்தக்கூடிய ஒரு

பணித்திட்டத்தையும் பெற்றுள்ளோம்." அன்பு சகல பாவத்தையும் மூடும்" (1பேதுரு 4:8)

## ஒற்றுமை, சமாதானம் மற்றும் கருத்துரை (opinion)

ஒற்றுமை என்பது சமாதானத்தை காத்துகொள்வதை போல ஒன்றா ? "பாதுகாப்பு" என்று கருதப்படும் வரிசைப்படுத்தப்பட்ட நம்பிக்கைகள் மற்றும் ஒழுக்கங்களை நாம் அனைவரும் ஒரு வகுப்பாரா உடன்பட்டால் நாம் அனைவரும் ஒற்றுமையாக இருக்கிறோம் என்று நாம் நம்புகிறோமா ? ஒவ்வொரு subject மற்றும் எல்லா ஒழுக்கங்களிலும் நமக்கு கருத்து வேறுபாடுகள் இருப்பதினாலே நாம் எப்படி ஒருங்கிணைந்திருக்க முடியும் ? சிந்திப்பதிலும், ஒழுக்கத்திலும் ஒருவரை போலவே ஒருவர் துல்லியமாக இருக்கவேண்டுமா ? (clone)சூடான விவாதங்களை உண்டாக்கும் தலைப்புகளை விவாதிக்க வேண்டாம் என ஒத்துக்கொள்ளும் இந்த மனப்பான்மையை தான், இயேசு "தானும் பிதாவும் ஒன்றாயிருக்கிறது போல நாமும் ஒன்றாயிருக்கும்படிக்கு ..."அவர்களெல்லாரும் ஒன்றாயிருக்கவும், பிதாவே, நீர் என்னை அனுப்பினதை உலகம் விசுவாசிக்கிறதற்காக, நீர் என்னிலேயும் நான் உம்மிலேயும் இருக்கிறதுபோல அவர்களெல்லாரும் நம்மில் ஒன்றாயிருக்கவும் வேண்டிக்கொள்ளுகிறேன். "(யோவான் 17:21) என்றும் பிரார்த்தனையின் வாயிலாக "ஒற்றுமை" பற்றி கூறிவருகிறாரா ?ஒன்றுமைக்கு கருத்து வேறுபாடு இன்மைக்கும் இடையில் நாம் வேறுப்படுத்திப்பார்க்கலாம்.

சமாதானத்தை காத்துகொள்வது என்ற காரியம் உண்மையான ஒற்றுமை அல்ல, ஏனெனில் இது பரலோக பிதாவின் சித்தத்தை செய்வதை அடிப்படையாக கொண்டிருக்கவில்லை. "என்னுடைய சித்தமே அல்ல, உம்முடைய சித்தமே ஆக கடவது" என்று கூறி இயேசு அவருடைய சித்தத்தை பிதாவின் சித்தத்திற்கு ஒப்புகொடுத்ததினால் இயேசுவும் பிதாவும் ஒன்றாயிருக்கிறார்கள். (லூக்கா 22:42, R5749) உண்மையான ஒற்றுமைக்கு நேர்மையும், வெளிப்படைத்தன்மை மிகவும் அவசியம். எந்த இரண்டு சகோதரர்களும் ஒரே விதமாக சிந்தித்து செயல்பட முடியாது என்ற ஒரு நேர்மையான மதிப்பீடு காண்கிறது. உண்மையில் கருத்து வேறுப்பாட்டில் உள்ள பல்வேறு வித்தியாசங்கள் நட்பை சுவாரஸ்யமாக்கும். அகாபே அன்பை நம்முடைய இலக்காக கொண்டிருந்தால், நண்பர்கள் சமாதானமாக இருக்கலாம், இந்த வழியில், இவர்களுக்குள் வேறுபாடுகள் காணப்பட்டாலும் ஒற்றுமையாக இருப்பார்கள். ஒரு கருத்தை பற்றி கலந்தாய்வு செய்யும் போது, அந்த கருத்தை பற்றிய பலம் மற்றும் பலவீனமாகிய இரண்டு கோணங்களில் நம்முடைய மற்றும் மற்ற நபரின் கண்ணோட்டத்தை பற்றி சரியாக புரிந்து கொள்வதற்கு இது ஆரோக்கியமாக இருக்கும்.

## இரும்பை இரும்பு கருக்கிடும் (நீதிமொழிகள் 27:17)

நாம் ஒருவரோடொருவர் நெருங்கி இருப்பதன் காரணத்தினாலே, உராய்வுடன் ஏற்பட வாய்ப்புண்டு. இதை மேற்கொள்வது ஒரு சவாலாகும். எடுத்துக்காட்டாக, நாம் ஒருவரோடு எப்போதும் ஒத்துபோகாத ஒரு நபர் நம்முடைய சபையில் இருக்கலாம். நம்மை ஒருமித்து கட்டக்கூடிய கட்டுகளை அறுத்துவிடாமல் எப்படி காத்துகொள்வது. "ஆகையால், நீங்கள் தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட பரிசுத்தரும் பிரியருமாய், உருக்கமான இரக்கத்தையும், தயவையும், மனத்தாழ்மையையும், சாந்தத்தையும், நீடிய பொறுமையையும் தரித்துக்கொண்டு; ஒருவரையொருவர் தாங்கி, ஒருவர்பேரில் ஒருவருக்குக் குறைபாடு உண்டானால், கிறிஸ்து உங்களுக்கு மன்னித்ததுபோல, ஒருவருக்கொருவர் மன்னியுங்கள். இவை எல்லாவற்றின்மேலும், பூரண சற்குணத்தின் கட்டாகிய அன்பைத் தரித்துக்கொள்ளுங்கள். " (கொலோசேயர் 3:12-14) என்று பவுல் கூறுகிறார். மற்றொரு வார்த்தைகளில் சொல்ல போனால், இயேசு நடந்துகொண்டது போல ஒவ்வொருவரிடமும் இயேசு நடந்துகொண்டதுபோல ஒவ்வொருவரிடமும் நடந்து கொள்ளுங்கள் அவரே இணைக்கக்கூடிய பந்தாக இருக்கிறார்.

ஒவ்வொரு சபையும் பலவிதமான ஜனங்களை கொண்ட கலவையாக உள்ளது. ஆனால் நம்முடைய இருதயங்களை ஒருமித்து கட்டக்கூடிய ஒரு பந்தம் உண்டு - நம் ஒவ்வொருக்கும் தேவன் கொண்டிருக்கும்

அன்பு மற்றும் தேவன் இயேசு, சத்தியம் மற்றும் சத்தியத்தின் மேல் நாம் கொண்டுள்ள பொதுவான அன்பு.

நாம் பெற்றுள்ள உண்மையான தாலந்துகளை நிதானமாக மதிப்பிட கிறிஸ்துவின் சரீரத்திற்குள் ஒரு தைரியம் உண்டாகிறது. தற்பெருமை ஒரு கிறிஸ்தவருக்கு ஆபத்தானது. சில நேரங்களில் சிலர் தங்களுடைய திறமைகளை தகுதிக்கு குறைவாக எண்ணிகொள்ள விரும்புகிறதால், இவர்கள் சத்தியத்திற்கு பயனுள்ள ஊழியக்காரர்களாக இருக்க தகுதி பெற்றிருந்தும் அதில் தோல்வி அடைகிறார்கள். நாம் மற்றவர்கள் பாரம்பரியமாக சுதந்தரித்து வந்த குற்றத்தை காணாமல் விட்டுவிடும் போது நாம் சகோதர அன்பை செயலாற்றுகிறர்வர்களாக இருப்போம். "என் பிள்ளைகளே, வசனத்தினாலும் நாவினாலுமல்ல, கிரியையினாலும் உண்மையினாலும் அன்புகூரக்கடவோம்." (1யோவான் 3:18)

அப்போஸ்தலர் பவுல் பழை ஏற்பாட்டு நீதிமான்களின் மிகப்பெரிய விசுவாசத்தை பற்றி பேசினபின் இப்போது சிறு மந்தையாகிய சபைக்கு சொல்லும் போது,"ஆகையால், மேகம்போன்ற இத்தனை திரளான சாட்சிகள் நம்மைச் சூழ்ந்துகொண்டிருக்க, பாரமான யாவற்றையும், நம்மைச் சுற்றி நெருக்கிநிற்கிற பாவத்தையும் தள்ளிவிட்டு, விசுவாசத்தைத் துவக்குகிறவரும் முடிக்கிறவரு மாயிருக்கிற இயேசுவை நோக்கி, நமக்கு நியமித்திருக்கிற ஓட்டத்தில் பொறுமையோடே ஓடக்கடவோம்;" (எபிரெயர் 12:1) நாம் இந்த ஓட்டத்தை தனிமையில் அல்ல ஒரு சரீரமாக ஓட வேண்டியவர்களாக இருக்கிறோம். நாம் காற்றில் சிலம்பிடுகிறவர்களாக அல்ல. ஆனால் ஒரு சரியான குறிகோல் உடையவரை போல ஓட வேண்டும். (1கொரிந்தியர் 9:26) பரம அழைப்புக்கான பந்தைய பொருள், ஒரு சராசரி கிறிஸ்தவருக்கு சாத்தியமில்லை. இக்காலத்து வாழ்க்கையின் காரியங்களை ஒரு பந்தய சாலையை போல நாம் காணவேண்டும் இந்த ஓட்டபந்தயம் கற்பனையானது அல்ல. இது உண்மையானது, தேவனால் இயக்கப்படுகிறது. அவர் நமக்கு கற்பனைகளை கொடுக்கிறார். நாம் வெற்றி அடையவதற்கு உதவிசெய்கிறார். சபையின் வருங்கால அங்கங்களாக, நம்முடைய வேகத்தை குறைக்கக்கூடிய அல்லது பின்வாங்க செய்யும் காரியங்களை சுமந்து கொண்டு இந்த பரம அழைப்பின் ஓட்டத்தை ஓடுவது பயனற்றதாக இருக்கும். இந்த ஒப்பந்தம் வித்தியாசமானது. இது மேட்டில் ஏறுகிற பந்தயம். இது ஒரு ஓட்டபந்தயம், கால்களை நகர்த்தினால் மட்டும் போதாது சரியான நோக்கத்துடன் ஓட வேண்டும்.

**ஒற்றுமை மற்றும் வேற்றுமை:**

இந்த இரண்டு சொற்களும், வித்தியாசமான இரண்டு சிந்தனைகளை வெளிப்படுத்துகிறது. சமாதானமாக இருப்பது, நம்முடைய சகோதரர்களோடு ஒருமித்திருக்கும் போது கூடுகையின் போது அல்லது ஒருவரை ஒருவர் காணும்போது இசைவாக இருக்கும் சிந்தயை, ஒற்றுமை என்ற வார்த்தை பொருள் கூறுகிறது. (சங்கீதம் 133:1) வேற்றுமையை பற்றி 1கொரிந்தயர் 12:4ம் வசனம் விவரிக்கிறது. "" 1243 லிருந்து வேற்றுமை என்ற வார்த்தை மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. இதற்கு "ஒரு வித்தியாசம், வேறுபாடு, பல்வேறு பலவிதம்" என்று பொருள் "நமக்கு அருளப்பட்ட கிருபையின் படியே நாம் வெவ்வேறான வரங்களுள்ளவர்களான படியினாலே, நம்மில் தீர்க்கதரிசனஞ் சொல்லுகிற வரத்தையுடையவன் விசுவாசப் பிரமாணத்துக் கேற்றதாகச் சொல்லக்கடவன். ஊழியஞ்செய்கிறவன் ஊழியத்திலும், போதிக்கிறவன் போதிக்கிறதிலும், புத்தி சொல்லுகிறவன் புத்திசொல்லுகிறதிலும் தரித்திருக்கக்கடவன்; பகிர்ந்துகொடுக்கிறவன் வஞ்சனையில்லாமல் கொடுக்கக்கடவன்; முதலாளியானவன் ஜாக்கிரதையாயிருக்கக்கடவன்; இரக்கஞ்செய்கிறவன் உற்சாகத்துடனே செய்யக்கடவன்." (ரோம 12:6-8)

சபைகளில் உள்ள வேறுபாடுகள், சத்தியத்தின் உபதேசத்திற்கு சம்மந்தப்பட்டது அல்ல. இது சகோதரர்களின் பல்வேறு திறமைகளையும், செயல்களையுமே சம்மந்தப்படுத்துகிறது. பிரிவுகள் இருக்கும் இடங்களில், ஆவியிலும் நோக்கத்திலும் ஒருமைப்பாடு கடினமாகவே இருக்கும் என்று பவுல் உணர்ந்தார். அதற்காகவே நம்முடைய

சகோதரர்களோடு இணைந்து செயல்படும்போது, அன்பை வெளிப்படுத்த வேண்டும் என்று பவுல் நமக்கு உறுதியாக ஆலோசனை கூறுகிறார். "ஆதலால், கர்த்தர்நிமித்தம் கட்டுண்டவனாகிய நான் உங்களுக்குச் சொல்லுகிற புத்தியென்னவெனில், நீங்கள் அழைக்கப்பட்ட அழைப்புக்குப் பாத்திரவான்களாய் நடந்து, மிகுந்த மனத்தாழ்மையும் சாந்தமும் நீடிய பொறுமையும் உடையவர்களாய், அன்பினால் ஒருவரையொருவர் தாங்கி,சமாதானக்கட்டினால் ஆவியின் ஒருமையைக் காத்துக்கொள்வதற்கு ஜாக்கிரதையாயிருங்கள். உங்களுக்கு உண்டான அழைப்பினாலே நீங்கள் ஒரே நம்பிக்கைக்கு அழைக்கப்பட்டதுபோல, ஒரே சரீரமும், ஒரே ஆவியும் உண்டு; ஒரே கர்த்தரும், ஒரே விசுவாசமும், ஒரே ஞானஸ்நானமும்,எல்லாருக்கும் ஒரே தேவனும் பிதாவும் உண்டு; அவர் எல்லார்மேலும், எல்லாரோடும், உங்கள் எல்லாருக்குள்ளும் இருக்கிறவர். " (எபேசியர் 4:1-6) ஒவ்வொரு அங்கத்தினரும் எந்த அளவுக்கு கிறிஸ்து வின் சாயலில் வளர்ச்சி அடைகிறார்களோ, அந்த அளவுக்கு கிறிஸ்துவின் சரீரத்தில் உண்மையான ஒற்றுமை வளர்ச்சி அடையும்,நாம் ஒவ்வொருவரும் முதலில் நம்முடைய இருதயத்தை தேட வேண்டும். "கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே சகல ஞானத்தோடும் பரிபூரணமாக வாசமாயிருப்பதாக; சங்கீதங்களினாலும் கீர்த்தனைகளினாலும் ஞானப்பாட்டுகளினாலும் ஒருவருக்கொருவர் போதித்துப் புத்திசொல்லிக்கொண்டு, உங்கள் இருதயத்திலே கர்த்தரைப் பக்தியுடன் பாடி;" (கொலோசேயர் 3:16) என்று பவுல் நம்மை எச்சரிக்கிறார். அன்பு, முழுமையான கனிவு, தாழ்மை, பரிவு மற்றும் சுயத்தை பலியிடுதல் நம்முடைய ஆண்டவர் நமக்கு முன் வைத்த மாதிரிகள்.

இயேசுவோடு நாம் இருப்பது போல, அவருக்காக அர்ப்பணிக்கப்பட்ட சீஷர்களிடம் நாம் நடந்து கொள்ளவேண்டும். நாம் பின்பற்ற வேண்டிய அவருடைய கட்டளைகளாகிய வார்த்தையை தேவன் அவருடைய பரிசுத்த ஆவியினாலே நமக்கு வெளிப்படுத்தியிருக்கிறார். இந்த கட்டளைகளுக்கு எந்த அளவுக்கு நாம் கீழ்ப்படிகிறோமோ, அந்த அளவுக்கு ஒற்றுமையையும், சமாதானமும், நம்மை ஒருமித்து கட்டக்கூடிய ஆசீர்வதிக்கப்பட்ட கட்டுகளும் நமக்கு உறுதி அளிக்கப்படுகிறது.

சோதனைகளின் மத்தியில் ஆசீர்வாதங்கள்

# உங்கள் ஆசீர்வாதங்களை எண்ணுங்கள்



"என் தேவனாகிய கர்த்தாவே, நீர் எங்கள் நிமித்தஞ்செய்த உம்முடைய அதிசயங்களும் உம்முடைய யோசனைகளும் அநேகமாயிருக்கிறது; ஒருவரும் அவைகளை உமக்கு விவரித்துச் சொல்லி முடியாது; நான் அவைகளைச் சொல்லி அறிவிக்கவேண்டுமானால் அவைகள் எண்ணிக்கைக்கு மேலானவைகள்." (சங்கீதம் 40:5)

**Ryan, Lisa and Rosalia Hangs**

குறிப்பு - லிஸாஹாஸிற்கு, மூளையின் இரத்தத்தமனி விரிவடைதலின் சிதைவினால் கீழ்தண்டுவடச்சவ்வில் இரத்தப்போக்கு ஏற்பட்டு ஏழு ஆண்டுகள் ஆகின்றன. கனடா நாட்டின் தலைசிறந்த நரம்பியல் நிபுணரின் வீட்டிற்கு சிறிது தொலைவில் அவரது பணி இருந்தபோதிலும் கிருபையாக, காத்தர் காரியத்தை விளக்கினார். லிஸா அவர்கள் மறுபடியும் அடிபப்டை வேலைகளைக் கற்றுகொள்ள வேண்டியிருந்தது. (எ. கா. முழுங்குதல், பேசுதல், நடத்தல்...) தற்சமயம் அவர்களுக்கு குறிப்பிட்ட சக்தியும், இயக்கம் மாத்திரம் இருக்கிறது. இருந்தபோதிலும், அவர் பணி ஓய்வில் மகிழ்ச்சியாகவும், வீட்டில் சுறுசுறுப்பாகவும் இருக்கிறார். லிஸா குடும்பத்தினர் எழுதும்போது, "தேவன் நல்லவர் மேலும் இந்த அனுபவத்தின் போது எங்களுக்கு பல்வேறு வகையான உதவிகளைச் செய்திட்ட அருகில் மற்றும் தொலைவில் உள்ள சகோதரர்களுக்கு எவ்வளவு நன்றி கூறினாலும் போதாது, நாங்கள் நிச்சியமாக கர்த்தரின் மக்களின் மத்தியில் தான் உள்ளோம்." என்கின்றனர்.

நம்முடைய நற்குணங்களையும் தேவன் மேல் உள்ள விசுவாசததை வளர்ச்சி அடைய செய்வதற்காக மட்டும் அல்லாமல், இனி கிறிஸ்துவின் மணவாட்டியாக செய்யக்கூடிய ஒப்புவரவாக்குதலின் வேலையில் பங்களிப்பதற்கு நம்மை தகுதிப்படுத்தி நிரூபிப்பதற்காகவும், தேவன் நமக்கு கடினமான அனுபவங்களை அனுமதிக்கிறார். (யோவான் 15:8, ரோமர் 5:3-4, 1பேதுரு 1:7 யாக்கோபு 1:2-4, லூக்கா 12:32, கொலோசேயர் 1:12, வெளி 20:6) கொடுக்கப்படக்கூடிய பெரிய பரிசாகிய அழியாமையை பொறுத்தவரையில், நம்முடைய உத்தமத்தை சோதிக்கும் படிக்கு நமக்கு பல்வேறு பரிட்சைகளை எதிர்பார்த்திருக்கும்படிக்கு தொடர்ந்து நமக்கு சொல்லப்படுகிறது. (மத்தேயு 10:25, யோவான் 15:20, 16:33, அப்போஸ்தலர் 14:22, 11தீமோத்தேயு 3:12, 1பேதுரு 1:6-7, 4:12, 5:10) கூடுதலாக இந்த சோதனைகள், மனுஷனுக்கு பொதுவானது என்று நமக்கு தெரியும். மேலும் நம்முடைய இரக்கமுள்ள பிதா, நம்முடைய விசுவாசம் முறிக்கப்படும் அளவுக்கு எந்த சோதனையையும் அவர் அனுமதிக்கமாட்டார். (1கொரிந்தியர் 10:13) ஆகவே, நம்முடைய உச்சகட்டமான ஆவிக்குரிய நன்மைக்காக நமக்கு வரும் எல்லாசோதனைகளிலும் தேவன் மேல் அதிகாரத்தின் மேல் விசுவாசம் வைத்து ஜெயம் பெறலாம்.

**நம்முடைய சமாதானம் தேவனிடத்திலிருந்து வருகிறது:**

நம்முடைய தேவன் மேலுள்ள விசுவாசத்தின் அடிப்படையில், நம்முடைய மனம் இணைபிரியாமல் இருந்தால், அது நம்மை பரிபூரண சமாதானத்திற்குள் வைத்திருக்கும். ஏனெனில், நாம் ஆண்டவர் மேல், நம்பிக்கையுள்ளவர்களாக இருக்கிறோம். (சங்கீதம் 40:4, ஏசாயா 26:3, ரோமர் 15:13, 11தெசலோனிக்கேயர் 3:16) "நீங்கள் ஒன்றுக்குங் கவலைப்படாமல், எல்லாவற்றையுங் குறித்து உங்கள் விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோடே கூடிய ஜெபத்தினாலும் வேண்டுதலினாலும் தெரியப்படுத்துங்கள். அப்பொழுது, எல்லாப் புத்திக்கும் மேலான தேவசமாதானம் உங்கள் இருதயங்களையும் உங்கள் சிந்தைகளையும் கிறிஸ்து இயேசுவுக்குள்ளாகக் காத்துக்கொள்ளும்." (பிலிப்பியர் 4:6,7) என்று அப்போஸ்தலர் கூறுகிறர். இந்த உலகத்தில் அநேக குழப்பங்கள் நடந்தாலும், நமக்கு மட்டும் அல்ல, இந்த முழு மனுக்குலத்திற்கும்

தேவன் ஒரு திட்டத்தை வைத்திருக்கிறார் என்று நமக்கு நன்கு தெரிந்திருப்பதினால், இந்த பூமியின் மேல் நாம் மட்டுமே மிகுந்த சமாதானமுடைய ஜனங்களாக இருக்க முடியும். நம்முடைய சமாதானம், பொறுமையை அடிப்படையாகவோ, பகட்டான நடக்கையின் அடிப்படையிலோ அல்லது அலட்சியமான மனநிறைவினால் வரும் சமாதானம் அல்ல. இது தேவன் மேல் கொண்டிருக்கும் நம்பிக்கையினாலும், நம்முடைய வாழ்க்கையில் அவருடைய வல்லமை செயல்படுவதினால் வரும் சமாதானமாகும். (சங்கீதம் 91, ரோமர் 8:15,31, கலாத்தியர் 4:6)

சோதனைகளை சந்திக்கும் போது, இப்படிப்பட்ட தலைசிறந்த சமாதானம், மற்றவர்களுக்கு விநோதமாக தோன்றலாம், ஆனால் தேவன் மேல் நாம் கொண்டிருக்கும் இந்த சுத்திகரிக்கப்பட்டிருக்கும் விசுவாசமே நம்முடைய அழைப்பையும் தெரிந்துகொள்ளுலையும் உறுதிப்படுத்துவதற்கு மிக அவசியம். (எபேசியர் 6:15, பிலிப்பியர் 2:15, 1பேதுரு 2:9, 11பேதுரு 3:11 ரோமர் 12:2, எபிரெயர் 11:6, 1தெசலோனிக்கேயர் 4:3, யாக்கோபு 1:6-8) தேவன் மேல் நாம் கொண்டுள்ள விசுவாசத்தின் அஸ்திபாரத்தின் மேல் கட்டப்பட்டு, வளர்ச்சி அடையவேண்டிய ஏழு கிறஸ்துவ நற்குணங்களை அப்போஸ்தலனாகிய பேதுரு இங்கு வரிசைப்படுத்துகிறார். (11பேதுரு 1:5-7) இதன் விளைவாக, தேவனோடும், நம்முடைய கிறிஸ்துவ நடத்தையின் போது நம்முடைய ஆவிக்குரிய வளர்ச்சியை ஆதரவளிப்பதோடு ஒரு தொடர்பை தக்க வைப்பதற்கு அசையா விசுவாசம் மிக முக்கியம் இந்த வரிசையில் பேதுரு பயத்தை உள்ளடக்கவில்லை, ஏனெனில், தேவனிடம் நாம் கொண்டிருக்கும் விசுவாசத்திற்கு பயம் ஒரு தீங்காகும் இயற்கையாகவே , நம்முடைய புது சிருஷ்டியின் வளர்ச்சியை தடைசெய்யும் மூன்று எதிராளிகளாகிய பழைய சிருஷ்டி, உலகம், சாத்தானோடு தொடர்புடைய பயமும் நம்முடைய சோதனையுடன் வரும் .

**பயம் நம்முடைய விசுவாசத்தை குறைவுக்கு உட்படுத்தும்**

**உபாயத்தை தொடர்ந்து தீர்வுகாணாத உணர்வுகளின் தொடர் செயலை குறித்து மனநோய் நல மருத்துவரின் குறிப்பு :**

- முதலில், சந்தேகம், பிறகு கவலை இறுதியாக பயம். சமாதானத்திற்கும் பயத்திற்கும் ஒரு தலைகீழான தொடர்புண்டு. ஒன்று கூடும்போது ஒன்று குறையும். நாம் பெற்றுள்ள விழுந்துபோன நிலைமையில், நாம் அனைவரும் பயத்திற்கு உட்படுத்தப் பட்டிருக்கிறோம். ஆயினும், மிக மோசமான நிலைக்கு போகும் முன்னே, பயத்தை எவ்வளவு சீக்கிரம் போக்க முடியுமோ அவ்வளவு சீக்கிரம் போக்க வேண்டும் என்பதே மிக அவசியம். ஏனெனில் பயம் நாம் தேவனோடு கொண்டிருக்கும் உறவை பாதித்துவிடும். மேலும் அவர் நமக்குள் செய்யும் சுத்திகரிப்பின் வேலைகளை தடைசெய்யும். (பிலிப்பியர் 2:13, கொலோசேயர் 1:12, யாக்கோபு 1:4) நம்முடைய பழை சிருஷ்டி தீர்வுகாணாமல் இருக்கும் போது பயம் விருத்தியாகும். அதற்குபின் தேவன் மேல் நாம் கொண்டிருக்கும் சயநலமற்ற விசுவாசத்திற்கு பதிலாக சுயநலமான பயம் இடம் பிடிக்கும். இப்படிப்பட்ட உணர்வுள்ள செயல்கள் அடிப்படையாக தேவனுக்குள்ளிருக்கும் வளர்ச்சியற்ற விசுவாசத்தை காட்டிகொடுக்கும். (அதாவது சூழ்நிலையை சமாளிக்க சுயத்தின் மேல் சார்ந்திருப்பது) எனவே, நம்முடைய மனநிலை நமது நம்பிக்கையை எங்கே வைத்திருக்கிறது என்பது நேரடியாக தொடர்புடையது. - பாதுகாப்பு (தேவனுடைய ஆற்றலில் சமாதானம்) அல்லது பாதுகாப்பற்ற (நம்முடைய ஆற்றலின் மேல் உள்ளபயம்) நம்முடைய தன்னிறைவமைதியை தக்கவைத்துகொள்ள நாம் ஒழுக்கத்தோடு இருப்பது அவசியம் மேலும் சோதனையின் மத்தியில் அறிவாற்றலோடு நம்முடைய உணர்ச்சிகளை கட்டுபாட்டிற்குள் வைத்திருக்கவேண்டும். (நீதிமொழிகள் 16:32, நீதிமொழிகள் 29:11, யாக்கோபு 1:19-20, 11தீமோத்தேயு 1:7)

**ஒரு சோதனையை மேற்கொள்ளுதல்:**

தீ பிடிக்கும்போது அதன் புண்படுத்துகிற பாதிப்புகளை குறைப்பதற்கு தேவையான மூன்று படிகளை நம்மில் அநேகர் சிறுவயதில் கற்றிருந்திருக்கிறோம். நில், கீழேவிழு மற்றும் உருண்டுசெல் (stop,drop and roll) நமக்கு நிஜமாக வரக்கூடிய சோதனைகளை நாம் மேற் கொள்வதற்கும் இந்த உருவகம் ஒத்திருக்கிறது. உடல்ரீதியானாலும், மனரீதியானாலும் எந்த அளவுக்கு

சோதனைகள் வருகிறதோ, அதை பொருள்படுத்தாமல், பயத்தினால் நம்முடைய காயப்பட்ட பாதிப்புகளை குறைப்பதற்கு மேல் கூறப்பட்டுள்ள அந்த மூன்று படிகளே வல்லமையுள்ள மருந்தாகும்.

**நில்** - இந்த சோதனையை எவ்வாறு வெற்றி கொள்ள, போகிறோம் என்று சிந்திப்பதற்கு இந்த உலகத்தின் ஞானத்தை பயன்படுத்துவதை உடனடியாக நிருத்திவிடுங்கள். இப்படியாக நிறுத்திவிட்டால் பிரளையங்களை உண்டாக்கும் உங்களுடைய பல்வேறு கற்பனையை இது தடுக்கும் அல்லது இந்த சூழ்நிலை காணக்கூடிய நம்பிக்கையற்ற மனநிலையை தவிர்கும். ஒரு வேலை தேவன் மேல் உள்ள நம்பிக்கை பலவீனப்படுத்த க்கூடியதாக இருக்கலாம். (ஏசாயா 55:8, நீதிமொழிகள் 3:5-6, 11கொரிந்தியர் 10:5, கொலோசேயர் 3:2, யாத்திராகமம் 14:12-13, எண் 13:33, 11கொரிந்தியர் 3:5, 4:7, எபிரெயர் 10:35)

**கிழேவிழு** (drop) - சீக்கிரமாக முழங்காலில் நின்று, அந்த குறிப்பிட்ட சூழ்நிலைக்காகவும், ஆண்டவருடைய வழிநடத்துதலுக்காகவும், இந்த அனுபவத்தை சகிப்பதற்கு தேவையான திடனளிக்கும் விசவாசத்திற்காக ஜெபியுங்கள். (சங்கீதம் 34:4, 139:23-24, எபிரெயர் 4:16, யாக்கோபு 5:13, 1பேதுரு 5:7-8)

**உருண்டு செல்**–சோதனை மேற்கொள்ளவதற்கு தேவன் "தப்பித்து கொள்ளக்கூடிய போக்கை "உண்டுப்பண்ணும் வரையில் எது வந்தாலும் சரி, என்று அதோடுகூட உருண்டு செல்வது மிக அவசியமானது என்று அப்போஸ்தலராகிய பவுல் 1கொரிந்தியர் 10:13ல் கூறுகிறார். (ekbasis, strongs G1545, ஒரு வெளியேறுதல்) நம்முடைய உன்னதமான ஆவிக்குரிய நன்மைகளுக்காக தேவன் இந்த சோதனைகளை அனுமதித்திருக்கிறார் என்ற உண்மையை விசுவாசத்தோடு ஏற்றுகொள்ளும்போது, நம்முடைய பயத்தை நாம் மேற்கொண்டு, நம்முடைய தேவைகளுக்கு ஏற்ற, போதுமான அளவு கிருபையை தேவன் நமக்கு அருளுவார் என்பதை அறிந்து, நம்முடைய வாழ்க்கை பாதையில் தொடரலாம். (11கொரிந்தியர் 12:8-10) ஆயினும் ஆவி உற்சாகமுள்ளது, மாம்சமோ பலவீனமானது. (மத்தேயு 26:41) துரதிஷ்டமாக, நாம் அனைக்க முயற்சிக்கும் பயன் நிறைந்த சூழ்நிலை முன்னேறி செல்வதற்கு தேவைப்படும் விசுவாசத்தை பெறும்பாலும் அழித்துவிடுகிறது. மேலும் இந்த அனுபவத்தினாலே சரியாக பயிற்சி பெறக்கூடிய நம்முடைய ஆற்றலை தடைசெய்யலாம்.

**இந்த காரியங்களை சிந்தித்து கொள்ளுங்கள்:**

நம்முடைய மூளை இரண்டு முழுமைபெற்ற அரையுருண்டை வடிவம் உள்ளதாக, பூரணமாக வடிவமைக்கப்பட்டிருந்தாலும், நம்முடைய விழுந்துபோன பயத்தின் உணர்வுகளை வலது பக்கத்தின் அரையுருண்டை செயல்படுத்துகிறது. (பண்பு சார்ந்த அக எண்ணங்கள் சார்ந்த மற்றும் உடற்கூற்றமைப்புக்கு ஏற்றவாறு சிந்தித்தல்) நம்முடைய தீர்மானங்களை ஆதரிக்கும் முறைமையின் பலவீனமாக மிகுதி ஆகும். (சங்கீதம் 139:14, நீதிமொழிகள் 4:23, எரேமியா 17:9) ஆயினும், ஆண்டவர் நம்மை உண்மையை அடிப்படையாக கொண்ட "தரமான கட்டுபாட்டின்" நுட்பத்தை இடது புற அரை உருண்டையில் வைத்திருக்கிறார் அவருக்கே நன்றி (அளவு, நோக்கம் மற்றும் உடல் உறுப்பியல் சார்ந்த பகுத்தறிவான சிந்தனை) நம்முடைய விசுவாசத்தை அதிகரிக்க இதை நாம் பயன்படுத்தலாம். ஆகவே, நம்முடைய பயன் நம்மை மேற்கொள்வதற்கு முன் அதை நாம் தடுத்து விடலாம் அல்லது அதன் வீரியத்தை குறைத்து விடலாம். நம்முடைய இடது பக்க அரை உருண்டை மூளையை செயல்படுத்துவதற்கு, நாம் தியானம் செய்யலாம். இது எவ்விடத்திலும் எந்நேரத்திலும் கிடைக்கக்கூடியது. (எபேசியர் 6:17, பிலிப்பியர் 4:6, கோலோசேயர் 3:2) தியானம் செய்யும் போது, நம்முடைய சிந்தைகளை காலியாக வைக்க வேண்டும் என்று மனித ஞானம் பரிந்துரைப்பது போல் இராமல், நம்முடைய சிந்தையை நமக்காக தேவனுடைய அன்பை உறுதிப்படுத்தும் விசுவாசத்தை உருவேற்றும் சத்தியங்களினால் நிரப்பவேண்டும் என்று வசனங்களிலிருந்து நாம் அறிவுரை பெறுகிறோம். நிகழ் கால சூழ்நிலையை நிலையை பற்றிய ஊகிக்கக்கூடிய எதிர்மறையான சிந்தனைகள் நமக்குள் இடம் பெறாதபடிக்கு, நம்மை உற்சாகப்படுத்தக்கூடிய சத்தியத்தின் திரள் நம்முடைய சிந்தையை உடனடியாக நிரப்புவதற்கு

எப்போதும் ஜாக்கிரதையுள்ளவர்களாக இருக்கவேண்டும்.

பிலிப்பியர் 4:8ல் "சிந்தித்து" என்ற வார்த்தையின் கிரேக்கசொல் logizomai (,strongs G3049) ஆகும். இதற்கு உண்மையை எடுத்துகொள்ளுதல் என்று பொருள். உண்மையான செய்திகள் மட்டுமே கணக்கிடப்பட்டு கவனத்தில் கொள்ள வேண்டும். ஆகவே எவ்வளவு அதிகமான ஆசீர்வாதங்களை குறித்து நாம் தியானிக்கிறோமோ அவ்வளவு சீக்கிரத்தில் தேவன் நம்மை நேசிக்கிறார் என்றும் நம்மை அக்கறையோடு கவனிப்பதற்கு தலையான தனியுரிமையை பெற்றிருக்கிறார் என்ற சத்தியத்தை நன்றியோடு ஏற்றுக்கொள்ளுவோம். தக்க சான்று இல்லாமல் நம்புகிற இயல்பின் அடிப்படையில் இராமல், எந்த சோதனைகளையும் முயன்று வெற்றிகொள்ள தேவன் நமக்கு உதவி செய்வார் என்ற அறிவின் அடிப்படையில் விசுவாசத்தை பெற்றிருக்கிறோம். (சங்கீதம் 108:13, ரோமர் 8:37, 1கொரிந்தியர் 15:57, பிலிப்பியர் 4:13) இந்த காரணத்திற்காகவே நம்முடைய வாழ்க்கையில் தேவனுடைய ஆசீர்வாதங்களின் அளவு மதிப்பிடுவதற்கு நம்முடைய ஆய்வுக்கட்டுரை மற்றும் "count your Blessing" என்ற பாடல் நமக்கு நினைப்பூட்டுகிறது. நமக்கான, தேவனுடைய முழுமையான தெய்வாதீனமான பராமரிப்பு பற்றிய உண்மை நிலையோடு, நமது சோதனையை வேறுபடுத்துவதன் மூலமாக , நமது புறநிலை சிந்தனை அகநிலை சிந்தனையை விட மேலோங்கியிருக்கும். இதனால், சந்தேகம் கவலை, மற்றும்/ அல்லது வெளிப்படுத்தப்படும் பயம் ஆகியன திரும்ப உறுதிப்படுத்தப்படும். சிறந்த விற்பனையான பல சுய உதவி புத்தகங்களில், விவிலிய கொள்கையான நேர்மறையான சிந்தனையின் வல்லமையைப் பற்றி முன்வைக்கப்பட்டு வெளியிடப்பட்டிருக்கின்றன. மாறாக சுய - நம்பிக்கை அல்லது தன்நம்பிக்கை அடிப்படையாகக் கொண்டு வெளியிடப்படவில்லை. இந்த முறையின் மூலம், நாம் அனைத்தையும் நிரூபிப்பத்தினாலும், நமது ஆவிக்குரிய நலனுக்காக தேவன் காரியத்தை தயாராகவும் சித்தமுள்ளவராகவும் வல்லமையுள்ளவராகவும் உள்ளார் என்பதைப்பற்றியதான நன்மைகளைப் பற்றிக்கொள்வதின் வாயிலாகவும் நாம் நமது பயத்தின் ஆவியை தனிக்கின்றோம். (யோசுவா 21:45, சங்கீதம் 136, 11கொரிந்தியர் 1:20 , 1தெசலோனிக்கேயர் 5:21)

**தேவனுடைய விசுவாசத்தின் மேல்நம்முடைய நிருபணம்:**

தேவனுடைய பிரமாணத்தை பொருத்தவரையில், எந்த ஒரு கருத்தைப் பற்றிய சத்தியத்திற்கும், குறைந்த பட்சம் இரண்டுசாட்சிகள் இருப்பது தெளிவாகிறது. (உபாகமம் 19:15, 11கொரிந்தியர் 13:1) தேவன் நம் பட்சத்தில் இருந்தால் நாம் பயப்படுவதற்கு எதுவும் இல்லை, என்பதற்கான பல சாட்சிகள் பதிவு செய்யப்பட்டிருப்பதினால் நாம் அனைவரும் ஆசீர்வதிக்கப்பட்டவர்களாக இருக்கிறோம். (ஏசாயா 41:10-13) இயேசு (லூக்கா12:22-31) மோசே (உபாகமம் 3:22, 31: 6 ,8) யோசுவா(யோசுவா 1:9) தாவீது (1சாமுயேல் 17:37) சாலொமோன் (நீதிமொழிகள் 29:25) ஏசாயா (ஏசாயா 35:4, 32:12) எரேமியா (17:7,8) பவுல் (ரோமர் 8:15), பேதுரு (1பேதுரு 3:14) மேலும், சகோதரர்களின் வாழ்க்கையில் தேவனுடைய அற்புதமான முன்னேற்பாடான பராமரிப்பை குறித்து சாட்சிகளை நாம் அடிக்கடி கேட்டு கொண்டிருக்கிறோம். இவைகள் மேலும் விலைமதிக்க முடியாத இணையான நிரூபணங்களாகும். (ரோமர் 14:19, 1தெசலோனிக்கேயர் 5:11, யூதா 1:20)

ஆகிலும் தேவனுடைய குறைகூற முடியாத நம்பிக்கைக்குரியஅதிகமான சாட்சிகள், சாட்சியாளித்தாலும், ஒரு சோதனையின்போது நம்முடைய விழுந்துபோன பயங்களின் உணர்வை திருப்திப்படுத்துவதற்கு நம்முடைய விசுவாசத்தை உறுதிப்படுத்தும் படிக்கு நம்முடைய சொந்த கை எழுத்தை வாசிப்பதை காட்டிலும் சிறந்த சாட்சி வேறொன்றும் இல்லை. எபிநேசரின் புத்தக்கத்தில் (இதுவரையில் ஆண்டவர் எனக்கு உதவினார்) நம்முடைய அனுபவங்களை பாதுகாத்து, நம்முடைய சொந்த வாழ்க்கைகளில் கஷ்டங்களிலிருந்தும் ஆண்டவர் நம்மை பல தடவைகள் இரட்சித்ததை நாம் விவரிப்பதே தகர்க்க முடியாத ஆதாரங்களும், நம்முடைய பயத்திற்கு பயன்ளிக்கக்கூடிய பரிகாரமாக உள்ளது. நம்முடைய கசியும்

பாத்திரங்களின் சுபாவத்தை பொருத்தவரை, எபிநேசரின் புத்தகம், நம்முடைய நூலகத்தில், மிக முக்கியமான குறிப்பு புத்தகமும், நம்முடைய கிறிஸ்துவ கருவி பெட்டியில் வல்லமையுள்ள கருவியாகவும் இருக்கும். எந்த உள்ளீடும் சிறியது அல்ல, மாறாக, காணுதற்கரிய சின்னஞ்சிறிய அனுதின ஆசீர்வாதங்களின் அமோக எண்ணிக்கையை காண்கையில் வரும் ஆச்சரியம், நிச்சயமாக தேவன் பெரிய காரியங்களையும் மேற்கொள்ளச் செய்வார் என நம்மை மனமேற்கும்படி செய்யும். (சங்கீதம் 103:2, மத்தேயு 6:8, லூக்கா 12:7 , 1கொரிந்தியர் 4:7, யாக்கோபு 1:17) நம்முடைய ஆசீர்வதங்களை எண்ணிப்பார்ப்பதினால் நன்றியுள்ள மற்றும் திருப்தியுள்ள உணர்வை பயிரிடுவதற்கும் இதன் விளைவாக சமாதானமான ஒரு மன நிலையை நாம் பெறுவோம். குறிப்பாக நாம் அறிந்திருக்கக்கூடிய ஆசீர்வாதங்கள் இவைகள் மட்டுமே என்று உணர்ந்து கொள்ளும் போது விசுவாசத்தை அடிப்படையாக கொண்டிருக்கும் சமாதானம் நம்முடைய சுத்திகரிப்புக்கு அவசியம். ஏனெனில், தற்காலிகமான பிரச்சனைகள் இனி ஒரு போதும். பயத்தை அடிப்படையாக கொண்ட பாதிப்புகளை நம்மேல் ஏற்படுத்தாது. (சங்கீதம் 36:5, மத்தேயு 6:30-34, பிலிப்பியர் 4:19, எபிரெய ர் 4:16, 1யோவான் 3:1)

**முடிவுரை:**

நாம் பயப்படக்கூடாது என்று நம்முடைய ஆண்டவராக இயேசு நம்மை தொடர்ந்து ஊக்குவிக்கிறார். (மத்தேயு 10 :28, லூக்கா 12:32, யோவான் 14:27, 16:33, வெளி 2:10) உணர்ச்சிவசப்படும் பயத்திற்கு ஒருவர் கைதியாக இருப்பதில் மகிழ மாட்டார். முரண்பாடாக எந்த நேரத்திலும் நம்மை நாம் விடுதலையாக்கி கொள்வதற்கு நாம் திறவுகோலை பெற்றிருக்கிறோம். ஆனால் அதை பயன்படுத்த நாம் விரும்ப வேண்டும். ஏராளமான நம்பத்தகுந்த சாட்சிகளினால் சாட்சிபெற்று, நம்முடைய வாழ்க்கையில் பல பயணங்கள் கொண்ட ஆசீர்வாதங்களினால் நிரூபிக்கப்பட்ட தேவனுடைய நம்பிக்கைக்குரிய சத்தியத்தின் மேல் கவனம் வைத்தோம் என்றால் நம்முடைய விசுவாசத்தை உறுதி செய்துகொண்டு, சோதனையின் போது, பயமுள்ள சூழ்நிலையிலிருந்து தம்முடைய மனதை விடுதலை ஆக்கி கொள்ளலாம். நித்தியமானதை ஒப்பிடுகையில் வரப்போகிற மகிமைக்காக மரணம் வரையில் விசுவாசமுள்ளவர்களாக இருக்கவேண்டும், நம்முடைய சோதனைகள் உண்மையில் தற்காலிகமானது, மேலும் அவைகள் வரக்கூடிய மகிமைக்கு ஒப்பிடதக்கவைகள் அல்ல. (ரோமர் 8:18, பிலிப்பியர் 3:8 யாக்கோபு 1:12, 1யோவான் 3:2)

நாம் மாம்சத்தில் இருக்கும் வரை, பயமின்றி வாழ முடியாது. ஆனால் மீதியுள்ள நம் வாழ்க்கையில் குறைவாக பயப்படுவதற்கு போராடலாம். இதற்கு இடையில், அப்போஸ்தலராகிய பவுலின் வார்த்தைகளில் நாம் களிகூறலாம். "மேலும் காணப்படுகிறவைகளையல்ல, காணப்படாதவைகைளை நோக்கியிருக்கிற நமக்கு, அதிசீக்கிரத்தில் நீங்கும் இலேசான நம்முடைய உபத்திரவம் மிகவும் அதிகமான நித்திய கனமகிமையை உண்டாக்குகிறது. ஏனெனில், காணப்படுகிறவைகள் அநித்தியமானவைகள், காணப்படாதவைகளோ நித்தியமானவைகள்." (11கொரிந்தயர் 4:17,18)



# நன்றி ஏறெடுத்தலுக்கு ஓர் சங்கீதம்

"கர்த்தர் என் மேய்ப்பராயிருக்கிறார்; நான் தாழ்ச்சியடையேன்......என் ஜீவனுள்ள நாளெல்லாம் நன்மையும் கிருபையும் என்னைத் தொடரும்; நான் கர்த்தருடைய வீட்டிலே நீடித்த நாட்களாய் நிலைத்திருப்பேன். "(சங்கீதம் 23:1-6)

Ray Charlton

"கர்த்தர் என் மேய்ப்பராக இருக்கிறார்" தன்னுடைய வாழ்நாள் முழுவதும் யெகோவா தேவனை தன்னுடைய பொறுப்பாளராகவும் வழிகாட்டியாகவும் பெற்றிருந்த ஆசீர்வாதத்தை தாவீது நினைவுகூறுகிறார். இதை ஏசாயா பிரதிபலிக்கிறார். "நான் சமாரியாவுக்கும், அதின் விக்கிரகங்களுக்கும் செய்ததுபோல், எருசலேமுக்கும் அதின் விக்கிரகங்களுக்கும் செய்யாமலிருப்பேனோ என்று சொல்லுகிறான்." (ஏசாயா 10:11)

"நான் தாழ்ச்சி அடையேன்" ஒரு துரோகியாகவும் சட்டத்தை மீறினவருமாக பழிசுமத்தப்பட்ட தாவீது சவுலின் ஈட்டியிடமிருந்து விரைந்தோடினார். (1சாமுயேல் 21) தன்னுடைய ஜனங்களுக்கு அப்பம் தேடி செல்கையில், பிரதான ஆசாரியனிடம் ஐந்து அப்பங்களை வேண்டி, ஆசரிப்பு கூடாரத்தின் பரிசுத்த ஸ்தலத்திற்குள் சென்றார் "அதற்கு அவர்: தாவீதுக்கு உண்டான ஆபத்தில், தானும் தன்னோடிருந்தவர்களும் பசியாயிருந்தபோது, அவன் அபியத்தார் என்னும் பிரதான ஆசாரியன் காலத்தில் செய்ததை நீங்கள் ஒருக்காலும் வாசிக்கவில்லையா? அவன் தேவனுடைய வீட்டில் பிரவேசித்து, ஆசாரியர்தவிர வேறொருவரும் புசிக்கத்தகாத தெய்வசமுகத்து அப்பங்களைத் தானும் புசித்துத் தன்னோடிருந்தவர்களுக்கும் கொடுத்தானே என்றார். "( மாற்கு 2:25-26) என்று இயேசு கருத்துரைத்தார். தாவீதின் செயலை, தேவன் தந்திட்ட விசுவசம் என்று அவர் ஒப்புதல் அளித்தார். நமக்கும் தேவன் ஏற்பாடு செய்து கொடுப்பார். (மத்தேயு 6:31-33)

"அவர் என்னை புள்ளுள்ள இடங்களில் மேய்த்து அமர்ந்த தண்ணீர் அண்டையில் நடத்துவார்" ஏழு வருடங்களாக தாவீது அனுபவித்த உபத்திரவங்களில் தேவன் அவருக்கு அடைக்கலமாக இருந்தார். அவர் நமக்கும் அடைக்கலமானவர். "வருத்தப்பட்டுப் பாரஞ்சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள்; நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்." (மத்தேயு 11:28) "அன்றியும், அவர் என்னை நோக்கி: ஆயிற்று, நான் அல்பாவும் ஓமெகாவும், ஆதியும் அந்தமுமாயிருக்கிறேன். தாகமாயிருக்கிறவனுக்கு நான் ஜீவத்தண்ணீரூற்றில் இலவசமாய்க் கொடுப்பேன்." (வெளி 21:6)

"அவர் என் ஆத்துமாவை தேற்றி" நியாயப்பிரமாணத்தின் கண்டனத்திலிருந்து விடுதலை பெற்ற ஒரு வாழ்க்கையை பற்றி பேதுரு பிரசங்கித்தார். "ஆனபடியினாலே கர்த்தருடைய சந்நிதானத்திலிருந்து இளைப்பாறுதலின் காலங்கள் வரும்படிக்கும், முன்னே குறிக்கப்பட்ட இயேசுகிறிஸ்துவை அவர் உங்களிடத்தில் அனுப்பும்படிக்கும்," (அப்போஸ்தலர் 3:19)

"தம்முடைய நாமத்தினிமித்தம் என்னை நீதியின் பாதையில் நடத்துகிறார். "அதிகாலையில் உமது கிருபையைக் கேட்கப்பண்ணும், உம்மை நம்பியிருக்கிறேன், நான் நடக்கவேண்டிய வழியை எனக்குக் காண்பியும்; உம்மிடத்தில் என் ஆத்துமாவை உயர்த்துகிறேன்.கர்த்தாவே, என் சத்துருக்களுக்கு என்னைத் தப்புவியும்; உம்மைப் புகலிடமாகக் கொள்ளுகிறேன். உமக்குப் பிரியமானதைச் செய்ய எனக்குப் போதித்தருளும், நீரே என் தேவன்; உம்முடைய நல்ல ஆவி என்னைச் செம்மையான வழியிலே நடத்துவாராக. கர்த்தாவே, உம்முடைய நாமத்தினிமித்தம் என்னை உயிர்ப்பியும்; உம்முடைய நீதியின்படி என் ஆத்துமாவை இடுக்கத்திற்கு நீங்கலாக்கிவிடும்." (சங்கீதம் 143:8-11) என்றும் தாவீது ஜெபித்திருக்கிறார்.

"நான் மரண இருளின் பள்ளத்தாக்கில் நடந்தாலும், நான் பொல்லாப்புக்கு பயப்படேன், தேவீர் என்னோடுகூட இருக்கிறீர். உமது கோலும் தடியும் என்னை தேற்றும்." நம்பிக்கையிழந்த சூழ்நிலைகளிலும், மரணத்திற்கு ஏதுவான துக்கங்கள் அல்லது கஷ்டங்களிலும், தேவன் நம்மை தேற்றுவார் என்று உறுதியோடிருக்கலாம். (சங்கீதம் 16:8, ஏசாயா 43:2)

" என் சத்துருக்களுக்கு முன்பாக, நீர் எனக்கொரு பந்தியை ஆயத்தப்படுத்தி, என் தலையை எண்ணெயால் அபிஷேகம் பண்ணுகிறீர், என் பாத்திரம் நிரம்பி வழிகிறது." அபிஷேக தைலத்தினால் அடையாளப்படுத்தப்படும் தாவீது பெற்ற தெய்வீக இரக்கம் சத்துருக்கள் சூழ்ந்திருந்தாலும் ,தேறுதலும், மகிழ்ச்சியும் அளிக்கிறது. தாவீது என்னால் தேர்ந்தெடுக்கப்பட்டவர் என்று சாமுயேலிடம் தேவன் மறுபடியும் உறுதிப்படுத்தினதினால் சவுல் இஸ்ரயேலுக்கு இராஜாவாக இருந்த போதிலும், சாமுயேல் தாவீதை அபிஷேகித்தார். (1சாமுயேல் 16:7)நாம் இந்த தீமையான உலகத்தில் கடந்து செல்கையில், நம்முடைய மாம்சத்தினாலும், பிசாசினாலும் துன்பப்படும்போது நாம் பரிசுத்த ஆவியை பெற்றிருக்கிறோம்.

"என் ஜீவனுள்ள நாள் எல்லாம் நன்மையும் கிருபையும் என்னைத் தொடரும் நான் கர்த்தருடைய வீட்டிலே நீடித்த நாட்களாய் நிலைத்திருப்பேன்." சவுல் இராஜா தாவீதை கொல்வதற்கு தொடர்ந்து முயற்சித்து கொண்டிருந்தாலும், தாவீதுக்கு தேவனுடைய ஆசீர்வாதங்களின் மேல் உள்ள நம்பிக்கை அவருடைய எதிராளிகளை பற்றிய பயம் அவருக்கு அற்றுபோயிற்று. நம்முடைய வாழ்க்கைகளில், ஒவ்வொரு காரியங்களிலும் நம்முடைய பரலோக பிதா கவனமுள்ளவராக இருப்பதினால் நீங்கள் ஒன்றுக்கும் பயப்படவேண்டாம் என்று இயேசு நமக்கு கற்பித்திருக்கிறார். (லூக்கா 12:7)

"நன்மையான எந்த ஈவும் பூரணமான எந்த வரமும் பரத்திலிருந்துண்டாகி, சோதிகளின் பிதாவினிடத்திலிருந்து இறங்கிவருகிறது; அவரிடத்தில் யாதொரு மாறுதலும் யாதொரு வேற்றுமையின் நிழலுமில்லை. அவர் சித்தங்கொண்டு தம்முடைய சிருஷ்டிகளில் நாம் முதற்பலன்களாவதற்கு நம்மைச் சத்திய வசனத்தினாலே ஜநிப்பித்தார்." (யாக்கோபு 1:17-18) முதலாம் உயிர்த்தெழுதலில் நம்முடைய நம்பிக்கைகளை, நாம் கண்டுணரும் வரையில், பரத்திலிருந்து வரும் நன்கொடைகள் நமக்கு ஆறுதல் அளிக்கும். (யோவான் 14:2-3)

# அணு ஆயுத போரின் அச்சுறுத்தல்



"கர்த்தருடைய நாள் இரவிலே திருடன் வருகிறவிதமாய் வரும்; அப்பொழுது வானங்கள் மடமட என்று அகன்றுபோம், பூதங்கள் வெந்து உருகிப்போம், பூமியும் அதிலுள்ள கிரியைகளும் எரிந்து அழிந்துபோம்." (11பேதுரு 3:10)

அண்மையில் வட கொரியா அமெரிக்காவை ஒரு அணுசக்தி போரால் அழிப்பதாக உறுதிப்படுத்தியது. 1950 முதல் 1953வரை இரண்டு நாடுகளுக்கும் இடையே நடந்த கொரியா போரில் வட கொரியா ஜனாதிபதி கிம் ஜோங் வெற்றி பெற்றார். இரண்டாம் உலகப் போருக்கு பிறகு பல நாடுகளில் 2000 திற்கும் மேற்பட்ட அணு ஆயுத சோதனைகள் மேற்கொள்ளப்பட்டது. செப்டெம்பர் மாதம் மலைப்பாங்கான புங்கிஜி -ரி தளத்தில் வட கொரியாவின் நிலத்தடியில் நடந்த குண்டு வெடிப்பு ஒரு சக்தி வாய்ந்த 6.3 அளவிலான அதிர்ச்சியைச் சீனாவில் உணரமுடிந்தது. வெடித்த குண்டு 50 முதல் 120 கிலோ டன் வரை மின் சக்தி வரம்பை கொண்டதாக கருதப்பட்டது. ஒரு 50 கிலோ டன் எடையுள்ள இந்த குண்டு இரண்டாம் உலக போரின் போது ஹிரோஷிமாவை அழித்த குண்டின் அளவை விட மூன்று மடங்கு பெரியது.

அணுவாயுதங்கள் மற்றும் ஆயுதங்கள் தொழில் நுட்பம் அதிகரிப்பதை தடுக்க அணு ஆயுதங்கள் தடை செய்வதற்கான ஒப்பந்தம் 1968ல் கையெழுத்திடப்பட்டது. அணுசக்தி நீக்கம் மற்றும் ஆயுதப் பரவலை தடுப்பது, மற்றும் அணுசக்தியை அமைதிக்காக பயன்படுத்துவதில் அனைவரும் ஒத்துழைக்க வேண்டும் என்பதே அந்த ஒப்பந்தத்தின் முக்கிய குறிக்கோளாய் இருந்தது. அக்டோபர் 2013 வரை 189 அங்கீகரிக்கப்பட்ட மாநிலங்கள் அதன் உறுப்பினராய் உள்ளது. இந்தியா, இஸ்ரயேல் மற்றும் பாகிஸ்தான் - ஆகிய இந்த மூன்று நாடுகளும் இதில் கையெழுத்து இடவில்லை. ஜனவரி 2003ல் கொரியா தான் கையெழுத்திட்டதை விலக்கினர்.

**ஹிரோஷிமா மற்றும் சாகாசாகி:**

எழுபத்தி இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு ஹிரோஷிமா மற்றும் நாகாசாகியை தாக்க அமெரிக்க ஜனாதிபதி ஹபாரி ட்ருமன் உத்தரவிட்டபோது, ஜப்பானில் அணுகுண்டு வெடிப்பால் பேரழிவு ஏற்பட்டது. இரு நகரங்களின் பெரும் பகுதி காணாமற் போனது அதில் கிட்டத்தட்ட 200,000 பேர் உயிர்த்தப்பிய பொழுதும், அதனால் ஏற்பட்ட வெப்பம் மிகவும் தீவிரமாய் இருந்ததால் அங்கிருந்த எல்லாமே மற்றும் எல்லோருமே ஆவியாக்கப்பட்டது. ஹிரோஷிமாவில் வெடித்த பொழுது சிலர் கல் பென்சுகளில் அமர்ந்திருந்தனர். அவர்களின் உட்கார்ந்திருக்கும் உருவத்தின் வெளிப்பாடுகள் மட்டுமே மீதியாய் இருந்தது.

ஹிரோஷிமாவில் குண்டு வெடிப்பின் போது உயிருடன் மீட்கப்பட்ட பத்து நபர்களின் அனுபவத்தை புல் பிரைட் நாஷ்னல் ஜீயோக்கிரபராய் இருக்கம் அரி பெசர் என்பவர் தனது புத்தகத்தில் கூறியுள்ளார். அவர்கள் சாட்சியங்கள் கூறப்படும் அத்தியாயங்களுக்கிடையில் ,இராணுவ பொறியாளராய் இருந்த அரி பெசரின் யூத தாத்தா, ஜப்பானுக்கு எதிராக வீசப்பட்டு அணு குண்டு சோதனையில் உறுப்பினராய் இருந்தார். அரியின் தாத்தா அவர் செய்த செயலைக் குறித்து ஒருபோதும் வருத்தப்படவில்லை என்றாலும், இதுபோன்ற போர்கள் இனி நடக்கக்கூடாது என்று தன் மனதார நினைத்தார்.

ஜப்பானின் குண்டுவெடிப்பின் கதிர்வீச்சிற்கு வெளிப்படுத்தப்பட்ட குழந்தைகளின் இறப்பு விகிதம், ஒன்பது மாதங்களுக்கு பிறகு வானளவாய் உயர்ந்ததாக ஆய்வு ஒன்று கூறுகிறது. நாற்பத்தி மூன்று சதவீதம் கருத்தரித்திரிந்த பெண்களின் கருக்கள், தன்னிச்சையாக, கருக்கலைப்பு, பிறப்புறுப்பு அல்லது குழந்தை இறப்பு போன்ற ஏதோ ஒன்றின் மூலம் உண்டான இறப்புகள் அனைத்தும் "துன்பங்கள் இல்லாமல் உண்டாயின" என்று இந்த வெடிகுண்டை உருவாக்கிய மன்ஹன்த்தன் திட்டத்தின் இயக்குனர் ஜெனரல் லெஸ்லி க்ரோகூஸ் ஒரு

காங்கிரஸின் விசாரணையில் வாக்குமூலமாய் கூறினார். ஆனால் அதில் உயிர்ப்பிழைத்தவர்களின் பின்விளைவுகளைப் பற்றி ஒன்றும் கூறவில்லை.

**இன்றைய ஆயுத கிடங்கு:**

ஒரு மதிப்பீடாக 15375 அணு ஆயுதங்களை உலகில் உள்ள ஒன்பது நாடுகள் வைத்துள்ளன. 93சதவீதம் அமெரிக்காவிடமும், ரஷ்யா விடமும் உள்ளது. (விளக்கப்படத்தைப் பார்க்கவும்). மிக உச்சத்தில் இருந்த 1980யின் நடுப்பகுதியிலிருந்து, தற்சமயம் மூன்றில் இரண்டு பங்காக குறைந்துள்ளது. ஆனால் மீதியிருக்கும் குண்டுகள் 1945 ஆம் ஆண்டு வீசப்பட்ட குண்டுகளைவிட சக்தி வாய்ந்தது என்றும், ஆயுதப் பரவல் இல்லாத நாடுகளில் இதன் சக்தி வாய்ந்தது என்றும், ஆயுதப் பரவல் இல்லாத நாடுகளில் இதன் சக்தி இன்னும் அதிகரிக்கும் அபாயம் உள்ளதாக கருதப்படுகிறது.

1948 ஆம் ஆண்டு ஆல்பர்ட் ஐன்ஸ்டீன் இந்த பிரச்சினைக்கு விளக்கம் அளிக்கையில் "நாம் சிந்தித்ததை விட, அணுவினால் ஏவிவிடப்பட்ட ஆற்றல் எல்லாவற்றையும் மாற்றிவிட்டது. நாம் இணையற்ற பேரழிவை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கிறோம்." இதனுடன் கூட அவர் மேலும் கூறுகையில் "மூன்றாம் உலகப்போர் எந்த ஆயுதங்களை கொண்டு போரிடப்படும் என்று எனக்கு தெரியாது, ஆனால் நான்காம் உலகப் போர் குச்சிகளாலும், கற்களாலும் போரிடப்படும்" என்று கூறினார்.

**தேவனின் பார்வை:**

"ஒரு சந்ததி போகிறது, மறு சந்ததி வருகிறது; பூமியோ என்றைக்கும் நிலைத்திருக்கிறது." (பிரசங்கி 1:4) இந்த பூமி ஒருபோதும் அழியாது என்று வேதாகமம் என்று வாக்களிக்கிறது. ஆயினும், இது பல்லாயிரக்கணக்கான அல்லது மில்லியன் கணக்கானவர்களை அழித்துகொண்டிருக்கும் அணுசக்தி நிகழ்வை தடுக்க சாத்தியமாகுமா ?

அப்போஸ்தலராகிய பேதுரு, பூமியின் தற்போதைய ஒழுங்கு சீர் குலைவை விவரிக்கிறார். "பூர்வகாலத்தில் தேவனுடைய வார்த்தையினாலே வானங்களும், ஜலத்தினின்று தோன்றி ஜலத்தினாலே நிலைகொண்டிருக்கிற பூமியும் உண்டாயினவென்பதையும், அப்பொழுது இருந்த உலகம் ஜலப்பிரளயத்தினாலே அழிந்ததென்பதையும் மனதார அறியாமலிருக்கிறார்கள். இப்பொழுது இருக்கிற வானங்களும் பூமியும் அந்த வார்த்தையினாலேயே அக்கினிக்கு இரையாக வைக்கப்பட்டு, தேவபக்தியில்லாதவர்கள் நியாயந்தீர்க்கப்பட்டு அழிந்துபோகும் நாள்வரைக்கும் காக்கப்பட்டிருக்கிறது." (11போதுரு3:5-7) நோவாவின் காலத்தில், எல்லா மாமிசங்களும் அழிந்தபோதிலும் பூமி மட்டும் அழியாமல் இருந்தது. பூமியில் ஒரு புதிய துவக்கத்தை துவங்க பாதுகாக்கப் பட்டது. போல், நோவாவின் பேழை ஆரராத் மலைமீது வந்து தங்கியது. இந்த உலகத்தையும், நோவாவின் உலகத்தையும் பேதுரு ஒப்பிடுகையில், இப்பொழுது இருக்கிற வானமும், பூமியும் ஒழுங்கின் வரிசையை குறிப்பிடுகிறதே தவிர சுற்றியுள்ள சூழலை விவரிக்கவில்லை.

நாடுகளுக்கும் சிந்தாந்தங்களுக்கும் இடையே முரண்பாடுகள் ஏற்படுகையில் அதுவும் உலகளாவிய கொந்தளிப்பு ஏற்படுகையில் அதற்கு அர்மகெதோன் என்ற ஒரு வார்த்தையை பயன்படுத்துகிறோம். நமது செய்தி ஊடகங்கள் ஒரு குறிப்பிடத்தக்க அழிவு என்ற வார்தையை இதனைவிவரிக்க பயன்படுத்துகிறது. சொல்லப்போனால் வேதாகமத்தின் நிறைவு புத்தகமான வெளிப்படுத்தல் புத்தகத்தில் உபயோகபடுத்தப்படும் ஒரு விவிலிய சொல் தான் இந்த அர்மகெதோன். " ராஜாக்களைச் சர்வவல்லமையுள்ள தேவனுடைய மகாநாளில் நடக்கும் யுத்தத்திற்குக்கு சேர்க்கும்படிக்குப் புறப்பட்டுப் போகிறது." (வெளி 16:14) என்று தொடர்புடைய நிகழ்வோடு இணைக்கப்பட்டது. வெளிப்படுத்தல் புத்தகம் ஒரு அடையாள பாஷையில் எழுதப்படட புத்தகம். பல வரலாற்று நிகழ்வுகளை சுட்டி காண்பிக்க பல பெயர்கள் அதில் இடம் பெற்றுள்ளன. ஆகையால் அதை உண்மையான நிறைவேற்றல் என்ற எண்ணம் நம்மிடையே நிலவக்கூடாது.

இந்த வார்த்தை ஒரு எபிரெய வார்த்தை - வெளிப்படுத்தல் புத்தகம் கிரேக்க மொழியில் எழுதப்பட்டது. இது புவியியல் ரீதியாகவும், வரலாற்று

ரீதியாகவும் மேகிதோவின் மலையை சம்பந்தபடுத்துகிறது. மெகிதோ, பண்டைய இஸ்ரயேலில் ஒரு மூலோபாய் நிலையை ஆக்கிரமித்துள்ளது அது மலை நாடுகளில் ஒரு முக்கிய பங்கை ஆக்கிரமித்தது. அது இஸ்ரயேல் மக்களுக்கு ஒரு மிகப்பெரிய போர் புரிந்த இடமாக திகழ்ந்தது. கிதியோனும் அவருடைய 300 ஆட்களும், மீதியானரை வீழ்த்திய இடம். மேலும் பெலிஸ்தியர்களை சவுல் இராஜா அங்கு தான் வீழ்த்தினார். வெளிப்படுத்துதலில் உள்ள அர்த்தங்களை புரிந்துகொள்ள பூர்வ இஸ்ரயேலர் பங்கெடுத்த போர்களை நாம் நினைவுகூற வேண்டும்.

இஸ்ரயேலின் எல்லா போர்களிலும் ஒரே விதமான ஒரு சிறப்பம்சம் இருந்தது. தேவன் அந்த போர்களை எல்லாம் தனது கையில் எடுத்துகொண்டு, அந்த போரில் இஸ்ரயேலின் வெற்றியையும், தோல்வியையும் தனது திட்டத்தின்படி நிறைவேற்றினார். ஆகையால் அர்மெகதோன் என்று குறிப்பிடப்படும் இந்த இறுதி போரானது, தேவன் மிகுந்த ஆர்வம் காட்டும் ஒரு போராகும். அதில் உள்ள அனைத்து நிகழ்வுகளையும் அவரே வழிநடத்துவார். மேலும் தனது நீதியான படைகளுக்கு ஒரு இறுதியான மற்றும் மகத்தான ஒரு வெள்ளியை அளிப்பார்.

இந்த இறுதியான மகாயுத்தத்தில், தீமையானது நிரத்தரமாக தோற்கடிக்கப்பட்டும், மேலும் கிறிஸ்துவின் இராஜ்யம் ஸ்தாபிப்பதற்கான வழிமுறைகளும் உருவாக்கப்படும். ஆகையால் தான் இதனை இவ்வாறு விவரிக்கின்றனர். "அவைகள் அற்புதங்களைச் செய்கிற பிசாசுகளின் ஆவிகள்; அவைகள் பூலோகமெங்குமுள்ள ராஜாக்களைச் சர்வவல்லமையுள்ள தேவனுடைய மகாநாளில் நடக்கும் யுத்தத்திற்குக் கூட்டிச் சேர்க்கும்படிக்குப் புறப்பட்டுப் போகிறது." (வெளி 16:14) இந்த போரின் போது "ஆகையால் நான் கொள்ளையாட எழும்பும் நாள்மட்டும் எனக்குக் காத்திருங்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்; என் சினமாகிய உக்கிர கோபத்தையெல்லாம் அவர்கள்மேல் சொரியும்படி ஜாதிகளைச் சேர்க்கவும், ராஜ்யங்களைக் கூட்டவும் நான் தீர்மானம்பண்ணினேன்; பூமியெல்லாம் என் எரிச்சலின் அக்கினியினால் அழியும்." (செப்பனியா 3:8) நோவாவின் காலத்தில் இருந்தது போல, பழைய, சுயநலமான மனிதனின் ஒழுங்குகளை எல்லாம் யேகோவா தேவன் மாற்றி, ஒரு புதிய ஒழுங்கை ஸ்தாபிப்பார். "அப்பொழுது ஜனங்களெல்லாரும் கர்த்தருடைய நாமத்தைத் தொழுது கொண்டு, ஒருமனப்பட்டு அவருக்கு ஆராதனை செய்யும்படிக்கு, நான் அவர்கள் பாஷையைச் சுத்தமான பாஷையாக மாறப்பண்ணுவேன்." செப்பனியா 3:9)

இவையெல்லாம் செய்வதற்கான முறைகள் உண்டு. இதனால் ஜனங்களோ இந்த பூமியோ அழிந்துபோகாது. உலகம் முழுவதும் ஒரே குரல் ஒலிக்கப்படும் என்று செப்பனியா தீர்க்கதரிசி உறுதியளிக்கிறார். ஒரு தேசத்தை பாதுகாக்க அமைதியின் ஒப்பந்தங்களோ அல்லது அச்சுறுத்தல்களோ தேவைப்படாது. இந்த புதிய ஒழுங்கின் கீழ் எல்லா மனிதர்களும் ஒற்றுமையாக வாழ கற்றுக்கொள்வார்கள். "அவர் ஜாதிகளுக்குள் நியாயந்தீர்த்து, திரளான ஜனங்களைக் கடிந்துகொள்வார்; அப்பொழுது அவர்கள் தங்கள் பட்டயங்களை மண்வெட்டிகளாகவும், தங்கள் ஈட்டிகளை அரிவாள்களாகவும் அடிப்பார்கள்; ஜாதிக்கு விரோதமாய் ஜாதி பட்டயம் எடுப்பதில்லை, இனி அவர்கள் யுத்தத்தைக் கற்பதுமில்லை." (ஏசாயா 2:4)

[redacted]